கோகுலம்

GOKULAM

ஆகஸ்ட் '92 விலை ரூ. 3.00





சல்யூட் ஏற்பாய் பீரங்கி!
சரித்திரம் சொல்வாய் பீரங்கி!


WE ARE IN STEP WITH TIM
TIME
NEW
WAVE!
NEW
STYLE!
NEW
LOOK
NEW
LIFE
action®
SHOES

கோகுலம்

1992 - ஆகஸ்ட் மாத இதழ்
மலர் : 10 இதழ் : 7





அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துகள்!


நாட்டுப்பற்றும், சுதந்திர வரலாற்றையும் அறியாத மக்கள், சுதந்திர நாட்டில் வாழத் தகுதியற்றவர்கள் என்பது ஜார்ஜ் வாஷிங்டனின் கருத்து. அந்நியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த நமது நாட்டின் அடிமை விலங்கை உடைத்து எறிய எவ்வளவு தியாகிகள் எத்தனை ஆண்டு காலம் போராடினார்கள் என்பதை நாம் நினைவில் நிறுத்தி நாட்டை நேசிக்கவும், அதற்காக எந்தவிதத் தியாகத்தையும் செய்யக்கூடிய மனநிலையை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

இந்த ஆகஸ்ட் மாதம் உங்கள் கோகுலத்தை வெளியிடும் நிறுவனம் 'கல்கி' பத்திரிகைக்கு ஐம்பது வயது முடிந்து ஐம்பத்தி ஓராவது ஆண்டில் அடியெடுத்து வைக்கப் போகிறது. 'கல்கி' எப்படியெல்லாம் குழந்தை இலக்கியத்தை வளர்த்து வருகிறது என்பதை இந்த இதழில் வெளியாகும் தனிக் கட்டுரை உங்களுக்கு விளக்கும்.

இந்தப் பொன் விழா ஆண்டில் தனது அலுவலகத்தை சொந்த 'பொன் விழா மாளிகையில்' கல்கி நிறுவனம் மாற்றிக் கொண்டுள்ளது. இது இயங்க உள்ள புதிய அலுவலகத்தின் முகவரி - 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. இனி கோகுலத்திற்குக் கடிதம் எழுதுவோரும், படைப்புகள் அனுப்புவோரும் இந்தப் புதிய முகவரிக்கே அனுப்ப வேண்டும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.


அன்புடன்
(கௌரவ ஆசிரியர்)





உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.









முட்டாள் ராஜகுமாரன்
பக்கம் 45

இந்த இதழில்...


நண்டு எப்படி நகரும்? பக்கம் 81








பறக்கும் பலூன்கள்
பக்கம் 69




பறவை மருத்துவமனை
பக்கம் 51

பீரங்கியாம் பீரங்கி
பக்கம் 94



சாலமன் - ஷீபா, அக்பர்-பீர்பல், தெனாலிராமன், மரியாதை ராமன், நானா பட்னவிஸ் கதைகளைப் போல் முல்லா கதைகள் உலகம் முழுவதும் பரவியுள்ளன. இறவாத புகழ்பெற்றுள்ள இந்த 'முல்லா' கற்பனைப் பாத்திரமா இல்லை உண்மையான வரலாற்று மனிதரா என்பதை அறிய நீங்கள் ஆவலாக இருப்பீர்கள் இல்லையா?



முல்லாவின் முழுப் பெயர் முல்லா நஸ்ரூத்தீன். முஸ்லீம் நாட்டினர் பலரும் இவரைத் தம்முடைய நாட்டைச் சேர்ந்தவர் என்று கூறிக் கொள்கின்றனர். இவர் துருக்கியில் உள்ள எஸ்கிஷஹர் என்ற ஊரில் பிறந்தவர். பெற்றோர்கள் இட்ட பெயர் நஸ்ருத்தீன் மட்டுமே. 'முல்லா' பிற்காலத்தில் இவரோடு வந்து ஒட்டிக் கொண்ட பெயர். 'முல்லா' என்றால் கல்விமான், அறிஞன் என்பது பொருள்.

முல்லா இந்தியாவுக்கும் வந்திருக்கிறார். பாமினி அரசுகளில் ஒன்றான பீஜப்பூர் (இன்றைய ஆந்திர மாநிலம்) ராஜ்ஜியத்தில், அலி அடில்ஷா மன்னரின் அவையில் முல்லா புலவராகவும் இருந்திருக்கிறார் (1656 - 1773). மன்னரின் நெருங்கிய நண்பர்களுள் முல்லாவும் இடம்பெற்றிருந்தார். முல்லா 'அலிஅடில்ஷா'வின் வாழ்க்கையைப் பற்றியும், அவரது ஆட்சியைப் பற்றியும் சிறப்பித்து எழுதியுள்ளார்.

துருக்கி அரசு முல்லாவைப் பற்றிய செய்திகளை நூல்களாக வெளியிட்டுள்ளது. சோவியத் அரசு முல்லாவைப் பற்றி ஒரு திரைப் படமே எடுத்துள்ளது.

முல்லாவின் கதைகள் உலகம் முழுவதும் பரவியுள்ளன. குறிப்பாக துருக்கி, கிரீஸ், எகிப்து, ஈரான், மத்திய ஆசியாவின் நாடுகளில் முல்லா கொடி கட்டிப் பறக்கிறார். பண்பாட்டுப் பிடிவாதத்துடன் எதையுமே ஏற்க மறுக்கும் கிரீஸ் கூட இவரது கதைகளை விரும்பி ஏற்றுள்ளது.

முல்லா எதையும் புதிய நோக்குடன் பார்க்கும் குணமுடையவர். எதிலும் நகைச்சுவை இழையும். பாடல் புனைவதுடன், கதைகள், நாடகங்கள் எழுதுவதிலும் வல்லவர். இஸ்லாமிய ஆன்மீகவாதிகள், இவரது படைப்புகளில் மறைமுகமாக ஆன்மீகக் கருத்துக்கள் இழைந்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். முல்லாவைப் பற்றிச் சிறு சிறு கதைகள், துணுக்குகள் உலகப் பத்திரிகைகள் எல்லாவற்றிலுமே வெளிவருகின்றன. தனியாகத் தொகுப்பு நூல்களும் படக் கதைகளும் கூட வெளிவந்துள்ளன.

துருக்கியில் அவர் பிறந்த ஊராகிய எஸ்கிஷஹரில் ஆண்டுதோறும் முல்லாவின் பிறந்த நாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அவரது படைப்புகள் நடித்து ரசிக்கப்படுகின்றன.

– தா. ஷேக்ஹுசேன்.



நீங்கள் விரும்பிப் படிக்கும் கோகுலம் பத்திரிகையை யார் வெளியிடுகிறார்கள் தெரியுமா? புகழ்பெற்ற கல்கி நிறுவனம்தான். கல்கி நிறுவனத்தையும் கல்கி பத்திரிகையையும் அறியாத தமிழ்க் குடும்பங்கள் இருக்கவே முடியாதே! கல்கி பத்திரிகை இந்த ஆகஸ்ட் மாதத்தில் தனது பொன் விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுகிறது.

கல்கி பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டம் உச்சகட்டத்தில் இருந்தது. சுதந்திர வேகமும், காந்தியத்தில் பற்றும், இலக்கிய ஆர்வமும், கலைப் பற்றும், ஆன்மீக ஈடுபாடும் கொண்ட புகழ்பெற்ற ஐந்து பெரியோர்கள் இணைந்து இந்தக் கல்கி பத்திரிகையை ஆரம்பிக்க முடிவெடுத்தனர். அவர்கள் தான் ராஜாஜி, டி. கே. சி., ''கல்கி'', டி. சதாசிவம், எம். எஸ். ஆகியோர். அறிமுகம் தேவையில்லாத மாமணிகள் இவர்கள்.

தனது கருத்துக்களை வெளியிட காந்திஜிக்கு நவஜீவன் பத்திரிகையும், யங் இந்தியா நாளேடும் உதவியாக இருந்தது போலவே, ராஜாஜிக்குக் கல்கி பத்திரிகை அமைந்தது. தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டதோடு, உங்களைப் போன்ற குழந்தைகளுக்காகவும் அவர் கல்கியில் எழுதியிருக்கிறார். இந்திய இதிகாசங்களான இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் அவர் உங்களை மனத்தில் வைத்துக் கொண்டே மிக எளிய நடையில் தொடராக எழுதினார். குழந்தைகளுக்காகவும் எழுதும் சிறந்த குழந்தை எழுத்தாளராக ராஜாஜியை மாற்றிய பெருமை கல்கி பத்திரிகைக்கு உண்டு.

உங்களைப் போன்ற குழந்தைகளுக்குக் கல்வி என்பது புத்தகச் சுமையும், பரீட்சைத் தொல்லையுமாகத்



★ ராஜாஜி

தோன்றாமல், நீங்கள் பயமின்றியும் சந்தோஷமாகவும் கல்வி பெற வேண்டும்; அதற்கேற்பக் கல்வி முறை அமைய வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தவர் டி. கே. சி., ரசிகமணி என்றெல்லாம் அன்புடன் அழைக்கப்பட்ட டி. கே. சிதம்பரநாத முதலியார், கம்பராமாயணத்தில் கரைகண்டவர் இந்தப் பெரியவர். கல்கி பத்திரிகையில் வாராவாரம் இலக்கியக் கட்டுரைகளை எழுதிப் பாமர மக்களுக்கும் கம்பனின் இலக்கிய நயங்களை அறிமுகப்படுத்தினார்.



★ டி.கே.சி.


"கல்கி" என்ற புனைபெயர் கொண்ட ரா. கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர் பொறுப்பை ஏற்றுத் தமது புனைபெயரையே பத்திரிகைக்கு அளித்து கல்கி பத்திரிகையை நடத்தினார். பெரியவர்களுக்காக எழுதி உலகப் புகழ்பெற்ற "கல்கி", உங்களைப் போன்ற குழந்தைகளுக்காகவும் எழுதினார். 'குஹன்' என்ற புனைபெயரில் அவர் எழுதிய 'பானுவின் ஆகாயப் பயணம்' சிறுகதை இன்றும் உங்களை மகிழ்விக்கக் கூடியது. தவிர, இவரும் குழந்தைகளிடம்



★ கல்கி

பேரன்பு கொண்டு, அவர்களுக்கான கல்வி எப்படி அமைய வேண்டும் என்பதையும் பாடத் திட்டங்களில் உள்ள குறைகளையும் விரிவாக எடுத்துக் காட்டினார். தமிழில் கலைக்களஞ்சியம் (என்ஸைக்ளோபீடியா) உருவாக உதவினார். இதுவே பின்னால் சிறுவர் கலைக் களஞ்சியம் தயாரிக்கப்படவும் காரணமாயிற்று. கல்கி வார இதழில் சில பக்கங்களைப் பாப்பா மலருக்காக ஒதுக்கி, உங்களுக்காகக் கதை, பாடல்களைக் கண்கவரும் வண்ணத்தில் வெளியிட்ட பெருமையும் இவருக்கு உண்டு.

மற்ற பத்திரிகைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாகக் கல்கியை வெளியிட்டு வெற்றி பெறச் செய்த பெருமைக்கு உரியவர் டி. சதாசிவம். தொடக்கத்தில் நிர்வாகப் பொறுப்பில் இருந்த இவர், ''கல்கி'' காலமான பிறகு அந்தப் பத்திரிகையின் ஆசிரியரானார். குழந்தை இலக்கியத்தில் இவருக்கும் ஈடுபாடு அதிகமிருந்தது. இவரது தூண்டுதலால் அழ. வள்ளியப்பா, அகிலன், சுகி சுப்ரமணியன் போன்ற பலரும் பாப்பா மலரில் எழுதினார்கள்.



* சதாசிவம், எம். எஸ்.

இவரது குழந்தை இலக்கிய ஆர்வமே கோகுலத்தைத் தொடங்க வைத்தது.

ஒரு வாரப் பத்திரிகையை ஆரம்பிப்பது என்றால் எவ்வளவு மூலதனம் தேவை? இதைத் தமது தேன்மதுர இசை மூலம் தேடித் தந்து கல்கி பத்திரிகை தொடங்க உதவியவர் சதாசிவத்தின் மனைவியாரான எம். எஸ். சுப்புலக்ஷ்மி.

கல்கி பாப்பா மலர் பகுதியில், புகழ்மிக்க எழுத்தாளர்களான சாவி, சோமாஸ், ராஜி, வாண்டுமாமா போன்ற பலரும் எழுதி மெருகூட்டினார்கள். ஓவிய மாமணிகளான மணியம், சந்திரா, சாமா, விஜயா ஆகிய பலரும் அழகுபடுத்திக் கண்கவரும் ஓவிய மடல்களாக்கினார்கள். உங்கள் வீட்டில் தாத்தா, பாட்டி இருந்தால் அவர்களைக் கேளுங்கள். 'கல்கி' பாப்பா மலர் பகுதியில் வெளியான தொடர்கதைகளுக்காகவே குழந்தைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு பெரியவர்களும் படித்தார்கள் என்பதை அறியலாம்.


தமிழ்நாட்டில் சுதந்திர உணர்ச்சி, அரசியல் விழிப்பு, கலை, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய கல்கி பத்திரிகை குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்துள்ளது என்பது குழந்தைகளாகிய உங்களுக்குப் பெருமை.

தமிழ் மக்களின் செல்லக் குடும்பப் பத்திரிகையாக வளர்ந்து இன்று பொன் விழாக் காணும் கல்கி பத்திரிகைக்கு, பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் சார்பில் கோகுலம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துப் பெருமிதம் அடைவதுடன், இன்னும் பல நூறு ஆண்டுகள் தனது இலக்கியப் பணியைத் தொடர்ந்து செய்து சாதனை புரிய இறைவனை வேண்டுகிறது.

அலுத்துக் கொண்ட ரயில்!

“இதென்ன அடிமை வாழ்க்கை! போட்டுவைத்த தண்டவாளத்தின்மேல் தான் ஓடியாகணுமா? எனக்கு என்று எந்த சுதந்திரமும் இல்லையா? திருவிழா, கடைகண்ணி, பொதுக்கூட்டம், ஊர்வலம் என்று எதையும் பார்க்க முடியவில்லையே! ஒரு சாமியைக் கூட தரிசனம் பண்ண முடியலே. கொத்தடிமையை விடக் கேவலமா இருக்கே?'' என்று அலுத்துக் கொண்டது ரயில் இஞ்சின்.

''கேவலம் எருமை, கழுதை, பன்றிகள் கூட இஷ்டப்படி ஊரெங்கும் சுற்றித் திரிகின்றன. எல்லாக்கொண்டாட்டங்களையும் பார்க்கின்றன'' என்று விரக்தி மேலிட சுதந்திரத்திற்காக ஏங்கிய ரயில் இஞ்சின் மணல் பரப்பைக் கண்டதும் துள்ளி விளையாட எண்ணி தண்டவாளத்தில் இருந்து இறங்கி விட்டது.



தண்டவாளத்தை விட்டு இறங்கினாலும் கழுதை, எருமை, பன்றியைப் போல் இஞ்சினால் மணல் வெளியில் இஷ்டப்படி ஓட முடியவில்லை. சக்கரங்கள் மண்ணில் புதைய நிலைகுலைந்து குத்திட்டு நின்றது.

நல்ல காலம், பின்னால் இருந்த இரண்டும் சரக்குப் பெட்டிகள். அதனால் உயிர்ச்சேதம் இல்லாமல் போயிற்று.

இஞ்சினைத் தூக்கி நிறுத்த பிரும்மாண்டமான கிரேன் வந்தது.


''என்ன வந்தது உனக்கு? ஏன் தண்டவாளத்தில் இருந்து இறங்கினாய்?'' என்று கேட்டது கிரேன். இஞ்சின் தனது ஏக்கத்தைக் கூறியது.

''அசட்டு இஞ்சினே! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? நீ திருவிழாவுக்கோ, திருமணத்திற்கோ போகாவிட்டால் என்ன? இதற்கெல் லாம் போகும் எத்தனை பேரை நீ தினமும் சுமந்து கொண்டு போகிறாய்? அதை நினைத்து நீ பெருமைப்பட வேண்டாமா? என்னைப்பார். உன்னை மாதிரி தடம் புரண்டு ரயில்களைத் தூக்கிவிட ஓடி ஓடி எனக்கும் அலுத்து விட்டது என்பதற்காக நான் உன்னைப் போல் தடம் பரண்டு விட்ட இஞ்சின்களைத் தூக்கி நிறுத்தப் போகாது இருந்தால் என்னவாகும்? நம்மால் மற்றவர்களுக்கு உதவியாக இருக்க ஏதோ ஒரு வகையில் தொண்டு செய்ய முடிகிறது என்ற மனஅமைதி நமக்கு வேண்டும். யானையால் வானத்தில் பறக்க முடியுமா? நம்மால் தண்டவாளத்தை விட்டு இறங்கி கழுதை, எருமை, பன்றியைப் போல் ஓட முடியுமா? இனி இந்த மாதிரி அசட்டுத்தனமாக நடக்காதே, இருப்பதைக் கொண்டு மன நிறைவு கொள்'' என்று அறிவுரை கூறியது கிரேன்.

– பி. கே. சுரேஷ்.,
கொசப்பாளையம்.

எந்த மன்னனும் தனது கிரீடத்தை அடகு வைத்துப் பணம் வாங்கியதாக சரித்திரமே இல்லை. இரண்டாம் ரிச்சர்ட் இதற்கு விதிவிலக்கு. இவர் கைச்செலவுக்குப் பணமில்லாததால் தனது கிரீடத்தையே அடகு வைத்து விட்டார். சரித்திரத்தில் முடிதுறந்த மன்னர் பலர் உண்டு. ஆனால் அடகுவைத்தவர் இவர் ஒருவரே!

சி. அருள்மணி, மொரப்பூர்.





உங்கள் நூலகம்

மாயாவி இளவரசன் - விசாகன் - பக் 136 ரூ. 20/- வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு, சென்னை - 600 017.

தினமலர் சிறுவர் மலரில் தொடர்கதையாக வெளியாகி, புத்தக வடிவில் வந்திருக்கும் நாவல். நினைத்தபோது காற்றாகி ஒரு கண்ணாடி புட்டிக்குள் புகுந்து கொள்ளவும், பிறகு சுய உருவுடன் வெளிவரவும் மந்திர சக்தி பெற்ற இளவரசன் ஆனந்தன், தன் நாட்டு மக்களை வதைக்கும் கொடிய கொள்ளைக் காரர்களைக் கூண்டோடு அழிக்கிறான். இந்த முயற்சியில் அவன் சந்திக்கும் அபாயங்கள், அவற்றை வென்று அவன் வெற்றி பெறும் வகைகள் எல்லாமே அடுத்து என்ன நிகழப்போகிறது என்பதை அறியத் துடிப்புடன் ஏங்க வைக்கிறது. நல்ல மந்திர தந்திர நாவல்.

அறிவியல் புதுமைகள் - மலையமான் - பக் 104 - ரூ. 13/- ஒளிப் பதிப்பகம், 63, டாக்டர் ரங்காச்சாரி சாலை, சென்னை - 18.

கோகுலம் வாசகர்களுக்கு ஏற்கெனவே நன்கு அறிமுகமான ஆசிரியர் இந்தத் தொகுப்பு நூலில் அறிவியல் புதுமைகள் பலவற்றைத் திரட்டித் தந்திருக்கிறார். எறும்புகளைத் துன்புறுத்துவோருக்கு ஜெர்மெனியில் சிறை தண்டனை வழங்கப்பட்டது போன்ற அதிசயச் செய்திகளுக்கும் பஞ்சமில்லை. கூடவே ஒரு அறிவியல் தகவலும் தரப்படுகிறது. படிக்கச் சுவையாக உள்ளது. அறிவியல் தமிழாக்கத்தில் ஆசிரியருக்கு உள்ள ஆர்வம் நூலில் தெரிகிறது. பந்து முனைத் தாவல் (பால் பாயின்ட் பேனா) மனிந்திரப் பன்றி (ரோபாட்) போன்ற புதிய கலைச் சொற்கள் சிறுவர்களுக்கு சிறிது அச்சத்தைத் தரலாம்!

கற்றல் குறைபாடு ஏன்? - ஜான் முருகு செல்வம் - பக் 152 - ரூ. 20/- பல்கலைப் பதிப்பகம், 36, தெற்குச் சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 24.

நவீனகாலக் கல்வியில் குழந்தைகள் ஏராளமாக படிக்கப் வேண்டிய கட்டாயத்திற்கு உந்தப்பட்டிருக்கிறார்கள். இது தவிர்க்க இயலாத காலகட்டம். எல்லாக் குழந்தைகளாலும் எல்லாவற்றையும் கற்க முடிவதில்லை. ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட பிரச்னைகள் உள்ளன. பெற்றோராலும் ஆசிரியராலும் இனம்காண முடியாத இவற்றை இந்த நூலாசிரியர் அடையாளம் கண்டு, அவற்றின் தன்மையை விளக்கி, குழந்தைகளின் பலவீனத்தையும் சுட்டிக் காட்டி, அவற்றை வெல்வதற்கான வழிமுறைகளையும் காட்டியிருக்கிறார். இது குழந்தைகளை விட ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் அதிகம் பயன்படும்.

வரலாறு படைத்தவர் வரலாறு - ஜெ. எத்திராஜன் - பக் - ரூ. 18/- குழந்தை இலக்கியக் கழகம், 72, கிருஷ்ணா நகர், சென்னை - 91.


குழந்தை இலக்கியத்தில் துருவ நட்சத்திரமாகத் திகழும் டாக்டர் பூவண்ணனின் சாதனை வரலாறுதான் இந்தப் புத்தகம். குழந்தை இலக்கியத்திற்கான இந்திய அரசினரின் மிக உயர்ந்த விருதைப் பெற்ற ஆசிரியர், பள்ளி மாணவனாக இருந்து எழுதத் தொடங்கி, உழைத்து படிப்படியாக உயர்ந்து எப்படி இந்த சாதனை படைக்கும் உன்னத நிலைக்கு உயர்ந்தார் என்பதை அவரது நெருங்கிய நெடுங்கால நண்பரும் எத்த னையோ குழந்தை எழுத்தாளர்கள் உருவாகக் காரணமாக இருந்தவருமான எத்திராஜன் சுவைபடக் கூறியிருக்கிறார். குழந்தை எழுத்தாளர் ஒருவருடைய வாழ்க்கை வரலாறு புத்தக வடிவில் வரு வது, குழந்தை கவிஞர், வானதி திருநாவுக்கரசருக்குப் பிறகு இதுதான். புத்தகத்தைப் படித்த பிறகு பூவண்ணனின் உயர்வுக்குக் காரணமான உழைப்பும் பண்பும் திறமையும் தெளிவாகத் தெரிகிறது.

மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். கட்டணம் இல்லை. நூல்களை ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈகாடுதாங்கல், சென்னை - 97, என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

எத்தனை மாம்பழங்கள்?



விடை : 43 மாம்பழங்கள்.


வண்ணம் தீட்டுங்கள் !

"கம்ப்யூட்டர் கதை கூடச் சொல்லுமா?" என்று வாயைப் பிளந்தான் சேகர்.

"கதை மட்டுமென்ன? பாட்டும் பாடுமாக்கும்" என்று தன் பர்சனல் கம்ப்யூட்டரின் பெருமை பிடிபடாமல் புன்முறுவலாக நின்றார் சாம்பு மாமா.

"நல்ல கதையா மாமா?" என்று ஆவல் உந்த, சேகர் கேட்டே விட்டான்.



காணாமல்போன சங்கிலி!

"மொதல்ல நான் சொல்றதைக் கவனமாக் கேட்டுக்கோ!" - அப்பளம் நொறுக்கிய மாதிரி 'நறுக்'கென்று ஆரம்பித்தார் மாமா.

"இந்தக் கம்ப்யூட்டரில் 'மெனு' கேட்பது முதல் "ரிடர்ன்" 'கீ'யை அமுக்குவது வரை ரொம்பச் சுலபம். ஆனால், ஒவ்வொரு கதை முடிந்ததும் கம்ப்யூட்டர், வேதாளம் மாதிரி ஒரு கேள்வி கேட்கும். சரியான பதில் சொன்னால் "தாங்க்ஸ்" சொல்லிவிட்டு மௌனமாகிவிடும்.

"தப்பானால்?" என்றான் சேகர்.

"தப்பாச் சொல்லிப் பாரேன். கம்ப்யூட்டர் என்ன பண்ணும் என்று!" எனச் சொல்லிவிட்டு நகர்ந்தார் மாமா.

மாமா சொன்ன குறிப்புகளின்படி சேகர் கம்ப்யூட்டரின் மௌனத்தைக் கலைத்து, அதை ஒரு கதை சொல்லச் சொன்னான்.

கம்ப்யூட்டர் கதையைத் தொடங்கியது.

"பைஜூவும், ஜில்லியும் நல்ல நண்பர்கள். இரண்டு பேரும் ஒரே வகுப்பில் படித்து வந்தார்கள்.

பைஜூவின் பிறந்தநாள் வந்தது. புது உடைகளை அணிந்து, வகுப்பில் எல்லோருக்கும் பிறந்தநாள் இனிப்பு வழங்கினான்.

மறுநாள் காலை... பள்ளி வகுப்பு அறை.

பைஜூவின் தந்தை, பைஜூவுடன் நின்று கொண்டிருந்தார். பைஜூ அழுது கொண்டிருந்தான்.

முந்திய நாள் பைஜூ பள்ளிக்குப் போட்டுவந்த தங்கச் சங்கிலியைக் காணோமாம்!

"ச ங் கி லி காணோம்ங்கிறது எப்போ தெரிந்தது?" - பைஜூவிடம் பள்ளி - வாட்ச்மேன் கேட்ட கேள்

என். சந்திரசேகரன்



விக்குச் சரியான பதில் பைஜுவிடமிருந்து வருவதாக இல்லை.

டீச்சர் வந்ததும் வராததுமாகப் பிரச்னையைப் போட்டு உடைத்தார் பைஜுவின் தந்தை.

''விசாரிக்கிறேன்'' என்று டீச்சர், அன்றைக்கு 'யார் வரவில்லை' என்று நோட்டம் விட்டார்.

ஜில்லியைக் காணோம்!

கொஞ்ச நேரம் சென்றதும், வகுப்பில் சின்னச் சலசலப்பு. வாசலில் ஜில்லி! அம்மாவுடன் - அவள் முகத்தில் கொஞ்சம் வாட்டம்!

டீச்சர் நிலைமையைப் புரிந்து கொண்டார். ''என்னப்பா ஜில்லி?''

ஜில்லி பதில் சொல்வதற்குள், ''டீச்சர்! ஒரு சின்னத் தவறு நடந்து விட்டது. பைஜுவின் தங்கச் சங்கிலியை ஜில்லியின் பையில் பார்த்தேன். விசாரித்ததில், 'ஆசையாக இருந்தது. எடுத்துக் கொண்டு வந்தேன்' என்றான் இவன். உங்களிடமும் சொல்லிவிட்டு, பைஜுவின் பெற்றோரிடமும் நேரில் மன்னிப்புக் கேட்கலாமென்று நானே வந்தேன்,'' என்றாள் ஜில்லியின் அம்மா.

பைஜுவின் அப்பாவும், ''சங்கிலிதான் கெடைச்சிடுச்சே! ஜில்லி! இனிமே இந்த மாதிரி செய்யக் கூடாது. பிறத்தியார் சொத்துக்கு ஆசைப் படக் கூடாது. திருடன்னு பேர் வாங்கப் படாது'' என்று சொல்லிவிட்டு நடந்தார்.

டீச்சரும், ஜில்லியின் அம்மாவும் அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

கதையை முடித்து விட்டதாக அறிவித்து, கம்ப்யூட்டர் கேள்வி கேட்டது.

''இந்தக் கதையில் உண்மையான குற்றவாளி யார்?'' எப்படி?''

தொடர்ந்து இரண்டாவது கேள்வியையும் போட்டது.

''டீச்சர், ஜில்லி, ஜில்லியின் அம்மா, பைஜுவின் அப்பா இவர்களில் யார் சிறந்தவர்கள்? ஏன்?''

சேகர் யோசனை செய்தான்.

''முதல் கேள்விக்குப் பதில் -

பைஜு வின் பெற்றோர்தான். பள்ளிக்கூடம் படிக்கும் பையனுக்கு, தங்கச் சங்கிலியெல்லாம் போட்டு அனுப்புவது தப்பு. அடுத்தவருடைய ஆசைகளைத் தூண்டிவிடும் போது, தன்னுடைய சொத்தைப் பாதுகாக்கும் அளவிற்கு, பைஜுவிற்கு விவரம் தெரியாது. இதில் பைஜுவின் பெற்றோர் மிகவும் கவனமாக இருந்திருக்க வேண்டும்.''


சேகர் தொடர்ந்தான் :

''இரண்டாம் கேள்விக்குப் பதில் -

ஜில்லிதான். தான் செய்த தவறை மறைத்துப் பொய் சொல்லாமல், ''ஆசையாக இருந்ததால் எடுத்தேன்'' என்று நேர்மையாக அம்மாவிடம் ஒப்புக் கொண்டது மிகப் பெரிய செயல். இம்மாதிரி ஒரு தவறை ஒப்புக் கொள்ள நல்ல மனத் துணிவு தேவை. ஒரு தவறை மறைக்க இன்னொரு பொய் சொல்லாமல், குற்றத்தை ஒப்புக் கொண்டதோடு, அதை எதற்காகச் செய்தோம் என்பதையும் கூறியிருக்கிறானே! சந்தேகம் இல்லை. ஜில்லி சிறந்தவன்தான்!''

சேகரின் பதில்களால் கம்ப்யூட்டர் திருப்தியடைந்தது போலும்! கலர் கலராக வணக்கம்! நன்றி எல்லாம் சொல்லிவிட்டுத் திடீரென்று வெளிறி விடைபெற்றது.

சேகர் வேறு வேலைகளில் ஈடுபடலானான்.



'' 'ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரி' என்றால் என்ன...?''

''சின்ன ஸ்கேல், அதாவது அரை அடி ஸ்கேல், தயார் செய்யும் கம்பெனி, சார்!''

பிடிச்சிருக்கு. இந்த இரண்டு நாளும் கோழி இரவு பகலாகச் சிறிதும் நிறுத்தாது தொடர்ந்து தின்றபடியே இருக்கிறது. இது தின்ற அகரத் தீனிக்கு எவ்வளவு ஆச்சு என்று எப்படிக் கணக்குப் போடுவது? போனால் போகிறது. உனக்குக் கொடுப்பதாகப் பேசிய கூலிக்கும் இந்தக் கோழியின் அகரத் தீனிக்கான தொகைக்கும் சரியாப் போச்சு என்று வைத்துக் கொள்கிறேன். அதற்கு மேல் கூலி என்று ஒரு காசு கூடக் கேட்காதே'' என்றான் எத்தன் ஏமாற்று முதலாளி.


''அநியாயம் சொல்கிறீர்களே எஜமான்? எனக்குக் கூலி தர வேண்டாமா?'' என்று அலறினான் இளைஞன் லிங்போ.

''கூலியாவது கூலி! உன் கோழியின் அகரத் தீனிக்கு நீ கூடுதலாக எனக்குப் பணம் தர வேண்டும். எல்லாம் சரியாகப் போய் விட்டது. இறங்கு படகிலிருந்து!'' என்று முதலாளி கத்தவும், லிங்போ சமாதான மடைந்தது போல நடித்து, ''நீங்க சொன்னால் சரிங்க'' முதலாளி. நீங்க என்ன என்னை ஏமாத்தவா போறீங்க?'' என்று நடித்துக் குழைந்தான்.

சாமர்த்தியமாக ஒரு கிராமத்துப் பையனை ஏமாற்றி விட்டோம் என்று தன்னைத் தானே ஏமாற்று முதலாளி மெச்சிக் கொண்டிருக்கும் போது, அப்பாவிப் பையன் லிங்போவின் மனத்திலே ஒரு யோசனை தோன்றியது.

சில நாள் சென்றதும் இந்த லிங்போ மறுபடியும் எத்தனிடம் தானே வேலைக்கு வந்தான். முதலாளி ஆச்சரியப்பட்டான். ''என்ன தம்பி நீ என்னிடம் மறுபடி வேலைக்கு வருகிறாயா? நல்லது. இப்போதே இந்தப்





நீங்கள்தானா?

டிங்குவும் மங்குவும் விஷமக்காரக் குரங்குக் குட்டிகள். உடம்பை வளைத்து வேலை செய்யாது எப்பப் பாரு தூக்கம். எழுந்ததும் தீனி! அவைகளைத் திருத்த முயன்று முடியாமல் போன பெற்றோர்கள், இரண்டையும் சிங்கராஜாவின் நேரடிப் பார்வையில் நடைபெறும் ராஜா பள்ளியில் கொண்டு வந்து சேர்த்தனர்.

சிங்க ராஜா பயங்கரமான கண்டிப்புக்காரர். அடிக்கடி அவரே வகுப்புகளுக்கு வந்து மாணவர்கள் கற்பதைக் கவனிப்பார். கேள்விகள் கேட்டு, சரியாகப் பதில் சொல்வோருக்குப் பரிசு தருவார். படிக்காமல் கதை பேசும் மக்குகளுக்குக் கசையடி தருவார்.

டிங்குவும் மங்குவும் ராஜா பள்ளியில் சேர்ந்து படாதபாடுபட்டன. 'எப்படாப்பா கோடை விடுமுன்ற வரும், இந்தக் காட்டை விட்டே ஓடிப் போகலாம்' என்று காத்திருந்தன. ஒரு வழியாக ஆண்டுத் தேர்வுகள் முடிந்து, கோடை விடுமுறை தொடங்கியது. டிங்குவும் மங்குவும் அந்தக் காட்டை விட்டு ஒருவரிடமும் கூறிக் கொள்ளாது விட்டன சவாரி! தாவித் தாவி இன்னொரு காட்டுக்குச் சென்றன.

அங்கே அழகான ஓர் மாமரத் தோப்பு. டிங்குவும் மங்குவும் தோப்பில் புகுந்து மாம்பழங்களை இஷ்டப்படி பறித்துச் சாப்பிட்டன. காவலுக்கு இருந்த கரடியார் கூறிய எந்த புத்திமதிகளையும் அவை ஏற்கவில்லை. கரடியார் சிங்க ராஜாவுக்குத் தகவல் அனுப்பினார். இரண்டையும் பிடித்து வர கரடி போலீஸ் படை வந்தது. வலை வீசியும்,



மரங்களில் ஏறியும், கரடிகள் துரத்தின. டிங்குவும் மங்குவும் சிறைப்பட்டன.

இ ர ண் டை யு ம் சிங்கராஜாவின் முன்னால் கொண்டு போய் நிறுத்தி னார்கள்.

''அருமையான மாம்பழத் தோட் டத்தைப் பாழாக்கி விட்டீர்களாமே! என்ன தண்டனை தெரியுமா?'' என்று கர்ஜித்தார் சிங்கராஜா.

டிங்குவும் மங்குவும் நடுங்கின.

''பசி தாங்கவில்லை. ஏ தோ ரெண்டு பழம்தான் பறித்தோம். அவ் வளவுதான். எல்லோரும் எங்கள் மேல் வீண் பழி சுமத்துகிறார்கள் நாங்கள் தோப்பைப் பாழாக்கவில்லை'' என்று கூசாமல் பொய் கூறின டிங்குவும் மங்கு வும்.

''மகாராஜா, இரண்டு பேரும் புளுகுகிறார்கள்!'' என்று ஓலமிட்டது கரடி.

''சரி, நீங்கள் எந்தக் காட்டைச் சேர்ந்தவர்கள்? எந்தப் பள்ளியில் படிக் கிறீர்கள்?'' என்று கனல் கக்கினார் சிங்க ராஜா.

''நாங்கள் மலை அருவிக் காட்டு விலங்குகள். எங்கள் சிங்க ரா ஜா, தானே மேற்பார்வையிட்டு ந ட த் து ம் ராஜா ப ள் ளி யி ல் படிக்கிறோம்'' என்றன டிங்குவும் மங்குவும்.

''அப்படியா! ராஜா பள்ளியில் படிக்கும் மாணவர்களா நீங்கள்! கண் டிப்புக்கும், ஒழுக்கத்திற்கும், திறமைக் கும் பேர் போன பள்ளி ஆயிற்றே அது? எங்கள் காட்டைச் சேர்ந்த விலங்குக ளுக்கும் அதில் சிறிது இடம் ஒதுக்கித் தர வேண்டும் என்று சிங்க ராஜாவிடம் கேட்டிருக்கிறோமே. அப்படிப்பட்ட கண்டிப்பு நிறைந்த பள்ளி மாணவர்க ளாகிய நீங்கள்,கண்டிப்பாகத் தவறு செய்திருக்க மாட்டீர்கள். உங்களை உடனே விடுதலை செய்கிறேன். நீங்கள் போகும் போது என் அன்பளிப்பாக உங்கள் சிங்க ராஜாவுக்கு ஒரு கூடை மாம்பழம் தருகிறேன். கொ ா ண் டு போய்க் கொடுங்கள்'' என்றார் சிங்க ராஜா.

'எங்கேயோ வெகு தொலைவில் இருக்கும் இந்தக் காட்டு ராஜா நமது பள்ளியை எப்படிப் புகழ்கிறார்! அங்கே சேர்ந்து படிக்கத் தனது காட்டு விலங்கு களை அனுப்பத் துடிக்கிறார்! நாமோ, பள்ளியின் பெருமைகளை உணராது தப்பி ஓடி வந்திருக்கிறோம்! அங்கே படிக்கிறோம் என்பதற்கே இவ்வளவு பெருமை என்றால், அங்கே நன்றாகப் படித்து விட்டால் நமக்கு எவ் வளவு பெருமை கிடைக்கும்' என்று எண்ணிப் பார்த்தன டிங்குவும் மங்கு வும். அடுத்த நாளே இரண்டும் தங்கள் காட்டுக்குத் திரும்பி விட்டன. இப்பொ ழுது கவன மாகப் படிக்கின்றன!

- டி. சித்ரா, ஆரணி.

விடுதலை

பட்டாம்பூச்சி என்றால் மேரிக்கு மிகவும் ஆசை. மணிக்கணக்காக அவை பறப்பதையும், உட்கார்ந்து சிறகு விரித் துக் காட்டுவதையும் பார்த்து ரசிப்பாள். சாதம் கூட வேண்டாம்! பட்டாம்பூச்சி யைப் பார்த்துக் கொண்டிருக்கச் சொன் னால் போதும். அவளுடைய மாமா பட்டணத்தில் இ ரு ந் து பைனாகுலர் வாங்கி அவளுடைய பிறந்த நாளன்று



பரிசளித்திருந்தார். அதை வைத்துக் கொண்டு நேரம் போவது தெரியாமல் பட்டாம்பூச்சிகளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பாள்.

ஒருநாள் மேரிக்கு விபரீத ஆசை ஒன்று தோன்றியது. மிகவும் அழகான ஓர் பட்டாம்பூச்சி சூரியகாந்திப் பூச்செடியில் வந்து உட்கார்ந்து ஒய்யாரமாக வண்ணச் சிறகுகளைப் பிரித்துப் பிரித்து மடக்கியது! அவள் தன்னை மறந்தாள். எப்படியாவது அதைப் பிடித்துத் தானே வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவளுக்கு ஓர் கொடூர ஆசை தோன்றியது. அந்த அளவுக்கு அந்தப் பட்டாம் பூச்சியும் வண்ணக் கோலமாக இருந்தது.

மேரி சந்தடி செய்யாது அடி மேல் அடி வைத்து, கட்டை விரலையும் ஆள் காட்டி விரலையும் மடக்கி அந்த அழகிய பட்டாம்பூச்சியைப் பிடித்தாள். அது 'படபட'வென்று சிறகடித்துத் துடித்தது. கண்ணாடி ஜாடிக்குள் அதை அடைத்து ஓட்டை போட்ட மூடியால் மூடினாள்!

செய்து விட்ட காரியம் தப்பு என்று மன உறுத்தல் இருந்தது. அந்த மன உறுத்தலுடனேயே பள்ளிக்குப் போனாள். வகுப்பில் ஆசிரியை நடத்திய பாடம் மனதில் பதியவில்லை. நினைவெல்லாம் பட்டாம்பூச்சியின் மேலேயே இருந்தது. இடைவெளிக்குப் பிறகு நூல் நிலையத்திற்குப் போனாள். ஒரு புத்தகத்தை ஷெல்பில் இருந்து எடுத்த போது ஒரு பல்லி தாவிக் குதித்து பக்கத்து ஷெல்பில் ஏறியது. அதன் வாயில் ஒரு பட்டாம்பூச்சி!

சட்டென்று புத்தகத்தைப் பல்லியின் மேல் அடித்து பட்டாம்பூச்சியை விடுவிக்க எண்ணினாள். பல்லி தலையைத் தூக்கி அவளைப் பார்த்தது!

''நில் மேரி! என்னை அடித்து பட்டாம்பூச்சியை விடுவிக்கப் போகிறாயா? இதைச் செய்ய உனக்கு என்ன தகுதி இருக்கு? அழகாக இருக்கிறது, அதை நாமே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையில் நீ வீட்டில் ஜாடியில் ஒரு பட்டாம் பூச்சியைச் சிறைப்படுத்தி இருக்கிறாயே? அது மட்டும் நியாயமா? எனக்காவது புழு பூச்சிகள்தான் உணவு. வேறு வழியில்லை. அதனால் நான் செய்வதாவது நியாயம். ஆனால் நீ செய்வது எந்தவிதத்தில் நியாயம்? என்னை அடிப்பது சரிதானா? உனக்கு என்னை அடிக்க என்ன தகுதி இருக்கு?''

பல்லி தலையைத் தூக்கி தன்னைப் பார்த்துக் கேட்பது போல் மேரிக்குத் தோன்றியது. புத்தகத்தை வைத்து விட்டு வீட்டுக்கு விரைந்தாள். ஜாடியில் சிறைப்பட்டுக் கிடந்த பட்டாம்பூச்சிக்கு விடுதலை வழங்கி மகிழ்ந்தாள்!

டி. ஜி. ஜெம்மாஷேரன்,
மதுரை - 7.

விடுமுறைத் தோட்டம்!

பாபுவும் கோபுவும் நண்பர்கள். ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில் படிப்பவர்கள். அதோடு ஒரே தெருவில் வசிப்பவர்கள். பாபுவின் வீடு இடதுபக்கக் கோடி. கோபுவின் வீடு வலது பக்கக் கோடி.



அந்த முறை கோடை விடுமுறையின் போது விடுமுறையைக் கழிக்க இருவர் வீட்டிலும் ''பாக்கெட் மணி'' கொடுத்தார்கள். பாபு அந்தப் பணத்தில் காய்கறி விதைகள், பழச் செடி நாற்றுகள், பூச்செடிகள் வாங்கி வந்தான். வீட்டின் முன்பக்கத்தில் இருந்த காலி இடத்தைச் சீராக்கி அவற்றைப் பயிரிட்டான். கிணற்றில் இருந்து தண்ணீர் இறைத்து ஊற்றினான். கண்ணும் கருத்துமாகத் தோட்டத்தைப் பாதுகாத்து செடிகளை வளர்த்தான். நண்பர்கள் சினிமாவுக்கும், வெளியே சுற்றவும் அழைத்த போது போகவில்லை. அவனுடைய உழைப்பின் பயன் உடனே கிடைத்தது. ஏராளமாகக் கீரையும், பிஞ்சுக் காய்கறிகளும் குலுங்கின. வீட்டுத் தேவைக்கு எடுத்துக் கொண்டது போக, விற்கவும் செய்தான். கணிசமான தொகை கிடைத்தது!

அது அவனது புதிய வகுப்பில் பாடப் புத்தகங்களையும், குறிப்பேடுகளையும் வாங்கப் போதுமானதாக இருந்தது. அவன் பெற்றோர்களுக்கு ஒரே மகிழ்ச்சி, பெருமை.

கோபு, அப்பா கொடுத்த 'பாக்கெட் மணி'யில் வெய்யிலில் ஊரைச் சுற்றினான். சினிமா பார்த்தான். கண்ட இடங் களில் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொண்டு படுத்துக் கொண்டான். டாக்டருக்கு செலவானதுடன் அவன் உடம்பும் இளைத் தான்.

பள்ளி திறந்த போது, பாபுவை அழைத்துப் போக வழங்கப்படி வந்த கோபு, அவனுடைய தோட்டத்தைப் பார்த்துத் திகைத்தான். ''அப்பா கொடுத்த 'பாக்கெட் மணி'யைக் கண்டபடி செலவழித்து, உடம்பு சரியில்லாது அவஸ்தைப்பட்டு, அவர்களுக்கு மேலும் செலவு வைத்தேன். ஆனால் நீயோ, உழைத்து ஒன்றைப் பத்தாக்கி, பெருமையோடு உயர்ந்திருக்கிறாய். இனி நானும் உன் போல் உயர்வேன்'' என்றான் கோபு.

- க. பூபதி, திருப்பூர்.

சீருடை

ரவி நான்காம் வகுப்பில் படித்து வந்தான். எல்லா நல்ல குணங்களும் இருந்த அவனுக்குச் சீருடை போட்டுக் கொள்ள மட்டும் பிடிக்காது. அடிக்கடி அதற்காக அபராதம் கட்டுவான். இம்போசிஷன் எழுதுவான். பெற்றோரும் எவ்வளவோ கூறிப் பார்த்தனர். ஆசிரியரும், ''ரவி, மாணவர்களிடையே ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சீருடை. அதோடு நீ எந்தப் பள்ளி மாண



வன் என்பதை அறியவும் அது அவசியம். அதனால் சீருடை அணிந்து வரத் தயங்காதே'' என்று புத்திமதி கூறிப் பார்த்தார். அவன் கேட்கிற வழியாகக் காணோம்.

அந்த ஆண்டு ரவியின் குட்டித் தம்பி பூபதியையும் ரவி படித்த அதே பள்ளியில் பேபி வகுப்பில் சேர்த்திருந்தார்கள். சரியாகப் பேசக் கூட வராத பூபதிக்கு சீருடை போட்டு, ரவியுடன் பள்ளிக்கு அனுப்பினார்கள்.

ரவிக்கு தன் தம்பியைப் பற்றி அளவில்லாத பெருமை. இடைவேளை யின் போது தம்பியை வந்து பார்த்துக் கொஞ்சி விட்டுப் போவான்.

அன்று இடைவேளையின் போது ரவி தன் தம்பியைப் பார்த்துக் கொஞ்ச வழக்கப்படி போனான். பூபதி தனது வகுப்பிலும் இல்லை. விளையாடும் இடத்திலும் இல்லை! வகுப்பு ஆசிரி யையிடம் கூறினான். இருவரும் சேர்ந்து தேடினார்கள். பூபதியை எங்கும் காண வில்லை. ''கேட்டால் சரியாகப் பதில் கூடக் கூறத் தெரியாதே!'' என்று தம் பியை நினைத்து அழ ஆரம்பித்தான் ரவி.

பள்ளி பரபரப்படைந்தது. வீட்டுக் குத் தகவல் அனுப்பினார்கள். அப்பா வுக்கும் செய்தி போனது. அப்பாவும் அம்மாவும் பதறிக் கொண்டு வந்தனர். ரவியைத்தான் ஒருவராலும் சமாதானப் படுத்த முடியவில்லை. போலீசில் புகார் கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்தனர்.

இரவு மணி பதினொன்று. ஒருவரும் சாப்பிடவும் இல்லை. தூங்கவும் இல்லை. அழுது கொண்டிருந்த அம்மா வையும் ரவியையும் அப்பா சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார்.

வாசலில் ஏதோ கார் வந்து நின்றது. ரவி ஓடிச் சென்று கதவைத் திறந்தான். போலீஸ் ஜீப்பில், பள்ளி முதல்வர். அவருடைய மடியில் ரவியின் அருமைத் தம்பி பூபதியேதான்! பயிள்கம் சாப் பிட்டுக் கொண்டிருந்தான்!.

''உன் தம்பி, காலியாக இருந்த ஸ்கூல் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து விட் டான். உள்ளே தூங்கியும் விட்டான்! டிரைவர் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போன போது, பஸ்ஸில் இவனும் போயிருக்கறான். டிரைவர் கவனிக்க வில்லை. டிரைவர் வீட்டுக்கு அருகே கதவைத் திறந்து கொண்டு ரோடுக்கு வந்திருக்கிறான். கால் போன போக்கில் நடந்து கோவிலுக்குப் போய் பஞ்சா மிர்தம் பிரசாதம் சாப்பிட்டு விட்டு அங்கேயே இருந்திருக்கிறான். தேங்காய் பழக்காரர் சந்தேகப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்திருக் கிறார். சீருடையை வைத்து பள்ளியைக் கண்டுபிடித்து, முதல்வரைப் பார்த்து உங்க வீட்டு முகவரியை வாங்கிக் கொண்டு வந்தேன்'' என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

''இனிமேல் சீருடை அணியாது பள்ளிக்குப் போக மாட்டேன்'' என்று சிரித்தான் ரவி.

- எஸ். ஜெகதீசன், ராமநாதபுரம்.

எல்லாம் நன்மைக்கே!

மாளவ மன்னனிடம் அறிவும் திற மையும் மிக்க அமைச்சர் ஒருவர் இருந்தார். அவர் தெய்வபக்திமிக்கவர்.

ஒருமுறை மன்னரின் சுண்டுவிரல், கதவில் சிக்கிச் சிதைந்து விட்டது. எல் லோரும் அனுதாபம் தெரிவித்த போது, அமைச்சர் மட்டும், ''எல்லாம் நன் மைக்கே. இறைவன் செயல்'' என்றார். மன்னருக்குக் கோபம் வந்து விட்டது.

''இந்த அமைச்சரை அவரது குடும்பத்தோடு சிறையில் அடையுங் கள்'' என்று உத்தரவிட்டார். அமைச்சர்



தன் குடும்பத்துடன் சிறையில் வைக் கப்பட்டார். அப்பொழுதும் அவர் ''எல்லாம் நன்மைக்கே. இறை வன் செயல்'' என்றார்.

அரசர் வேட்டைக்காகக் காட்டுக் குப் போன போது வழி தவறி காட்டு மிராண்டி மக்களிடம் சிக்கிக் கொண் டார். அவர்கள் அவரைக் காளிக்குப் பலியிடக் கொண்டு போனார்கள். பலி யிடும் போதுதான், மன்னரது கையில் சுண்டுவிரல் சிதைந்திருப்பதை அவர் கள் கவனித்தனர்.

''சுண்டுவிரல் சிதைந்திருப்பது அங்கக் குறைவுக்கு ஒப்பானது. இவரை பலியிட முடியாது. விடுவித்து அனுப் புங்கள்'' என்ற அவர்கள் தலைவன் உத்தரவிட்டான்.


மந்திரி கூறியதன் பொருள் அப் பொழுதுதான் மன்னனுக்கு விளங் கியது. அரண்மனைக்கு வந்ததும் அவரை விடுவித்து மன்னிப்புக் கேட் டான்.

''எல்லாம் நன்மைக்கே மன்னவா. இறைவன் செயல். நேற்று என் மாளி கையில் இடி விழுந்து தரை மட்டமாகி விட்டதாம். சிறையில் இருந்ததால் என் குடும்பத்தாருடன் நான் தப்பித்தேன்'' என்றார் தெய்வபக்திமிக்க அமைச்சர்!

- மு. கண்ணன், மதுரை.

கர்நாடக மாநிலத்திலுள்ள உடுப்பியில் சாமியை வீதி புறப்பாடு செய்ய அழைத்து வரும்போது, கோவில் யானைகள் சாமிக்கு முன் ஊர்வலத்தில் போகும். எப்படிப் போகும் தெரியுமா? எல்லா இடங்களிலும் நடப்பதுபோல் தங்கள் பின் புறத்தைக் காட்டிக் கொண்டு அல்ல. ஆண்டவனைப் பார்த்துக் கொண்டே யானைகள் பின் னோக்கி நடந்து செல்கின்றன!

– என். நாகராஜன், திருப்பரங்குன்றம்.



பின்னோக்கி நடக்கும் யானைகள்!

தோல் என்ன விலை?

ஒருநாள் முல்லா கடைத் தெரு வுக்குப் போனார். வாழைப் பழக் கடை யைப் பார்த்ததும் பழம் சாப்பிடும் ஆசை தோன்றியது. ''வாழைப்பழம் என்ன விலை?'' என்று கேட்டார்.



''ஒரு பழம் அறுபது காசு'' என்றான் கடைக்காரன்.


''இருபது காசுக்குக் கொடேன்'' என்று கேட்டார் முல்லா.

எரிச்சலடைந்த கடைக்காரன், ''இருபது காசுக்கு வாழைப் பழத்தின் தோல்தான் கிடைக்கும்'' என்றான்.

அதற்காகவே காத்திருந்த முல்லா, ''இந்தா நாற்பது காசு. தோலை நீயே வைத்துக் கொண்டு பழத்தை மட்டும்தா'' என்று கேட்டார்.


கடைக்காரன் அசந்து போனான்!

- கு. கருணாநிதி, கும்பகோணம்.


நானா எசமான்?
கருத்து: ஈசாப்
அமைப்பு: 'ரே'..
படம் :
ஒரு விவசாயி ஒட்டகத்தையும், நாயையும் வளர்த்து வந்தார்.
ஒருநாள்- ஒட்டகத்திற்கு புல்லையும், நாய்க்கு ரொட்டி துண்டையும் கொட்டகையின் பரணில் வைத்து விட்டு வெளியூர் சென்றார்.
ஒட்டகத்துக்குப்பசித்தது பரணில் இருந்த புல்லைத் தின்றது.
அப்போது - நாய் -
அண்ணே! ரொட்டியை கீழே தள்ளிவிடேன் பசிக்கிறது.
1



ஒட்டகம் அசட்டையாக-
முடியாது, நானா எசமான்? அவரே விரட்டும்!
ஏமாந்து பசியுடன் படுத்துக் கொண்டது நாய்-
நடு இரவில் ஒரு நாய் அங்கு வந்ததைக் கண்ட ஒட்டகம் பயந்து நாயை எழுப்பியது-
என்னைத் தின்று விடும்! குரைத்து விரட்டு...
நாய் அசட்டையாக
நானா எசமான் போ போ...!


ஐயோ என்னை மன்னித்து விடு! எனக்குப் புத்தி வந்தது!
நாய் உடனே ஓநாயை விரட்டியது.
லொள்....
லொள்....
பிறகு ஒட்டகம் ஓநாயைக் கீழே தள்ளியது.
நாம் நண்பர்கள்! நம் இருவருக்கும் ஒரே எசமான்!



கல்யாணம் பாம்பு!

சகுனம் சபாபதி என்றால் தெரியாதவர்கள் கிடையாது. சகுனம் பார்ப்பதில் அவ்வளவு தீவிரம்.

சபாபதி வீட்டுச் சுவரில் பல்லிகள் நிறைந்திருக்கும். அவர் நல்ல செயல் எதையாவது எண்ணி சுவரில் ஒரு தட்டுத் தட்டுவார், அவ்வளவுதான்! அத்தனை பல்லிகளும் குரல் கொடுத்து வாழ்த்தும்! அந்த அளவுக்கு அவர் பல்லிகளைப் பழக்கியிருந்தார்.

அந்த ஊரில் உள்ள எருமை மாடுகளுக்கு சபாபதியைக் கண்டால் செம கொண்டாட்டாம். எல்லாம் நாலு கால் பாய்ச்சலில் அவரிடம் ஓடோடி வரும். உதட்டைப் பிதுக்கி பல்வரிசை தெரியப் பாசத்துடன் அவரைப் பார்த்து இளிக்கும். சபாபதி தமது கைப் பையில் எப்பொழுதும் எள்ளுருண்டை, முறுக்கு, சீடை என்று ஏதாவது பலகாரம் வைத்திருப்பார். அதிலிருந்து ஒன்றை எடுத்து ஆசையுடன் கொடுப்பார். எல்லாம் காரியமாகத்தான். எருமை எதிரே வந்தால் நல்ல சகுனம் ஆயிற்றே?

எருமைகளைப் போலவே கழுதைகளுக்கும் சபாபதியைக் கண்டால் உடம்பு கொள்ளாத ஆனந்தம்! அவைகளுக்குக் கொடுப்பதற்காகவே, அவர் காகிதக் குப்பைகளைப் பொறுக்கித் திரட்டி வந்து தயாராக வைத்திருப்பார். எங்கே காகிதக் குப்பை கிடந்தாலும் சபாபதி தமது கழுதை நண்பர்களுக்காகத் துளியும் கூசாது எந்தக் குப்பைத் தொட்டியிலும் கை வைத்துப் பொறுக்குவார். அவரைக் கண்டாலே போதும். கழுதைகள் அன்புடன் குரலெடுத்துப் பாடித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும். கழுதைகள் குரலெழுப்பினால் நல்ல சகுனம் ஆயிற்றே!

பூனைகளுக்கு மட்டும் சபாபதியைக் கண்டால் குலைநடுக்கம். அவர் தலையைக் கண்டு விட்டால் தலைதெறிக்க ஓடிவிடும்! எங்கே பூனையைக் கண்டாலும் கல்லால் அடிக்கத் தயாராக அவரது பையில் எப்பவும் கற்கள் இருக்கும். அவரைக் கண்டால் பூனைகளுக்கு சிம்ம சொப்பனம். பூனைகள் குறுக்கே போனால் சகுனத் தடை ஆயிற்றே!

இப்படி சகுனத்திற்குப் பேர் போன சபாபதியின் ஒரே பையன்தான் ரங்குடு. தந்தைக்கு நேர்மாறானவன்.

சபாபதி மறந்தும் கூட ஒரு மங்களமில்லாத சொல்லைச் சொல்ல மாட்டார். 'ஐயோ!' என்ற சொல்லை இதுவரை அவர் ஒரு முறை கூடச் சொன்னது கிடையாது. 'ஐயோ' சகுனத் தடைச் சொல் ஆயிற்றே!

சின்னபாபு

தீவிர சகுனவாதியான சபாபதியின் அருமைப் பையன் ரங்குடு, பேச்சுக்கு பத்து 'ஐயோ' போடுவான்! ஐயோ போடாது அவனுக்குப் பேசவே வராது.

ரங்குடு சபாபதியிடம் வளரவில்லை. தனது தாத்தாவின் வீட்டில்; அதாவது சபாபதியின் மாமனார் வீட்டில் வளர்ந்து வந்தான். தாத்தா ஒரு நாட்டு வைத்தியர். அவர் வீட்டில் எப்பொழுதும் நோயாளிகள் கூட்டம் நிறைந்திருக்கும். நோயின் க டு மை ம தாங்காது அவர்கள் 'ஐயோ, ஐயோ' என்று அரற்றியபடி இருப்பார்கள். நோயின் வேதனை தாங்காது நொடிக்கு நூறு 'ஐயோ' போட்டபடி பேசுவார்கள். இது ரங்குடுவுக்கு அப்படியே பதிந்து விட்டது.

தாத்தா அவனுக்குத் தன் னுடைய வைத்திய முறையைக் கற்றுத் தர முயன்று தோற்றுப் போனார். ஆனால் ரங்குடுவோ யாருடைய முயற்சியும் இல்லாது, பேச்சுக்கு பத்து 'ஐயோ' போடும் பழக்கத்தைக் கற்றுக் கொண்டு



விட்டான்! அதன் விளைவாக, பசிக்கிறது என்றால் கூட 'ஐயோ பசிக்கிறது' என்பான். பாயசம் நன்றாக இருக்கிறது என்றால் 'ஐயோ, பாயசம் நன்றாக இருக்கு!' என்பான். 'ஐயோ சட்டை நல்லா இருக்கு' என்பான்!

ரங்குடு தன் தாத்தாவிடம் இருந்த வரை 'ஐயோ' பழக்கத்தால் அவனுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. ஆனால், தாத்தா திடீரென்று காலமாகி, தந்தை சபாபதியிடம் நிரந்தரமாக இருக்க வந்ததும் பிரச்னைகள் தோன்றின.

சபாபதிக்குத் தொழிலே ஜோசியம்தான். அவரிடம் ஜோசியம் கேட்க வருபவர்கள் மனமகிழ்ச்சியுடன் போகும் அளவுக்கு அவர் ஜோசியம் சொல்வார். நல்ல சகுனமும் கிடைக்கும்படி பார்த்துக் கொள்வார். ஆனால் ரங்குடு வந்த பிறகு எல்லாம் தலைகீழாகப் போய் விட்டன.

'நகை தொலைந்து விட்டது' என்று ஒருவர் ஜோசியம் கேட்க சபாபதியிடம் வருவார். ''கண்டிப்பாகக் கிடைக்கும்'' என்று கூறி சபாபதி அவரை அனுப்பி வைப்பார். அவர்கள் போகும் போது ரங்குடு வருவான். 'ஐயோ எனக்கு வாழைப்பழம் வேணும் அப்பா. காசு கொடு!' என்பான். யாராவது திருமணப் பொருத்தம் பார்க்க வருவார்கள். படி ஏறி வரும்போதே ரங்குடு ''ஐயோ, அம்மா போட்ட பஜ்ஜி ரொம்ப நல்லா இருந்தது'' என்பான் தந்தையிடம். சகுனம் சரியில்லை என்று வந்தவர்கள் போய் விடுவார்கள்!





''ஐயோன்னு சொல்லாதேடா. அது அபசகுனமான கெட்ட பேச்சு'' என்பார் சபாபதி.

''எனக்கு 'ஐயோ' போடாம பேச வராதே'' என்பான் ரங்குடு.

''ஐயோன்னு சொல்லணும் போல இருந்தால், கல்யாணம் கல்யாணம்னு சொல்லிப் பழகிக்க'' என்றார் சபாபதி.

ரங்குடு தலையை ஆட்டினான். ஆனால் அவனால் 'ஐயோ' போடாமல் பேச முடியவில்லை. 'சகுனம் சபா பதிக்கு இப்படி ஒரு பையனா!' என்று எல்லோரும் வியந்தனர். ரங்குடுவின் 'ஐயோ' பேச்சினால் சபாபதியின் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது.

ஒருநாள் கொழுத்த பணக்காரர் வீட்டுத் திருமணப் பொருத்தம், ரங்குடு வின் 'ஐயோ' பேச்சினால் கை நழுவிப் போனது. சபாபதி தன்னை மறந்தார். அவருக்குக் கோபமான கோபம் வந்தது. விசிறியைத் திருப்பிப் பிடித்துக் கொண்டார்.

''இனிமே ஐயோன்னு சொல்ல மாட்டியே?'' என்று கேட்டுக் கொண்டே, விசிறிக் காம்பு முறியும் வரை ரங்குடுவைக் கண்மண் தெரி யாமல் அடித்து விளாசினார் சபாபதி. அடி தாங்காது ரங்குடு வீட்டை விட்டு ஓடி விட்டான். கால் போன போக்கில் நடந்து மதுரைக்கு வந்தான். சத்திரத்தில் சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொண் டான்.

ரங்குடுவுக்கு அருகே திருடர்கள் இருவர் மாறுவேடத்தில் வந்து படுத் திருந்தனர். பாண்டிய மன்னரின் முத்து மாலையை அவர்கள் திருடிக் கொண்டு வந்திருந்தனர்.

நடு இரவு. திருடர்கள் இருவரும் மெதுவாக எழுந்தனர். அதில் ஒருவன் பெயர் கல்யாணம். மற்றொருவன் நாகப்பன். அந்த நேரத்தில் தாகம் எடுத்ததால், நீர் குடிக்க ரங்குடுவும் எழுந்திருந்தான்.

ரங்குடு தண்ணீரைக் குடித்து விட் டுத் திரும்பும் போது தாழ்வாரத்தில் ஒரு பாம்பைப் பார்த்து விட்டான். 'ஐயோ' என்று கத்த வாயெடுத்த ரங்குடுவுக்கு,

அரச மரத்துப் பிள்ளையார்

ஆற்றங் கரையில் அரசமரம் - அதன்
அருகில் நிற்பது வேப்பமரம்.

போற்றி வணங்கப் பிள்ளையார்
- அங்கே
பொறுமை யாக இருக்கின்றார்.

ஆற்று நீரில் குளித்து விட்டு - அந்த
ஆனை முகனைத் தொழுவோம்.

அரச மரத்தைச் சுற்றிவந்து - அதன்
அடியில் சற்றே அமர்வோம்.

- சுசீந்திரம் நீலகண்டன்

சபாபதி அடித்த அடி நினைவுக்கு வந்தது. ''கல்யாணம், பாம்பு'' என்று பெரிதாக அலறினான்.

கல்யாணம் என்று தன்னையும், பாம்பு என்று தனது நண்பன் நாகப்பனையும்தான் ரங்குடு குறிப்பிடுகிறான். அவன் தங்கள் திருட்டைக் கண்டு பிடித்து விட்டான். பெரிய ஜோசியன் என்று எண்ணிய கல்யாணம், நண்பனை இழுத்துக் கொண்டு புதரில் மறைந்து கொண்டான்.

அந்த நேரத்தில் பாம்பு வேகமாகப் புதரில் ஓடி ஒளியப் போனது. ''கல்யாணம், பாம்பு புதருக்குள் ஓடி ஒளிகிறது'' என்று அலறினான் ரங்குடு.

எல்லோரும் விழித்துக் கொண்டனர். இனித் தப்ப முடியாது என்று முடிவு கட்டிய திருடர்கள் தாங்களே வெளியே வந்து சரணடைந்தனர். செய்தி மன்னருக்கு எட்டியது. அபார ஜோசியத் திறமை பெற்றிருந்த ரங்குடுவைக் காண ராணியாரையும் அழைத்துக் கொண்டு மன்னர் நேரில் வந்தார். வணங்கினார். ஏராளமாகப் பரிசளித்தார்.

மகனுடன் வந்து சேர்ந்து கொண்டார் சபாபதி. முக்காலத்தையும் அறிந்து கூறும் சக்தி படைத்த ரங்குடு என்று ரங்குடுவின் பெருமை பாண்டிய இராஜ்ஜியம் முழுவதும் பரவியது.

அமைச்சருக்கு மட்டும் ரங்குடுவின் திறமையில் நம்பிக்கை ஏற்படவில்லை. தனது சந்தேகத்தை மன்னரிடம் கூறினார். இருவரும் ரங்குடுவின் திறமையைச் சோதிப்பது என்று முடிவு செய்து கொண்டனர். ஒரு திட்டம் போட்டனர்.


அடுத்த நாள், மன்னர், அமைச்சர், ரங்குடு ஆகிய மூவரும் பேசிக் கொண்டிருந்தனர். திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருந்த அமைச்சரின் உறவுக்காரப் பெண் ஒருத்தி முன்னமே செய்த ஏற்பாட்டின்படி அங்கே அழுதபடி வந்தாள்.

அவள் 'ஐயோ' என்று அழுததைக் கேட்டதும், ரங்குடு பதறியபடி எழுந்தான். ''ஐயோன்னு அபசகுனம் பிடித்த சொல்லச் சொல்லாதேம்மா. கல்யாணம்னு சொல்லு'' என்று அவன் கூறியதைக் கேட்டதும் அமைச்சரின் முகத்தில் அசடு வழிந்தது. அந்தப் பெண்ணுக்கு என்ன ஆச்சு என்பதை அறிந்து கூறும்படி கேட்க இருந்த அவருக்கு, ரங்குடு முந்திக் கொண்டு கூறிய பதில் அவரை வாயடைக்க வைத்தது!

ரங்குடு பெரிய ஜோசிய அறிஞராக விளங்கிப் பெருமை பெற்றான்!

''ஆமா... நீங்க எந்த ''பிராண்ட்'' லிப்ஸ்டிக் உபயோகிக்கிறீங்க... நல்ல சிவப்பாயிருக்கே...!''

– ச. காணிக்கைராஜ்






''இந்தப் பனியிலே இப்படி சாவகாசமாத் திரியறியே! உனக்குக் குளிரலே...?''

''நான்தான் ''கம்பளி''ப் புழுவாச்சே...! எனக்கெப்படிக் குளிரும்...?''

– ச. காணிக்கைராஜ்



படத்திற்கு ஏற்ற பாடல் எழுதுங்கள் - போட்டி

இந்தப் படத்தைப் பாருங்கள். சற்று வித்தியாசமான சுவையான படம் இது. யானை ஒன்று தாகம் தாங்காது தெருவில் நகராட்சிப் பம்ப்பில் நீர் குடிக்க முயல்கிறது! தம்பி தங்கைகள் இதற்கு உதவுகிறார்கள். இதை வைத்து இதற்கு ஏற்றபடி ஓர் இரண்டு வரிப் பாடலை எழுதி அனுப்புங்கள். ஒருவர் ஒரு பாடலை மட்டுமே எழுதியனுப்பலாம். தகுந்த 10 பாடல்களுக்குப் பரிசு தரப்படும். கூப்பன்களுடன் தப்பாமல் அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097.

படத்திற்கு ஏற்ற பாடல் - போட்டி


பெயர் : ---------------------------

வயது : ---------------------------

முகவரி : ---------------------------

பின்கோடு : --------------

முடிவு தேதி : 17.8.92



மந்திரக் கத்தி

வெகு காலத்திற்கு முன் ஐராவதி நதியின் கரையில் நடந்த கதை இது. நீண்டு அகன்ற இந்த நதிதான் பர்மா நாட்டின் நெடுஞ்சாலையாக இருந்தது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மக்கள் பயணம் செய்யவும் பண்டங்களை எடுத்துப் போகவும் படகுகளே பயன்பட்ட காலம் அது. படகுகளை நிறைய வைத்துக் கொண்டிருந்த முதலாளிகளும் படகோட்டிகளும் அங்கே அதிகமாக இருந்தார்கள்.

படகு முதலாளிகளில் ஒருவன் பெரிய ஏமாற்றுக்காரன். அடிக்கடி படகோட்டிகளை வேலைக்கு அமர்த்துவான். பயணத்துக்கு இவ்வளவு கூலி என்று பேசுவான். ஆனால் வேலை முடிந்ததும் எதையாவது காரணம் காட்டி கூலி தராமல் ஏமாற்றி விடுவான். அவனிடம் ஏமாறாத படகோட்டிகளே கிடையாது. எல்லோரும் அவனை வெறுத்தனர். அவனிடம் ஒருமுறை வேலை செய்தவர்கள் மறுபடி அவனிடம் வேலைக்கு வர மாட்டார்கள்.


ஒருமுறை அவனுடைய படகை ஓட்ட யாருமே முன்வரவில்லை. நாட் கூலி அதிகம் தருவதாக அந்த ஏமாத்து முதலாளி பலவிதமாக ஆசை காட்டினான்.

அவனிடம் அவனுடைய உண்மையான குணத்தை அறியாத சில புதிய படகோட்டிகள் அதிகக் கூலி தருவதாகக் கூறியதும் வேலை செய்ய வந்தனர். ஏற்கெனவே ஏமாந்து அனுபவப்பட்டிருந்த பலரும் புதிய ஆட்களை எச்சரிக்கை செய்தனர்.

ஒரு பழம் படகோட்டி சொன்னார் :

''இந்த முதலாளி ரொம்ப மோசமான எஜமானர். ஒருமுறை இவன் படகிலே மாண்டலே வரை போக வர வேலை செய்திருக்கிறேன். வேலை முடிந்து திரும்பும் நாளன்று எல்லோரும் உல்லாசமாக ஆடுபுலி ஆட்டம் விளையாடிக் கொண்டிருந்தோம். முதலாளியும் எங்களுடன் வந்து சேர்ந்து கொண்டார். பந்தயம் வைத்தார். இறங்கும் போது, பந்தயத்தில் நான் தோற்றுப் போனதாகச் சொல்லி, வேலைக்கான கூலியை மறுத்து விட்டார். என்னை ஏமாற்றி விட்டார்!''

தமிழில் : தம்பி சீனிவாசன்



''சுக்ரீவத் தமையன் பந்து விளையாடலாமா?''
''அதென்ன புதுப் பந்து?''
''வாலிபால்தான்.''

''இப்படி எத்தனையோ பேருக்கு ஏதாவது காரணம் சொல்லி, பேசியே கூலியை ஏமாற்றியிருக்கிறார்.''

''ஆமாம். ஆமாம். அவர் குணமே அப்படித்தான். இது எல்லோருக்கும் தெரியும். பயணத்தின் கடைசி நாளன்று படகோட்டிகளின் கவனத்தை எப்படியாவது திருப்பி ஏதாவது ஒரு வகையில் கூலியைத் தராது ஏமாற்றுவதே அவர் பழக்கம்'' என்றான் மற்றொரு முதிய படகோட்டி.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான் இளைஞனான புதிய ஓர் படகோட்டி. அவன் சீறினான். ''அதென்ன அப்படி? ஒருவன், வேலையை மட்டும் வாங்கிக் கொண்டு பேசிய கூலியைத் தராது ஏமாற்றுவதாம். மற்றவர்கள் ஏமாறுவதாம். அதைப் பொறுத்துக் கொள்வதாம். இன்று ஒருவன், அடுத்த முறை இன்னொருவன் என்று இப்படி எல்லோரும் ஏமாறுவதாம். இந்தக் கதையெல்லாம் நம்மிடம் நடக்காது. இந்த ஷிங்போ எத்தனுக்கு எத்தன்!'' என்று படபடப்பாகப் பேசினான். அவன் ஷிங்போ என்ற ஊரிலிருந்து வந்திருந்தான். அவன் தன்னுடன் கூட ஒரு கோழியைக் கொண்டு வந்திருந்தான். அதை எப்போதும் வைத்திருப்பான். கோழிக்குத் தீனி போடுவதில் ஒரு சிரமமும் இருக்கவில்லை. கிடைத்ததைத் தின்று வந்தது கோழி. இளைஞன் சாப்பிட்டு எறிந்த மிச்சம் மீதியை ஆசையாகத் தின்னும்.

இந்த வாலிபன் ஷிங்போ ஏமாற்று முதலாளியிடம் வேலைக்குச் சேர்ந்தான். படகோட்டும் வேலைதான். இரண்டு நாள் பயணம். போக வர கூலி, சாப்பாடு என்று ஒப்பந்தம். திரும்பும் நாள் வந்தது. என்ன தந்திரம் செய்து இவன் கூலியைத் தராமல் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த ஏமாற்று முதலாளி, ஷிங்போகாரனின் கோழியைப் பார்த்தான். ஒரு யோசனை தோன்றியது. அப்பொழுதுதான் கோழியைப் பார்த்து அதிசயப்படுவது போலக் காட்டிக் கொண்டான்.

''தம்பி, சிங்க்போ உன் கோழி கொழு கொழுவென்று அழகாக வளர்ந்திருக்கிறதே! இப்படிக் கொழுக்க என்ன தீனி கொடுக்கிறாய்?'' என்று அன்பொழுகக் கேட்டான்.

''என்ன தீனி இங்கே இருக்கிறது எஜமான்! ஏதோ எனக்குக் கூலியாகத் தினமும் கிடைக்கும் படகுச் சாப்பாட்டில் மிச்சம் மீதியைத் தருகிறேன். கோழிக்கு இது போதாதா!''

''என்னது! படகுச் சாப்பாட்டிலிருந்து கோழிக்குத் தீனி தருகிறாயா? இப்படிச் செய்யலாமா? நமது ஒப்பந்தம் உனக்கு மட்டும் சோறு போடுவதுதான். நீ பாட்டுக்கு கோழி, ஆடு, மாடு, நாய், யானை என்று கொண்டு வந்தால் அதற்கெல்லாம் தீனி போட முடியுமா? நமக்குக் கட்டுப்படியாகாது. தெரிந்து கொள்!'' என்று படபடவென்று பொரிந்து தள்ளினான் ஏமாற்று முதலாளி.

ஷிங்போ பயந்து போனான். ''நீங்க சொல்வது நியாயம்தான் முதலாளி. இனி அடுத்த முறையிலிருந்து என் கோழியை வீட்டிலேயே விட்டு விட்டு வருகிறேன். இந்த முறை கோழித் தீனிக்கு என்று ஒரு தொகையைக் கொடுத்து விடுகிறேன்'' என்றான்.

''இப்படிச் சொல்ற நீ ரொம்ப நல்ல பிள்ளை. உன்னை எனக்கு ரொம்பப்

பிடிச்சிருக்கு. இந்த இரண்டு நாளும் கோழி இரவு பகலாகச் சிறிதும் நிறுத்தாது தொடர்ந்து தின்றபடியே இருக்கிறது. இது தின்ற அகரத் தீனிக்கு எவ்வளவு ஆச்சு என்று எப்படிக் கணக்குப் போடுவது? போனால் போகிறது. உனக்குக் கொடுப்பதாகப் பேசிய கூலிக்கும் இந்தக் கோழியின் அகரத் தீனிக்கான தொகைக்கும் சரியாப் போச்சு என்று வைத்துக் கொள்கிறேன். அதற்கு மேல் கூலி என்று ஒரு காசு கூடக் கேட்காதே'' என்றான் எத்தன் ஏமாற்று முதலாளி.

''அநியாயம் சொல்கிறீர்களே எஜமான்? எனக்குக் கூலி தர வேண்டாமா?'' என்று அலறினான் இளைஞன் லிங்போ.

''கூலியாவது கூலி! உன் கோழியின் அகரத் தீனிக்கு நீ கூடுதலாக எனக்குப் பணம் தர வேண்டும். எல்லாம் சரியாகப் போய் விட்டது. இறங்கு படகிலிருந்து!'' என்று முதலாளி கத்தவும், லிங்போ சமாதானமடைந்தது போல நடித்து, ''நீங்க சொன்னால் சரிங்க'' முதலாளி. நீங்க என்ன என்னை ஏமாத்தவா போறீங்க?'' என்று நடித்துக் குழைந்தான்.

சாமர்த்தியமாக ஒரு கிராமத்துப் பையனை ஏமாற்றி விட்டோம் என்று தன்னைத் தானே ஏமாற்று முதலாளி மெச்சிக் கொண்டிருக்கும் போது, அப்பாவிப் பையன் லிங்போவின் மனத்திலே ஒரு யோசனை தோன்றியது.

சில நாள் சென்றதும் இந்த லிங்போ மறுபடியும் எத்தனிடம் தானே வேலைக்கு வந்தான். முதலாளி ஆச்சரியப்பட்டான். ''என்ன தம்பி நீ என்னிடம் மறுபடி வேலைக்கு வருகிறாயா? நல்லது. இப்போதே இந்தப்



படகு புறப்படப் போகிறது. சேர்ந்து கொள்'' என்று மகிழ்ச்சியுடன் சம்மதித்தான். பிறகு, ''இந்த முறை உன்னுடன் ஆடு, கோழி எதுவும் இல்லையே?'' என்று கிண்டலாகக் கேட்டான்.


''இல்லை ஐயா. ஆனால் என்னுடன் எப்போதும் ஒரு மந்திரக் கத்தி மட்டும் இருக்கும். இதோ பாருங்கள். இது என் அருமைத் தந்தையார் கொடுத்தது. அவருக்கு அவரது தந்தையார் கொடுத்தது இது. எத்தனையோ தலைமுறைகளாக இது எங்கள் குடும்பத்தில் இருக்கிறது. இது சாதாரணக் கத்தி அல்ல. அதிசய சக்திமிக்க மந்திரக் கத்தி. அது என்ன மந்திரம்னு எனக்குத் தெரியாது. ஆனால் இதனால் எனக்கு நன்மை விளையும் என்பதை மட்டும் நன்கு அறிவேன்!'' என்றான் ஷிங்போ.

'சரியான மடையன்' என்று அவனைப் பற்றி எண்ணிக் கொண்டான் ஏமாளி முதலாளி.

ஒருநாள், இரண்டு நாள், மூன்று நாள் என்று படகுப் பயணம் தொடர்ந்தது. ஒருநாள் இளைஞன் படகு விளிம்பில் தனது கத்தியைக் கூர்தீட்டிக் கொண்டிருந்த போது ஏமாற்று முதலாளி அதைப் பார்த்து விட்டு அவன் அருகே வந்தான். ''எவ்வளவு அழகான கத்தி!'' என்று வியந்தான்.

''இது அபூர்வ சக்திவாய்ந்த மந்திரக் கத்தியாச்சே எஜமான்'' என்றான் ஷிங்போ.

''ஹா... ஹா... மந்திரக்கத்தி. மந்திரக் கத்தின்னு ஜெபி. ஆனால் என்ன மந்திர கத்தின்னு மட்டும் உனக்குத் தெரியாது!'' என்று முதலாளி பரிகாசமாகச் சிரித்தான். கத்தியை வாங்குவதற்குக் கைநீட்டினான். அதே கணம் நீட்டிய கத்தியை நீட்டினான் இளைஞன். முதலாளி சரியாகப் பிடித்துக் கொள்ளாததால், கத்தி கைதவறி விழுந்து படகிலிருந்து தெறித்து, நதியில் விழுந்து விட்டது!



''ஐயையோ, மந்திரக்கத்தி விழுந்து விட்டதே. எடு. எடு தம்பி. அது தண்ணீரிலே மூழ்குவதற்குள் குதித்து எடு'' என்று பதறினான் முதலாளி.

''ஐயா. பதற வேண்டாம். இது மந்திரக் கத்தியாச்சே. என் குடும்பக் கத்தியாச்சே. எனவே என்னை விட்டு எங்கும் போகாது'' என்றான் வீங்போ சாவகாசமாக.

''அடே அசடே. கத்தி எங்கேயும் போகாது. நமது படகுதான் போய் விடும்!'' என்றான் முதலாளி.

''இதோ பாருங்கள். கத்தி இந்த இடத்திலிருந்து விழுந்தது. படகிலே இந்த விளம்பிலே ஒரு அடையாளம் வைக்கிறேன். எனக்கு எப்போது வேண்டுமோ அப்போது இந்த அடையாளத்தில் நதியிலே குதித்து, கத்தியை எடுத்துக் கொள்வேன்'' என்றான் வீங்போ அப்பாவித்தனமாக.

ஏமாற்று முதலாளி ஆச்சரியப்பட்டான். இப்படியும் ஒரு முட்டாள் இருப்பானா என்று வியந்து போனான். நல்லவேளை இவனை ஏய்ப்பதற்கு இப்பொழுது நல்ல வாய்ப்புக் கிடைத்தது' என்று மகிழ்ந்தான். யோசித்தபடி நின்றான்.

வீங்போ கேட்டான். ''என்ன முதலாளி நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? எங்கள் வீட்டுக் கத்தி மந்திரக் கத்தி...'' என்று தொடங்கினான்.

முதலாளி இடைமறித்து, ''இதோ பார், நீ என்ன சொல்கிறாய்? இங்கே போட்ட உன் கத்தியை எப்போது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்கிறாயா? சரி. நாளை காலை நாம் இங்கிருந்து வெகுதூரத்தில் இருப்போம். அப்போது நீ படகிலிருந்து அடையாளம் போட்ட இடத்தில் இருந்து நதியிலே குதித்து உன் மந்திரக் கத்தியை எடுப்பாயா?'' என்று கேட்டான்.

''அதற்கென்ன? செய்தால் போச்சு!'' என்றான் வீங்போ அலட்டிக் கொள்ளாது.



''என்ன! எடுப்பாயா, எடுத்து விடுவாயா! அப்படி நீ எடுத்து விட்டால் இந்தப் படகும் இதில் உள்ள விலை மிக்க எல்லாப் பொருள்களும் உனக்கே சொந்தம். உன்னால் அப்படி எடுக்க முடியவில்லை என்றால் உன் கூலி உனக்கு இல்லை. தெரிந்து கொள்'' என்றான் எத்தன் முதலாளி நயவஞ்சக மாக.

ஸிங்போ சம்மதித்தான்.

அடுத்த நாள் காலை. கிராமக் கரையில் படகு போய்க் கொண்டிருந் தது. முதலாளி ஸிங்போவை அழைத்து, ''இப்பொழுது குதித்து எடு உன் கத்தியை!'' என்று கொக்கரித்தான். இளைஞன் தயங்கினான். ''என்ன, தோற்று விடுவோமே என்று தயங்கு கிறாயா?'' என்று சீண்டினான் முதலாளி.

''இல்லை எஜமானே. பந்தயம் போட்டு விட்டீர்களே. உங்களுக்கு ஒரு படகு நஷ்டமாகி விடுமே என்றுதான் பார்க்கிறேன்'' என்றான் ஸிங்போ.

எத்தன் ஆத்திரப்பட்டான். ''இத் தனை படகோட்டிகளும் முதலாளி களும் இதற்கு சாட்சி. நீ தோற்றால் உன் கூலி போச்சு! ஜயித்தால் இந்தப் படகும் இதில் உள்ள எல்லாப் பொருள்களும் உனக்கே!'' என்று மீண்டும் உரக்கச் சொன்னான். என்றோ எங்கோ ஆற்றில் விழுந்த கத்தி இன்று இங்கே கிடைப் பதாவது. முட்டாள் ஏமாந்தான் என்று மனத்துக்குள் கொக்கரித்தான் ஏமாற்று முதலாளி.

ஸிங்போ கடவுளைக் கும்பிட் டான். சரேலென்று நதியிலே அம்பு போல குப்புறப் பாய்ந்தான். நதியின் ஆழத்திற்குள் போனதும் இடுப்பில் மறைத்து வைத்திருந்த மற்றொரு பழங் கத்தியை எடுத்தான். அதை நீட்டிய படியே நீரிலிருந்து மேலே ஏறி வெளியே வந்து மிதந்தான்!

''முதலாளி இதோ என் மந்திரக் கத்தி!'' என்று ஸிங்போவின் குரல் கேட் டதும் எத்தன் அதிர்ந்து போனான்.

''இல்லை இல்லை. ஏமாற்று வேலை. இதில் ஏதோ சூது இருக் கிறது!'' என்று அவன் கத்தினான்.

அவன் பேச்சைக் கேட்க யாரும் தயாராக இல்லை!

''எங்கள் குடும்பத்து மந்திரக் கத்தி யின் மகிமை இப்போது புரிகிறது. அது எனக்கு ஒரு படகு சம்பாதித்துக் கொடுத்து விட்டது!'' என்றான் ஸிங்போ.

படகோட்டிகள் எல்லாருக்கும் அளவில்லாத மகிழ்ச்சி. எத்தனையோ நாள் எத்தனையோ பேரை ஏமாற்றிய எத்தன் முதலாளியை எத்தனுக்கு எத்த னாக ஸிங்போ வந்து ஜெயித்து விட்ட தில் அவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சி. எல்லாருமாகச் சேர்ந்து உற்சாகமாக ஸிங்போவை ஒரு படகுக்குச் சொந்தக் காரனாக்கினார்கள். எத்தன் ஒரு படகை இழந்தான். அதிலுள்ள விலை மிக்க பொருள்களுடன் இழந்தான். ஸிங்போ வால் அவன் பேராசைக்கு ஏற்ற கூலி கிடைத்தது!

''எங்க ஊர் கிளியனூர்.''
''எங்க ஊர் வலங்கைமான்.''



''ஹிரோஷிமாவில் என்ன போட் டாங்க?''

''பா...ம்...பாம்...''

''கரெக்ட். பாம்தான் போட் டார்கள்.''



கில்லாடிக்குக் கில்லாடி!



விடியற்காலை நேரம். இன்னும் இருட்டு மறையவில்லை. ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் பாபுவின் வீடு ''டொக் டொக்'' கென கதவு தட்டப் பட்டது. பாபுவின் அம்மா சீதா சென்று கதவைத் திறந்ததும், 'குபீ'ரென இருவர் உள்ளே பாய்ந்தனர். பாபுவின் அப்பா ராமு திடுக்கிட்டார்.

''யார்? யார் நீங்கள்?'' என்று கேட்க, எருமை மாடு போல் இருந்த ஒருவன் ''என் பெயர் பக்கிரி. இவன் பீட்டர். எங்களை போலீஸ் வலைவீசித் தேடிக் கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு நாள் வரை உங்க வீட்டிலேயே தங்கப் போகிறோம். போலீசின் கெடுபிடி குறைந்த பிறகுதான் போகப் போகிறோம்'' என்று உரிமையுடன் நாற்காலியில் அமர்ந்தான் பக்கிரி.

''ஏய்... எவ்வளவு தைரியமிருந்தால் இப்படி உரிமையுடன் அமர்வாய்'' என்று ராமு கேட்கவும் அவன் கன்னத்தில் 'பளார்' ரென அறைந்து ''நான் கூறுவதைப் போல் எல்லோரும் நடக்க வேண்டும். இல்லை... உங்கள் மூவரையும் கொன்று விடுவோம்'' என்று மிரட்டினான் பீட்டர். மூவரும் செய்வதறியாது திகைத்தனர்.

''இந்தாம்மா... வீட்டுத் தலைவி எங்களுக்கு ரொம்பப் பசிக்குது சாப்பிட ஏதாவது சூடாகச் செய்'' என்று உத்தரவிட்டான் பக்கிரி. அம்மா அப்படியே நிற்க, பீட்டர் ''என்னம்மா நிக்கறே? சொன்னதைச் செய்'' என்று விரட்டி உள்ளே அனுப்பினான். அப்பா பக்கம் திரும்பிய பக்கிரி ''ஹலோ சார், எங்களை போலீசில் காட்டிக் கொடுக்க ஏதாவது தந்திரம் பண்ணினீங்க உயிர் போய் விடும் ஜாக்கிரதை'' என்று கனலாகக் கக்கினான்.

நேரம் நகர்ந்தது. மணி எட்டடித்தது. அப்பா குளித்து அலுவலகம் கிளம்பத் தயாரானார். பீட்டர் ''எங்கே சார் கிளம்பப்போறே?'' என்று கேட்டான் முரட்டுக் குரலில்.

''அலுவலகத்திற்கு'' என்றார் அப்பா.

''போக வேண்டாம். 'அலுவலகத்திற்கு இரண்டு நாள் விடுமுறை போடு. ஏய் பையா, நீயும் பள்ளிக்குப் போகக் கூடாது'' என்று பக்கிரி உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருக்கும் போதே வாசலில் ஏதோ சத்தம் கேட்டது. பாபுவின் நண்பன் சுகுமார்தான் சைக்கிளில் வந்து இறங்கினான்.

சுகுமாரைக் கண்டதும் மூவரும் மகிழ்ந்தனர். சுகுமார் தலை முழுக்க மூளை!

''ஏய் பையா, யாரவன்?'' என்று ஜன்னல் வழியாகப் பார்த்தபடி பக்கிரி பாபுவிடம் கேட்க, ''என் நண்பன் சுகுமார். பள்ளிக்கு அழைத்துச் செல்ல

கே. யுவராஜ்

வந்திருக்கிறான்'' என்று பாபு கூறினான்.

''நீ உள்ளே போய்க் கட்டிலில் உடல் சரியில்லாதவன் போல் படு'' என்றான் பக்கிரி.

உள்ளே நுழைந்த சுகுமார் ''குட் மார்னிங் மாமா. பாபு எங்கே இன்னும் ரெடியாகலையா?'' என்று விஷயம் புரியாது கேட்க, அ ப் பா எச்சிலை விழுங்கிவிட்டு, ''அ... அவனுக்கு உடம்பு சரியில்லே அ த னா ல இன்றைக்கு பள்ளிக்கு வர முடியாது'' என்று ஒருவழியாகக் கூறினார்.

''என்ன! பாபுவுக்கு உடம்பு சரியில்லையா! நேற்றுக் கூட நன்றாகத்தானே இருந்தான்! எங்கே அவன்?'' எனக் கேட்டப்படி பாபு படுத்திருந்த அறையில் நுழைந்தான் சுகுமார்.

''என்ன பாபு, உடம்புக்கு என்ன?'' எனக் கேட்டான் சுகுமார்.


பாபு பதில் கூற நிமிரவும் சுகுமாருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த பீட்டர் சைகை காட்டினான். பாபு மிரண் டான். இதைக் கவனித்துவிட்ட சுகுமார் திரும்பிப் பார்த்துவிட்டு, ''யார் இவர்'' என்று கேட்டான்.

பாபுவுக்கு சட்டென ஒரு யோசனை தோன்றியது?

''நான் அடிக்கடி சொல்வேனே சுகுமார் பம்பாய் மாமான்னு.... இவர்தான்'' என்றான்.

''என்னது! பம்பாய் ம ா ம ா இவரா!'' என்று திகைத்த சுகுமாரின் தொடையில் பாபு மெல்லக் கிள்ளினான்.





நிப்பனின் பொருள்!

உலகிலேயே முதன் முதலாக ஜப்பானில் தான் சூரியன் உதிக்கிறது. அதற்குப் பிறகுதான் பிற நாடுகளில் சூரிய உதயத்தைக் காண முடியும். ஜப்பான் நாட்டில் ஞாயிற்றுக் கிழமை எட்டு மணியாக இருக்கும் போது நம் நாட்டில் பொழுது விடிந்திருக்காது. சனிக்கிழமை இரவாக இருக்கும். ஜப்பான் என்ற சொல் நிப்பான் என்று உச்சரிக்கப்படுகிறது. 'நிப்பன்' என்றால் சூரியன் உதிக்கும் இடம் என்று அர்த்தம்.

- எஸ். ஜெயஸ்ரீ, திருச்சி - 14.

சுகுமாரின் துப்பறியும் மூளை சட்டென வேலை செய்தது. ''ஓ.கோ. இவர் தானா? குட்மார்னிங் சார். நான் உங்க கதையெல்லாம் நிறையப் படிப்பேன். ஏன் சார் ''பாவி பரமனும் பால்குண பாபுவும்'' என்று ஒரு கதை எழுதினீர்களே? அதன் கடைசிப் பாகத்தை நான் படிக்கவேயில்லை சார். முடிவில் என்ன சார் ஆகுது?'' என்று சுகுமார் கேட்டான்.

முரடன் பீட்டர் திடுக்கிட்டான். ''ஆ.. அது... அது இன்னும் எ..... எழுதவே இல்லை'' என்றான் திக்கியபடி.

சுகுமார் புரிந்து கொண்டான். ''சரி நான் வறேன் பாபு. உடம்பை பத்திரமா பாத்துக்க. நான் போய் வறேன்'' என்று கூறிவிட்டு சுகுமார் வெளியேறினான்.

''பக்கிரி முதலில் கதவைச் சாத்து. யார் வந்தாலும் அப்படியே பேசி அனுப்பு. கொஞ்ச நேரத்தில் அந்தப் பொடிப் பயல் எப்படித் திணறவைத்து விட்டான்!'' என்றான் பீட்டர். பாபுக்கு நிம்மதி ஏற்பட்டது. எப்படியும் சுகுமார் தங்களைக் காப்பாற்றுவான் என உறுதியாக நம்பினான் அவன். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை.

அடுத்த அரை மணியில் சுகுமார் கதவைத் தட்ட எட்டிப் பார்த்த பீட்டர் ''என்ன வேண்டும்?'' எனக் கேட்டான்..

''என் பேனாவை விட்டு விட்டேன்'' என்றான் சுகுமார். பீட்டர் கதவைத் திறக்க, திடீரென்று கதவைத் தள்ளிக் கொண்டு நான்கு போலீஸ்காரர்கள் உள்ளே நுழைந்தனர். பீட்டர் அலறி விட்டான்! சற்று நேரத்தில் இருவரையும் கைது செய்தனர்.

''தம்பி ரொம்ப நன்றி தம்பி. பெரிய ஆபத்திலிருந்து எங்களைக் காப்பாற்றி விட்டாய்'' என்றார் அப்பா.

''உங்கள் மகன் பாபு மறைமுகமாக எனக்குத் தந்த குறிப்பால்தான் காப்பாற்ற முடிந்தது. ஒரு முறை பம்பாய் மாமாவின் போட்டோவை அவன் எனக்குக் காட்டி இருக்கிறான். இப்பொழுது இவர்தான் பம்பாய் மாமா என்று கூறியதும் தொடையில் கிள்ளியதும் எனக்குச் சந்தேகம் வந்து விட்டது. எனவே தான், கதை அது இதுன்னு ரீல்விட ஆள் ஆடிப் போய் விட்டார். உடனே புரிந்து கொண்டேன். ஏதோ விபரீதம் நடந்து இருக்குன்னு போலீசுடன் வந்து விட்டேன்'' என்றான்.

இன்ஸ்பெக்டர் ''தேங்ஸ் தம்பி என்று நன்றி கூறி ''டேய் நடங்கடா'' என்று பக்கிரியையும், பீட்டரையும் இழுத்துச் சென்றார்.

''பாபு பள்ளிக்கு இன்னும் கால் மணி இருக்கு. கிளம்பு. சார் நீங்களும் ஆபீசுக்குப் போங்க. பாபு, வா போகலாம்'' என்று சுகுமார் கூற இருவரும் புறப்பட்டனர். சுகுமார் யார்? கில்லாடிக்கு கில்லாடியாச்சே!



வளர்ச்சி!

கண்ணன் வீட்டுத் தோட்டத்தில் பலவகை மரங்கள் இருந்தன. அதில் வாழை மரமும், தென்னை மரமும் இல்லாதது அவனுக்குப் பெரும் குறை யாக இருந்தது. அவனது விருப்பப் படியே அவன் தந்தை வாழைக்கன்று ஒன்றையும், தென்னங்கன்று ஒன்றை யும் நட்டார். கண்ணனுக்கு ஒரே மகிழ்ச்சி! அவன் தன் கைகளாலேயே அவைகளுக்குத் தண்ணீர் ஊற்றிப் பாது காத்து வந்தான். அவற்றின் வளர்ச்சியை தினமும் காண்பதில் அவனுக்கு அள வற்ற மகிழ்ச்சி.

கண்ணனின் ஆசைக்கேற்ப வாழைக் கன்று மளமளவென்று வளர்ந்து இலை களை விரித்து அழகான மரமாகி விட் டது. ஆனால், தென்னங்கன்று மட்டுமே ஒருசில மட்டைகள் மட்டும் விட்டு விட்டு இன்னமும் கன்றாகவே இருந் தது. கண்ணனுக்கு வாழை மரத்தைப் பார்க்கும்போதெல்லாம் உற்சாகமாக இருக்கும். அதன் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்து போவான். தென்னங்கன்று இருந்த பக்கம் அவன் திரும்புவதே இல்லை. அதைப் பார்க்கும் வாழை மரத்துக்கு ஒரே பெருமையாக இருக் கும். கர்வத்தோடு தென்னங்கன்றை இகழ்ச்சியாகப் பார்க்கும்.

"பார்த்தாயா! நம் இருவரையும் ஒன்றாகத்தானே நட்டார்கள்? நான் எப்படி வளர்ந்து விட்டேன் பார்? கூடிய சீக்கிரம் பலன் கொடுக்கப் போகிறேன். நீ இன்னும் கன்றாகவே இருக்கிறாயே? நீ எப்பொழுது மரமாவது... பலன் தரப் போவது...?" என்று திமிராகப் பேசி யது.

தென்னங்கன்று பதில் கூறாது மென் மையாகச் சிரித்தது.


ஆயிற்று. வாழை மரம் குலைதள்ளி விட்டது. மிக அழகான, நேர்த்தியான வாழைக் காய்கள் சீப்பு, சீப்பாகத் தொங்கின. பார்க்கும்போதே 'என்னை சமைத்துச் சாப்பிடுங்களேன்' என்று அழைப்பதைப் போல் இருந்தது. அதன் வளர்ச்சியைக் கண்டு கண்ணன் பூரித்துப் போனான். அப்போதெல்லாம் வாழைக் கன்று தென்னங்கன்றைப் பார்த்து கர் வத்தோடு சிரிக்கும்.

அன்று கண்ணன் வீட்டில் ஏதோ விருந்து. அ த ற் கு ச் சமையலுக்கு வாழைக்காய் வேண்டுமென்று குலையை வெட்டி விட்டார்கள்.

கழுத்து அறுபட்டது போல் வாழை மரம் துடித்தது. அப்பொழுதுதான் தென்னங்கன்று முதன் முறையாகப் பேசியது.

''பார்த்தாயா, உன் வாழ்வை? ஒரு குலையோடு உன் வாழ்க்கை முடிந்து விட்டது. இன்னும் சிறிது நேரத்தில் உன்னை உரித்துத் தண்டாக்கி அதையும் எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். நான் உன்னைப் போல் இல்லை. நான் வளர வருடக்கணக்கானாலும் குலை, குலையாக இனிமையான காய்களை அடுத்த தலைமுறைக்கும் கூடக் கொடுத்துக் கொண்டே இருப்பேன். கண்ணனின் பேரனைக் கூட நான் பார்ப்பேன். அவனுக்குக் கூடப் பயன்படுவேன். இனிமேலாவது யாரையும் குறைவாகவும், இகழ்ச்சியாகவும் பேசாதே'' என்று அடக்கத்துடன் கூறியது தென்னங்கன்று!

– எம். சங்கர், ஏம்பலம்.



சால்வை!

நெடுங்கால நண்பர் ஒருவர் முல்லாவைச் சந்திக்க வந்தார். முல்லா அவரை வரவேற்று சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

''இந்த ஊரிலுள்ள என் நண்பர்களுக்கு உம்மை அறிமுகம் செய்து வைக்கிறேன்'' என்று அழைத்தார் முல்லா.

''என் மேலாடை கிழிந்துள்ளது. உன் சால்வையைக் கடனாகத் தந்தால் மேலே போட்டுக் கொண்டு வருகிறேன்'' என்றார் நண்பர்.

வேறு வழியின்றி விலைமதிப்பற்ற ஒரு சால்வையை நண்பருக்குத் தந்தார் முல்லா.

இருவரும் வெளியே வந்தனர். வழியில் சந்தித்த நண்பர் எல்லோரிடமும், ''இவர் என் நெருங்கிய நண்பர், இவர் போட்டிருக்கும் சால்வை என்னுடையது'' என்று அறிமுகம் செய்தார் முல்லா.

எரிச்சலடைந்த நண்பர், ''இனி யாரிடமும் அறிமுகம் செய்து வைக்கும் போது, இந்தச் சால்வை உம்முடையது என்று சொல்லாதீர்'' என்றார்.

முல்லாவும் ஒப்புக் கொண்டார்.

இருவரும் சிறிது தூரம் சென்றனர். அங்கு வந்த ஒருவரிடம் ''இவர் என் நெருங்கிய நண்பர். இவர் போட்டிருக்கும் சால்வை என்னுடையதல்ல'' என்று அறிமுகம் செய்தார்.


கடுப்படைந்த நண்பர், ''இனி இந்தச் சால்வையைப் பற்றி எதுவும் சொல்லா தீர்'' என்றார்.

அடுத்தபடியாகச் சந்தித்த நண்பரிடம் ''இவர் என் நெருங்கிய நண்பர் இவர் போட்டிருக்கும் சால்வையைப் பற்றி நான் எதுவும் பேச மாட்டேன்'' என்று அறிமுகம் செய்தார் முல்லா.

கோபமடைந்த நண்பர் சால்வையை முல்லாவின் முகத்தில் எறிந்து விட்டுப் புறப்பட்டார்.

– ந. கமலக்கண்ணன், ஈரோடு – 3.

பிருந்தாவனக் கவியரங்கம்





யானை!

யானை இது யானை
யார்க்கும் அஞ்சா யானை,
வானை நோக்கித் துதிக்கை
வாழ்த்திச் சொல்லும் யானை.

அழகு மணி ஒலிக்க
அசைந்து வரும் யானை.
பழங்கள் கரும்பு வெல்லம்
பெரிதும் விரும்பும் யானை.

காசு கொடுத்தால் வாங்கும்
கண்கள் சிறுத்த யானை.
வீசி வீசிக் காதை
விரித்து நடக்கும் யானை!

- சக்தி ஜனனி,
சிதம்பரம் - 608 001.

கப்பல்

கப்பல் நல்ல கப்பலாம்
காகித ந்தால் செய்ததாம்
கரியும் புகையும் இல்லையே
காற்றும் தள்ள வில்லையே
இஞ்சின் முன்னால் இல்லையே
எப்படி ந்தான் செல்லுதோ?

ஓடும் நீரில் விட்டதும்
ஓடும் கப்பல் நீரிலே
நீரின் ஓட்டம் நின்றதும்
நின்று போகும் கப்பலே
பாரம் ஏற்ற வேண்டுமோ?
பயணம் செய்ய வேண்டுமோ?
எந்தன் கப்பல் அதற்கெல்லாம்
ஏற்ற தில்லை இல்லையே!

- எம்.எஸ். மலர்கொடி,
சங்கமங்கலம்.



அடியேனின் கனவு!

நல்ல இனிய கனவு
நானும் கண்ட கனவு
சொல்ல வந்தேன் அதனை
சிரித்து ரசித்துக் கேட்பீர்.

மூட்டைப் பூச்சி ஒன்றின்
முதுகைச் சொரிந்து கொடுத்தேன்!
ஒட்டகச் சிவிங்கி கூட
ஓட்டல் சென்று தின்றேன்!

ஆமைக் குட்டி முதுகில்
ஆற்றைக் கடந்து போனேன்!
அம்மா ஆடு கத்த
அதையும் ஏற்றிச் சென்றேன்!

பெரிய அண்டா நிறைய
பாதாம் அல்வா தின்றேன்!
அருமை ஐயா அருமை
அடியேன் கண்ட கனவு!

- கே. அர்விந்த் சுந்தரராஜன்,
மதுரை.




முட்டாள் ராஜகுமாரன்


கதை – குமரன்

படம் –




சுயம்வரம் நடத்துவோம்... உனக்கு இஷ்டமானவரைத் தேர்ந்தெடு!
அது சரி! ஆனால் ஒருவரை மணந்தால் மற்றவர்கள் கோபப்பட்டு...
நம் நாட்டின் மீது படையெடுக்கவும் கூடுமே...!
ஆமாம், இதற்கு என்ன செய்வது...?
ராஜா மந்திரியை அழைத்து...
இதற்கு ஒரு வழி சொல்லுங்கள்!
சரஸ்வதிக்கு முன்யோசனை அதிகம்... ஆனால் பிரச்னைக்கு விடை என்ன?...?
மந்திரி யோசித்து...
அரசே! உங்கள் மகள் ரொம்ப புத்திசாலி; ஆனால் அவள் ஒரு முட்டாளுக்கு மாலையிட வேண்டும்!
என்ன! என்ன!
என்ன சொன்னாய்...?
கோபப்படாதீர்கள்! முழுக்கக் கேளுங்கள்...!



அரண்மனை ஜோசியரை அழைத்து சரஸ்வதிக்குப் புதிதாக ஒரு ஜாதகம் எழுதுவோம். இந்த ஜாதகப்படி சரஸ்வதி ஒரு மூடனுக்குத்தான் மாலையிடுவாள் என்றிருக்க வேண்டும்...
மந்திரி திட்டத்தை மேலும் விவரிக்க...
பேஷ்!
நல்ல யோசனை!
சுயம்வர மண்டபம் உருவாகிறது...
வேலைகள் சீக்கிரம் நடக்கட்டும்... இன்னும் ஒரு மாசம்தான் பாக்கி!
எல்லா அரசர்களுக்கும் ஓலை அனுப்பப்பட்டது...
தூதர்களே! சுயம்வரத் தேதியைக் குறிப்பிட்டு, அறுபத்தி நாலு தேச அரசகுமாரர்களையும் வரச் சொல்லுங்கள்...!
சுயம்வர நாள் நெருங்க...
இளவரசி! அதோ அங்க தேசத்து இளவரசர்... யானை மீது வருபவர் கலிங்க நாட்டவர்!


ரதங்களிலும் பல அரசகுமாரர்கள் வந்தனர்...
தேவி! கல்யாணம் ஆகிச் சென்றால் தோழியை மறந்து விடுவீர்களா?
உனக்குக் கேலியாக இருக்கு... எனக்குக் கவலையாக இருக்கு...
சுயம்வர மண்டபம் நிறைந்தது...
இளவரசி சரஸ்வதி வருகிறார்... பராக்!
மாலை ஏந்தி சரஸ்வதி வர...
ஆகா, என்ன அழகு!
அன்ன நடை!
தாமரை முகம்!
மன்னர் பேசினார்...
என் அழைப்புக்கு இணங்கி வந்துள்ள இளவரசர்களே, நன்றி; வணக்கம். என் அருமை மகளின் அழகும் ஆற்றலும் ஜகப் பிரசித்தி... ஆனால்...
...இவள் ஜாதகப்படி இவள் ஒரு முட்டாளுக்குத்தான் மாலையிடுவாள் என்பது ஜோசியரின் கணிப்பு. எனக்கு அதில் நம்பிக்கை இல்லை... அதனால்தான் உங்களையெல்லாம் அழைத்தேன்...


ராஜகுமாரர்களுக்கு ஏகக் கோபம்...
முட்டாளுக்குத் தான் வாழ்க்கைப் படுவாள் என்றால் என்னை ஏன் அழைத்தீர்? நான் கிளம்புகிறேன்...
சே! அவமானம்!
ஹும்... சுயம்வரமாம், சுயம்வரம்...
நான் ஒன்றும் முட்டாள் இல்லை; போய் வருகிறேன்!
எல்லா இளவரசர்களும் சென்றுவிட, கூர்ஜர தேசத்து ராஜகுமாரன் மட்டும்...
ம்... நான் ஒருத்தன் தான் பாக்கி... இளவரசி எனக்குத் தான் மாலையிடணும்...!
மன்னர் வியப்படைந்து...
இளவரசே! என் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு முட்டாள் பட்டம் பெற இஷ்டம் தானா...?
கூர்ஜர இளவரசன் அமைதியாக...
அரசே! என் ஜாதகப்படி மிக மிக புத்திசாலியான ஒரு பெண் தான் எனக்கு மனைவியாக வருவாள் என்று ஜோசியர் சொல்லியிருக்கிறார்...!


நான் என் மனைவியாக ஏற்கும் உங்க பெண்ணோ மகா புத்திசாலி என்பது உலகப் பிரசித்தி!
அப்படிப்பட்ட புத்திசாலி ஒரு முட்டாளுக்கு மாலையிட எப்படி சம்மதிப்பாள்?
அதனால் இந்த சுயம்வரமே ஒரு நாடகம் - அப்படித்தானே?
உங்களுக்கு முட்டாள் பட்டம் கட்ட நினைத்து நான்தான் முட்டாளாகி விட்டேன்...!
அரசகுமாரி சரஸ்வதி சந்தோஷத்தில் முகம் மலர...
உங்களைக் கணவராக அடைவது என் பாக்கியம்...
திருமணம் முடிந்து இருவரும் யானை மீதேறி பவனி வந்தனர்...
வாழ்க!
வாழ்க!
முற்றும்

பறவை மருத்துவமனை!



ராஜு சோலி என்ற மருத்துவர் பறவைகளுக்கான ஓர் மருத்துவ மனையைக் கட்டியிருக்கிறார். சமண மதத்தவர்களில் (ஜெயினர்களால்) கட்டப்பட்ட இந்த மருத்துவமனை உலகிலேயே முதன் முதலாக பறவைகளுக்காகக் கட்டப்பட்டதாகும். புது தில்லியில் இருக்கும் இந்த மருத்துமனைக்கு ஆண்டுதோறும் 20,000 பறவைகள் சிகிச்சைக்காக வருகின்றன. அடிபட்ட பறவை, காயமடைந்த பறவைகளுக்கு 2 முதல் 4 வாரங்கள் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் இந்த மருத்துவமனைக் கட்டடத்தின் மேற் கூரை திறந்து விடப்பட்டு குணமடைந்த பறவைகள் வெளியே சுதந்திரமாகப் பறக்கவிடப் படுகின்றன. இங்கு 500 பறவைக் கூண்டுகள் உள்ளன. ஞாயிறன்று அவற்றின் கண்களுக்கு லோஷன் தடவப் படுகின்றது. செவ்வாயன்று வைட்டமின் மாத்திரைகள் கொடுக்கப் படுகின்றன. வியாழனன்று டெட்ராஸைக்கிளின் என்ற ஊசி போடப்படுகின்றது. அவை களுக்கு உணவுக்காக ஒரு அலுமினியம் பாத்திரத்தில் தினமும் 400 கிராம் விதைகள் வைக்கப் படுகின்றன. இவை இரண்டே மணி நேரத்தில் காலியாகி விடுகிறது.

-- இந்திரா கோபாலன், திருச்சி.

3. முடியும்!

பரதன் அலறுகிற வகையில் அந்தத் தூக்கில் என்னதான் இருந்தது? பாம்பா? தேளா? இரண்டும் இல்லை. உள்ளே வெஜிடபிள் பிரியாணி இருந்தது. அதற்கு மேலே ஒரு சிறிய வாழை இலையில் வெங்காயத் தயிர் பச்சடி இருந்தது.

இந்தச் சுவையான உணவைப் பார்த்து அவன் ஏன் அலற வேண்டும்?

பரதன் தனது தூக்கில் கொண்டு வந்தது, வெஜிடபிள் பிரியாணியல்ல... அதனால் 'இது எப்படி வந்தது?' என்று திகைத்தான்.

அந்தத் தூக்கு அவனுடையது தானா?

ஆமாம். அவனுடையதேதான்.

அந்த வகுப்பில் மிக எளிய குடும்பத்துச் சிறுவர்கள் கூட எவர்சில்வர் டிபன் பாக்ஸ் எடுத்து வந்தனர். அலுமினியப் பாத்திரம் எடுத்து வருபவன் அவன் ஒருவன்தான்.

அதனால் தனது பாத்திரத்தில் இந்தச் சுவையுணவு எப்படி வந்தது என்று யோசித்தான்.

அப்போது வேகமாக வந்த ஒரு சைக்கிள் அவன் அருகில் வந்து 'சரக்'கென்று, பிரேக் போட்டு நின்றது.

பிரியாணியையே உற்றுப் பார்த்து யோசித்துக் கொண்டிருந்த பரதன், இந்தச் சத்தம் கேட்டுத் தலையைநிமிர்த்தினான்.

சைக்கிளின் ஹாண்டல்பாரை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு, சைக்கிளை வலப்பக்கம் கொஞ்சம் சாய்த்து, வலக் காலை நிலத்திலே ஊன்றியபடி காட்சியளித்தான் ஞானசம்பந்தம். அவன் முகத்தில் குறுநகை அரும்பிய படி இருந்தது.

''பரதா, இன்னும் சாப்பிடலையா?''

பரதன் 'இல்லை' என்பதற்கு அடையாளமாகத் தலையை வலமும் இடமுமாக அசைத்தான்.

''ஏன்? பசிக்கலையா?''

''பசிக்கிறது. ஆனால் என் தூக்கில் நான் கொண்டு வராத பிரியாணி இருக்குது. இது எப்படி வந்ததுன்னு தெரியலே.''

''பாத்திரத்தில் பிரியாணியில்லாமல் நீ கொண்டு வந்ததே இருந்திருந்தால் இந்நேரம் சாப்பிட்டிருப்பாயா?''

பரதன் ஒருகணம் திகைத்தான்.

''என்ன கேட்டே?''

''ஏன், என் கேள்விகள் காதிலே விழலையா? உன் பாத்திரத்தில் பிரியாணி



நூறு ரூபாய் இரகசியம்

டாக்டர் பூவண்ணன்

யில்லாமல், நீ எதைக் கொண்டு வந்தாயோ அதுவே இருந்திருந்தா இந்நேரம் சாப்பிட்டிருப்பாயான்னு கேட்டேன்.''

''ஞானம், நீ என்ன சொல்றே?''

பரதன் குழப்பத்தோடு கேட்க, ஞானசம்பந்தம் அதே குறுநகையோடு, ''பரதா! உன் பாத்திரத்தில் பிரியாணி இல்லாமல், நீ கொண்டு வந்தையே, அந்த அரைச் செங்கல் இருந்திருந்தா, அதை இந்நேரம் சாப்பிட்டிருப்பாயான்னு கேட்டேன்'' என்றதும் பரதன் முகத்தில் கலவரம் படர்ந்தது.

''ஞானம்... நீ... நீ...'' என்று இழுத்து, மேலே பேச முடியாமல் பரதன் திணறினான்.

''பரதா, தற்செயலா உன் தூக்கை நான் கீழே தள்ளியிருப்பேன். அதைத் தாங்கிப் பிடிச்ச போது மூடி பாதி திறந்து கொண்டது. அதைச் சரியா மூட முழுசா திறந்த போது, உள்ளே பாதி செங்கல் இருந்தது தெரிஞ்சது. பரதா, உன் தூக்கில் பிரியாணியைப் பார்த்து நீ திகைச்சதை விட நான் அதிகமா திகைச்சுட்டேன்.''

பரதன் ஏழை மாணவன். அம்மா மூன்று வீட்டில் வீட்டு வேலை செய்து ஏதோ ஓரளவு சம்பாதித்தாள். அது போதாத போது, பக்கத்து வீட்டு வெள்ளியங்கிரி உதவுவார்.

பரதன் பகலுணவுக்கு எப்போதும் தயிர் சாதமோ, தண்ணீர் ஊற்றிய பழைய சாதமோ கொண்டு வருவான். இரண்டும் இல்லாத நாளும் சில சமயம் வரும். அப்போது பட்டினி இருந்து விடுவான். ஆனால் பழைய பள்ளி மாணவர்கள், ''பரதா, நீ சாப்பிட வரலையா?'' என்று கேட்டுத் துளைத்து விடுவார்கள். அவன் சாப்பாடு கொண்டு வரவில்லை என்பது தெரிந்தால், அவர்கள் தமது உணவை அவனுக்குப் பங்கிட்டுத் தருவார்கள். அதுபோன்ற நிலை புதுப் பள்ளிக்கூடத்தில் ஏற்படக் கூடாது என்று நினைத்தான். அதனால் தொடக்கத்திலிருந்தே யாருடனும் சேராமல் தனியே சாப்பிட்டு வந்தான். அன்றைக்குக் கொண்டு போக சாதம் இல்லை என்றதும் பட்டினி இருக்க முடிவு செய்தான். ஒருவேளை உணவில்லாமல் இருப்பது அவனுக்குப் பழக்கமானதுதான். ஆனால் ஞானமோ பிறரோ, ''என்ன, டிபன் பாக்ஸ் கொண்டு வரலையா?'' என்று கேட்டு விட்டால் என்ன செய்வது? அதனால் தூக்கை எடுத்துக் கொண்டான். அதைத் தற்செயலாக யாராவது தூக்கிப் பார்த்து, 'உள்ளே ஒன்றும் இல்லை' என்பதை தூக்கின் கனமற்ற தன்மையில் தெரிந்து கொள்ளக் கூடாதே! அதனால் அதில்



ஒரு அரைச் செங்கலைப் போட்டுக் கொண்டு வந்தான்.

ஆனால் அதை ஞானம் கண்டு பிடித்து விடுவான் என்று எதிர்பார்க்கவில்லை.

''ஞானம், இதில் பிரியாணி வச்சது நீதானா?''

''ஆமாம். பாத்திரத்துக்குள்ளே கல்லைப் பார்த்ததும் என் மனசு துடிச்சது.

உன்னைப் போல புத்திசாலிப் பையன் பகல் சாப்பாடு இல்லாமல் பட்டினி இருப்பதைப் பொறுக்க முடியலே. அத னால், உன் தூக்கை எடுத்துக்கிட்டு, அன்னபூர்ணா ஓட்டலில் பிரியாணி வாங்கி வந்து டெஸ்கில் வைச்சுட்டேன். பரதா, எனக்கு ஒரு உதவி செய்வாயா?''

''சொல் ஞானம். உனக்கு எந்த உதவி வேண்டுமானாலும் சொல். செய் கிறேன்.''

''பிராமிஸ்...?''


''பிராமிஸ்!''


''தேங்க் யூ பரதா. எனக்கு நீ செய்ய வேண்டிய உதவி என்ன தெரியுமா? என் துன்பத்தைப் போக்குவது! என்னை மகிழ்ச்சியடையச் செய்வது.''

பரதனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''உன் துன்பத்தைப் போக்குவதா? என்ன உன் துன்பம்?''

''பரதா, அறிவும் ஆற்றலும் பெற்ற உன்னைப் போன்ற ஒருவன் சாப்பாட் டுக்குக் கஷ்டப்படக் கூடாது. உன் டிபன் பாக்ஸில் அரைச் செங்கல்லைப் பார்த்துத் துன்பப்பட்டேன். அந்தத் துன்பத்தை இனி நான் அனுபவிக்கா மலிருக்க நீ துணை செய்ய வேண்டும். நீ இனிமேல் தினமும் பகலில் என் னுடன் சாப்பிட்டால் மகிழ்ச்சியடை





"குரங்காரே முதலையண்ணனுக்குப் பல்வலி. பார்க்கச் சொன்னால் ஓடறியே! நீயெல்லாம் ஒரு பல் வைத்தியரா?"

"இசுர்னு பஞ்ச தந்திரக்கதை நினைப்பு வந்திட்டுதே!



"உங்க ஓட்டல்ல சீனாக்காரங்க கூட்டம் அதிகமா வருதே?"

"SNACKS கிடைக்கும் என்பதற்குப் பதில் SNAKES கிடைக்கும்னு போர்டுல எழுதிட் டாங்க."



"நான் பக்கத்துக் கிளைக்குத் தாவிப் போறேன். கெட்டியா புடிச்சுக்க."

"குரங்குப் புடியா புடிச்சுக் கறேம்மா."

வேன் நான். இந்த மகிழ்ச்சியை நான் அடைய நீ துணை செய்ய வேண்டும்.

ஞானசம்பந்தம் சொன்னதைக் கேட்டதும் பரதன் பதில் பேசவில்லை. அவன் கண்கள் பேசின. அவை ஞானத்தின் கனிவையும் கருணையையும் கண்டு கலங்கின.

"பரதா, இன்றைக்கு இந்தப் பிரியாணியைச் சாப்பிடு. நாளை முதல் என்னுடன் சாப்பிடு. என் வீட்டுக்கு வந்து சாப்பிடத் தயங்கினால் சொல். நம் ரெண்டு பேருக்கும் சாப்பாட்டைக் கேரியரில் அனுப்பச் செய்கிறேன். என் தந்தை ஒரு பெரிய தொழிற்சாலையில் மேனேஜர். கைநிறையச் சம்பாதிக்கிறார். வசதியாக வாழ்கிறோம். அதனால் உனக்கு ஒருவேளை சாப்பாடு போடுவதில் எங்களுக்குக் கஷ்டம் இல்லை. நஷ்டம் இல்லை. பரதா உன் சம்மதத்தைச் சொல்."

கலங்கிய கண்களில் உருண்டு திரண்ட கண்ணீர் முத்துக்கள் தயங்கித் தயங்கிக் கீழே விழுந்தன. இதுதான் ஆனந்தக் கண்ணீரோ? பரதனுக்கு ஆனந்தம் எதனால்? பகல் உணவுக்கு இனி பஞ்சம் இல்லை என்பதாலா? இல்லை! இல்லை! தன்னிடம் பேரளவு பாசம் கொண்ட ஞானசம்பந்தத்தை நண்பனாகப் பெற்றதால் வந்த ஆனந்தம்! அந்த ஆனந்தம் தந்தது கண்ணீரை!

"பரதா, பிராமிஸை மறந்துடாதே. சம்மதம்னு சொல்."

பரதன் தன் கையை நீட்டினான். ஞானம் அதைப் பற்றிக் கொண்டான். பரதன் ஞானத்தின் கையைப் பாசம் வெளிப்பட அழுத்தியவாறு, "சம்மதம்" என்று சொன்ன போது, அவன் கண்களிலிருந்து கண்ணீர் கோவைக் குற்றாலமாகக் கொட்டியது.

மாலை நேரம். மணி ஐந்திருக்கும். தடாகம் சாலையில், ஒரு பெரிய காலி மனையில் நின்றிருந்தான், பரதன்.

அந்த மனை அவன் வீட்டுக்கு மிக அருகே இருந்தது. பல ஆண்டுகளாகக்

காலியாய் இருந்தது. அதன் ஒரு ஓரத்தில் பூவரசம் மரம் ஒன்றிருந்தது. அதனடியில் மரத்தின் வேரில் உட்கார்ந்து பொழுதுபோக்குவது பரதனின் வழக்கம். சில சமயம் வெள்ளியங்கிரியும் அவனோடு உட்கார்ந்து அவனது அறிவுக்கு விருந்தாகும் விஷயங்களைச் சொல்வது வழக்கம்.

அந்தக் காலி மனையில் பல மாடிக் கட்டடம் கட்ட உரிமையாளர் திட்டம் இட்டார். பில்லர் எடுக்கப் பல குழிகள் தோண்டப்பட்டன. மேற்கொண்டு கட்டட வேலை நடைபெறவில்லை. அதன் பின்பும் பரதன் அங்கு அடிக்கடி வருவான். அன்றும் பரதன் அந்த இடத்துக்கு, வந்து பூவரச மரத்தின் அடியில், ஒரு பாறை மீது உட்கார்ந்தான்.

இப்போது என்ன செய்லாம்?

யோசித்தான்!

''நம் இலட்சியம் நிறைவேறப் பயிற்சி எடுத்துக் கொள்ளலாம்'' என்று நினைத்தான் பரதன்.

''வாழ்க்கையில் பெரும் புகழ்பெற வேண்டும். மக்கள் தன் பெயரைக்



கேட்டதும் ஒரு மரியாதை தர வேண்டும். அத்தகைய நிலைபெற வேண்டும்'' என்று பரதனுக்கு ஆசை. ஆனால் அவன் உருவம் குள்ளமாயிற்றே! தன்னால் புகழ்பெற முடியுமா?

பரதன் கேட்ட போது, அவனுடைய குருவான வெள்ளியங்கிரி, ''முடியும்! முடியும்! முயன்றால் எதுவும் முடியும். முடியாது என்பது இந்த உலகத்தில் கிடையாது. பரதா, கடலை அடக்கலாம்! மலையை உடைக்கலாம்! அதற்குத் தேவை முயற்சி! விடாமுயற்சி! இடையில் விழுந்து விடாத முயற்சி'' என்று கூறினார்.

பரதனின் உருவம் குள்ளம்.

இந்த உருவத்திலும் எந்தத் துறையில் புகழ் சேர்க்க முடியும்?

வெள்ளியங்கிரி ஆராய்ந்தார்.

முடிவில் இரண்டு துறைகளைத் தேர்ந்தெடுத்தார்.


ஒன்று : பேச்சு!

மற்றொன்று : எழுத்து!

புகழ்பெற்ற பேச்சாளனாவதற்கும், எழுத்தாளனாவதற்கும் உயரமான உருவம் தேவையில்லை.

உலகத்தின் தலைசிறந்த பேச்சாளன் டெமஸ்தனீஸ்! அவனுக்குப் பேச்சாளனாக ஆசை. ஆனால் அவனுக்கோ திக்கு வாய். பேச்சுக்கு உயரம் தேவையில்லை. ஆனால் உதடுகள் தெளிவாகச் சொற்களை உச்சரிக்க வேண்டும். திக்குவாய் டெமஸ்தனீஸ் பேச்சாளனாக முடியாது என்று பலரும் கூறினர்.

''எங்கள் நாட்டு வெண்சாமர விசிறியில் கூட இத்தனை காத்து வராது. ஆப்பிரிக்க யானை அண்ணே உங்க காதே விசிறி!''



வாயின் இருபுறமும் கூழாங்கற்களை அடக்கிக் கொண்டு, நைல் நதியோரம் தினமும் பல மணி நேரம் பேசிப் பழகினான் டெமஸ்தனீஸ்.

அவனது திக்குவாய் தேய்ந்து மறைந்தது. அவன் வாயைத் திறந்தால் நைல் நதியின் பிரவாகம் போலச் சொற்கள் ஓடி வந்தன. அவனது பேச்சைக் கேட்க, ஊரே திரண்டு வரும். உலகத்தின் தலைசிறந்த பேச்சாளன் என்னும் பெயர் பெற்றான் டெமஸ்தனீஸ்.

வெள்ளியங்கிரி டெமஸ்தனீஸைப் பற்றிச் சொல்லி விட்டு, ''பரதா, உனக்கென்ன திக்குவாயா?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்றான் பரதன்.

''அப்படியானால் நீ டெமஸ்தனீஸை விடச் சிறந்த பேச்சாளனாகலாம்.''

வெள்ளியங்கிரி சொன்னதும் பரதன், ''நான் தலைசிறந்த பேச்சாளனாவேன்'' என்று கூறிக் கொண்டான். அதற்கான பயிற்சிகளையும் வெள்ளியங்கிரியின் துணையோடு மேற்கொண்டான்.

நேரம் கிடைக்கும் போது ஆளற்ற ஓரிடத்தில் ஏதோ ஒரு பொருள் பற்றிப் பேசுவது அவன் வழக்கம்.

அன்று பூவரசம் மரத்தடியில் உட்கார்ந்த பரதன் பேச்சுப் பயிற்சி மேற்கொள்ளலாம் என்று எழுந்து நின்றான்.

பொருள்?


''அறிவே செல்வத்தை விடச் சிறந்தது.''

இப்படி ஒரு தலைப்பை அவனே கொடுத்துக் கொண்டு பேசத் தொடங்கினான்.

கையை ஆட்டி, குரலை ஏற்றி யிறக்கி, தலையை அசைத்துப் பேசிக் கொண்டே இங்கும் அங்குமாக நடந்தான்.

அப்போது சாலையில் ஒரு ஸ்கூட்டர் வந்து நின்றதையும், அதிலிருந்த நாகேந்திரன் அவனை உற்றுப் பார்ப்பதையும் அவன் உணரவில்லை.

நாகேந்திரன் ஸ்கூட்டரிலிருந்து இறங்கினான். தனக்குத்தானே பேசிக்



கொண்டு நடக்கும், நிற்கும், நகரும் பரதனுக்குப் பைத்தியமோ என்று சந்தேகப்பட்டு அவன் அருகே வந்தான்.

பரதனுக்கருகே பில்லருக்காகத் தோண்டியிருக்கும் ஆழமான குழியைப் பார்த்தான். பரதன் அந்தக் குழிக்கு வெகு அருகில் நின்றபடி, பேசினான். ''அறிவினால் ஆகாதது இல்லை! அறிவு ஆஸ்தியைக் கொடுக்கும்! ஆபத்தைத் தடுக்கும்! அறிவு துன்பத்தை வெல்லும்! தோல்வியைக் கொல்லும்! அறிவு...''

பரதன் பேச்சைக் கேட்டபடி, ஆழமான குழியைப் பார்த்த நாகனுக்குத் திடீரென்று ஒரு குரூர எண்ணம் தோன்றியது. அவன் சட்டென்று பரதனைக் குழிக்குள் தள்ளி விட்டு ஸ்கூட்டரில் ஏறிப் பறந்தான்.

நிலைதடுமாறிக் குழியில் விழும் நிலையில்தான் பரதன் உணர்வு பெற்றான். நாகனுடைய முகத்தை ஒரு நொடி பார்த்தான். மறு நொடி குழியில் விழுந்து விட்டான்.

பரதன் எழுந்து நின்று மேல் நோக்கிப் பார்த்தான். அவனால் ஏற முடியாத உயரம்.

''என்னைக் காப்பாத்துங்கோ.''

பரதனின் குரலைக் கேட்க அருகே யாரும் இல்லை.

இருள் பரவி விட்டது.

''பல மாதங்களாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கும் குழியில் பாம்பு இருக்குமோ? தேள் இருக்குமோ?''

மீண்டும் பரதன் பயந்து, ''என்னைக் காப்பாத்துங்கோ'' என்று மீண்டும் மீண்டும் குரல் கொடுத்தான்.

அவன் குரலை அப்போதும் யாரும் கேட்கவில்லை.

இனிமேலும் யாரும் கேட்கப் போவதில்லை.

(தொடரும்)



பணிந்திடுங்கள்!

கோகுலக் கண்ணன் பாருங்கள்
குறும்புகள் செய்வான் ரசியுங்கள்
முகத்தைக் கண்டால் போதுங்கள்
மகிழ்ச்சியில் மூழ்கிக் களியுங்கள்.

குழலை இசைப்பான் கேளுங்கள்
குதித்தே ஆடுவான் பாருங்கள்.
மழலையர் கூடி அழைத்திட்டால்
மயங்கி வருவான் பிடியுங்கள்!

வெண்ணெய் கேட்டால் தந்திடுங்கள்.
விளையாட அழைத்தால் சென்றிடுங்கள்.
மண்ணைத் தின்ற மாதவனின்
மலரடி சரணம் பணிந்திடுங்கள்!

- ப. பாலாஜி, சென்னை - 106.



அணில்

மரத்தில் ஏறி இறங்கிடும்
மாதுளம் பழத்தைத் தின்றிடும்
விரைந்து கிளையில் தாவிடும்
வாலைத் தூக்கி ஓடிடும்!

கத்திக் கத்தி அழைத்திடும்
கண்டு நின்றால் ஓடிடும்.
மெத்தைப் படியில் ஏறிடும்
மெதுவாய் நின்று பார்த்திடும்.

எம்.ஜே. அருண்,
சென்னை - 61.



வெள்ளரி!

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
எருது போட்ட சாணத்தில்
தானாய் வளர்ந்த வெள்ளரி
தரை யெல்லாம் படர்ந்தன!

மஞ்சள் நிற பூக்களில்
பச்சை நிற பிஞ்சுகள்
தம்பி வந்து பார்க்கிறான்
தாவிப் பறிக்க நினைக்கிறான்!

முந்தி விட்ட பிஞ்சுகள்
வெம்பி கீழே விழுந்தன
பிஞ்சு உள்ளம் தாங்கலே
விம்மி விம்மி அழுதன!


அம்மா தண்ணீர் ஊற்றினாள்
அழகாய் காய்கள் காய்த்தன
அக்கா, தங்கை அனைவரும்
ஆர்வத் துடன் பார்த்தனர்!

- த. சரவணன், திருச்சி - 17.



R K SWAMY/BBDO CL 10101

பிருந்தாவனக் கவியரங்கம்



டெலிபோன்

'டிரிங் டிரிங்' டெலிபோனாம்!
டில்லியும் பேசும் டெலிபோனாம்!
விரும்பி எவரும் பேசவரும்
விந்தை மிக்க டெலிபோனாம்!

மதங்கள் சாதி இதற்கில்லை!
மொழியும் வெறியும் இதற்கில்லை!
பேதங்கள் காட்டும் குணமில்லை!
பெருமை மிக்க டெலிபோனாம்!

வியப்பு மகிழ்ச்சி துக்கங்களை
வேற்றுமை காட்டும் குணமில்லை
கயவர் நல்லோர் பேதமில்லை
கண்ணியம் மிக்க டெலிபோனாம்!

- ஆர். கே. அருண், மஞ்சூர்.

ஏழைகள் தோழன்!

தென்னை மரத்தைப் பாருங்கள்
தேங்காய் எத்தனை எண்ணுங்கள்!
எண்ணம் உயர்ந்து இருந்திட்டால்
எல்லாம் நன்மை அறியுங்கள்!
இளநீர் தருவது இம்மரமே!
இருக்கக் கூரை இம்மரமே
இயங்கும் குடிசைத் தொழிலுக்கு
இதமாய் உதவுது இம்மரமே!

கயறு மிதியடி சட்டங்கள்
கண்ணைக் கவரும் கலைப்பொருள்கள்
வியக்கும் வண்ணம் உருவாகி
வறுமை விரட்டுது இம்மரமே!

நன்றி கூறிட இயலாத
நல்லவன் இம்மரம் அறியுங்கள்!
என்றும் என்றும் என்றென்றும்
ஏழைகள் தோழன் போற்றுங்கள்!

- மு. பி. சிவக்குமார், நீலகிரி.





சோலைவனம்

பசுமை நிறைந்த சோலைவனம்
பலரும் மகிழும் சோலைவனம்
பூக்கள் மிகுந்த சோலைவனம்
புதுமை மிளிரும் சோலைவனம்

மனத்தை மயக்கும் சோலைவனம்
மனத்துயர் போக்கும் சோலைவனம்
மணம் மிகுந்த சோலைவனம்
மகிழ்ச்சி தந்திடும் சோலைவனம்

- பி. சதீஷ்குமார் (வயது 13),
சென்னை - 2.



சிலர் அழுவார் சிலர் சிரிப்பார்!






A. அழுவோர் எத்தனை பேர்? B. சிரிப்போர் எத்தனை பேர்?

கீதா

விடை: A-5; B-22.


ஏன்டா, அந்த ஆந்தை கவலையா உட்கார்ந்திருக்கு?
அதுக்கு மாலைக்கண் நோயாம்
மு. பூபாலன், மூங்கூர்பட்டு
என் நாலு வயசுத் தம்பிக்கு வீணை வாசிக்கத் தெரியுமே
நெசமாகவா!
ஆமாம். வீணைன்னு எழுதினவுடனே வாசித்து விடுவான்
ஜெயந்திமணியன் மதுரை
சிரிப்பு...
யானையாரே! என்ன புத்தகம் படிக்கிறீங்க....?
பருமனைக் குறைக்க எளிய வழிகள் தான்
தே. சோமசேகர்ஜி காவேரிப்பட்டணம்
நீ ஒழுங்கா படிக்காட்டி ஜோசியம் சொல்ற வேலைக்குத்தான் போகணும். சொல்லிட்டேன்!
அந்த ஸ்கூல்ல மட்டும் பசங்களை சேர்க்க ஏன் இத்தனை போட்டி?
ஒவ்வொரு பையனுக்கும், புத்தகம் சுமக்க கழுதை தராங்களாம்!



சோநம்பி

★ மா. கனகசபை, வடலூர்.

வானவில்லின் மறுபக்கம் எப்படி இருக்கும்? அதை நாம் காண முடியுமா?

சுவையான கேள்வி. வானவில் என்பதே ஓர் தோற்றம்தான். பொருள்




அல்ல. கண்ணாடியைப் பார்க்கிறோம். நம் உருவம் தெரிகிறது. இது ஓர் தோற்றம்தான். பொருள் அல்ல. இந்தத் தோற்றத்திற்கு மறுபக்கம் எப்படி இருக்க முடியும்? இதைப் போன்றது தான் வானவில்லின் தோற்றமும்.

★ வெ. தனிகைச்செல்வி, திருவள்ளூர்.

டஸ்நாமி (TSUNAMI) என்பது என்ன?

பெரிய பூகம்பங்கள், கடல் அடியில் உள்ள எரிமலை வெடிப்பு இவை ஏற்




படும் போது கடல் அலைகள் மிக உயரமாகக் கொந்தளித்து வீசும். இவற்றையே டஸ்நாமி என்கிறார்கள். அறிவியல் வளர்ச்சியின் சாதனைகளால் இந்த டஸ்நாமியின் அளவு எப்படி இருக்கும் என்று இப்பொழுது முன்கூட்டியே கணக்கிடப்படுகிறது!

★ து. கனகவல்லி, திருநாகேஸ்வரம்.

கிரீன்விச் நேரம் என்று குறிப்பிடுகிறார்களே, இது என்ன?

இங்கிலாந்தின் கிரீன்விச் நகரில் உலகப் புகழ்பெற்ற ஒரு வானிலை

ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது. இதில் கணிக்கப்படும் வானிலை, நேரக் கணக்குகள் மிகவும் துல்லியமாக இருக்




கும். இதன் கண்டுபிடிப்பு விவரங்களை வைத்தே மற்ற விளைவுகள் கணக்கிடப் படுகின்றன. இ ந் த ப் புகழ்பெற்ற வானிலை ஆராய்ச்சி நிலையத்தை அமைத்தவர் இங்கிலாந்தின் இரண் டாம் சார்லஸ் மன்னர்.

★ ப. அமிர்தகணேசன், தென்காசி.

முதல் ரேடியோ தொலைநோக்கியை யார் அமைத்தார்கள்?


முதல் ரேடியோ தொலைநோக் கியை (ரேடியோ டெலெஸ்கோப்) அமைத்த பெருமைக்கு உரியவர்



குரோட் ரோபர் (GROTE ROBER) என்ற இத்தாலிய விஞ்ஞானி.

★ க. கற்பூர பாண்டி, சாத்தூர்.

இந்தியப் பறவைகளில் மிகவும் உயர மானது எது?




சரஸ்நாரை எனப்படும் நாரை இனம் தான் இந்தியப் பறவைகளில் மிகவும் உயரமானது.

★ கு. சின்னராஜு, கோடிக்கரை.

இந்தியப் பறவைகளில் மிகப் பெரிய கூடு கட்டும் பறவை எது? தூக்கணாங் குருவிதானே?

இல்லை. மெகபோட் (MEGA-



PODE) என்ற பறவையே மிகப் பெரிய கூடு கட்டுகிறது. ஒரு வேடிக்கை, இது கூடு கட்டிக் குஞ்சு பொரிக்க மட்டுமே இந்தியா வருகிறது!

★ கெ. குணசேகரன், பாளையம் கோட்டை.

டாக்டர். அமரர் மு. வரதராசன் அவர்கள் ஷேக்ஸ்பியரின் படைப்புகளை மொழிபெயர்த்திருக்கிறாரா? அவை எங்கு கிடைக்கும்?

மு. வ. அவர்கள் ஷேக்ஸ்பியரின் மார்ச்செண்ட் ஆஃப் வெனிஸ், ஏஸ் யூ லைக் இட், 'மாக்பெத், டெம்பெஸ்ட், கிங்லியர், ஹேம்லெட் ஆகிய நாடகங்களை சிறுவர்களுக்கு ஏற்ற சிறுகதைகளாக ''ஷேக்ஸ்பியர் கதைகள்'' என்ற நூலாக வெளியிட்டுள்ளார். இது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், டி. டி. கே. சாலை, சென்னை - 18 என்ற முகவரியில் கிடைக்கும்.



★ மு. கண்ணப்பன், சிறுவாச்சூர்.

அதிக நாட்கள் மௌன விரதம் இருந்தவர் யார்?


இந்தியாவைப் பொறுத்தவரை இப்பெருமைக்கு உரியவர் கவியோகி அமரர் சுத்தானந்த பாரதியார் அவர்களே. இவர் மௌன விரதம் இருந்த காலம் தொடர்ச்சியாக 25 ஆண்டுகள்!



★ வ. தேவநாராயணன், காரைக்குடி.

செயின்ட் பேக்கர் என்பவர் யார்? இவருக்கும் சஹாரா பாலைவனத்துக்கும் என்ன தொடர்பு? 'மேட்ச் தி ஃபாலோயிங்' பகுதியில் இது இருந்தது.


சஹாரா என்பதுதான் இதில் குறிப்பு வார்த்தை இல்லையேல் கண்டுபிடித்திருக்க முடியாது. இவரது முழுப் பெயர் ரிச்சர்டு செயின்ட் பேக்கர். இவர் நியூசிலாந்துக்காரர். தாவர ஆராய்ச்சிக்கென தம் வாழ்நாளைச் செலவிட்டவர். சஹாரா பாலைவனம் ஆண்டுக்கு முப்பது மைல் வேகத்தில் பரந்து கொண்டிருக்கிறது என்ற பயங்கரமான உண்மையை உலகுக்கு முதலில் அறிவித்து எச்சரித்த ஆராய்ச்சியாளர் இவரே. தாவர ஆராய்ச்சிகளுக்கென இவரது பெயரால் சில பரிசுகள் வழங்கப்படுகின்றன.



★ பூ. பரமார்த்தி, தேப்பூர்.

நியூட்ரோன் குண்டுக்கும் மற்ற குண்டுகளுக்கும் என்ன வித்தியாசம்?

யானையைப் பானைக்குள் அடைக்கச் சொல்லும் கேள்வி இது. மற்ற குண்டுகள் எல்லாம் மனித உயிர்களை அதிகம் பாதிக்காது. கட்டடங்களுக்கு மட்டும் அதிக பாதிப்பை ஏற்படுத்தும். ஆனால் நியூட்ரோன் குண்டு உயிரினங்களையும் தாவரங்களையும் பூண்டோடு அழிக்கும்! காரணம் அதில் அடங்கியிருக்கும் பயங்கரமான கதிரியக்கம். வல்லரசுகளின் அணு ஆயுத



ஒழிப்பில், முதல் இடம் வகிப்பது இந்த நாசகார நியூட்ரோன் குண்டுதான் என்றால் இதன் பயங்கரத்தை ஊகித்துக் கொள்ளலாமே!

இரண்டாவது செருப்பு!

ஒரு காட்டில் மான் குட்டி ஒன்றும், முயல் குட்டி ஒன்றும் நண்பர்களாயிருந்தன. ஒருநாள் காட்டுக்கு வேட்டையாட வந்த மனிதன் ஒருவன் மான் குட்டியைப் பார்த்து விட்டான். வலை வைத்து மானைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு நடந்தான்.

தன்னை விடுவிக்க உதவுமாறு மான் நண்பன் முயலை அழைத்தது. முயல் ஓடி வந்தது. ''என் நண்பனை விட்டு விடு'' என்று மனிதனிடம் கெஞ்சியது.

''நல்லாக் கொழுத்த மான் குட்டி. இருபது பேர் வயிறு நிரம்பச் சாப்பிடலாம். உன் நண்பனை விட்டு விட நான் என்ன பைத்தியமா?'' என்று மானைத் தோளில் போட்டுக் கொண்டு நடந்தான் மனிதன்.



முயல் யோசித்தது. அதனிடம் இரண்டு அழகான செருப்புகள் இருந்தன. ஒன்றைக் கொண்டு வந்து வழியில் போட்டு விட்டு மறைந்து கொண்டது.

மானுடன் வந்த மனிதன் ஒற்றைச் செருப்பைப் பார்த்தான். ''எத்தனை அழகான செருப்பு! ஒரு செருப்பை வைத்துக் கொண்டு என்ன செய்வது?'' என்று நடந்தான்.

வெகுதூரம் அவன் போன பிறகு, முயல் குறுக்கு வழியில் அவன் போகும் வழியை அடைந்து இன்னொரு செருப்பையும் போட்டு விட்டு மறைந்து கொண்டது. கூடவே தனது இன்னொரு நண்பன் காட்டு எலியையும் அழைத்துக் கொண்டு காத்திருந்தது.

மானைத் தூக்க முடியாது தூக்கிக் கொண்டு வந்த மனிதன், கீழே கிடந்த இன்னொரு செருப்பைப் பார்த்தான். ''அடடா! இதன் இன்னொரு கால் செருப்பு வரும் வழியில் கிடந்ததே! அதை எடுத்து வந்திருந்தால் காலில் போட்டுக் கொண்டு நடக்கலாமே?'' என்று யோசித்தான்.

தோளில் மான் கனத்தது. அதை இறக்கி ஓரமாக மரத்தடியில் வைத்தான். ''சீக்கிரம் போய் அந்தச்செருப்பையும் எடுத்து வரலாம்'' என்று ஓடினான்.

அதற்காகவே காத்திருந்த முயல், காட்டு எலியுடன் வெளியே வந்தது. காட்டு எலி, தன் பற்களால் மானின் கட்டுகளைக் கத்தரித்து மானை விடுதலை செய்தது. எலிக்கு நன்றி கூறி விடைகொடுத்தது முயல்.

''உன் உதவிக்கு எப்படி நன்றி கூறுவேன்?'' என்று கண்ணீர் விட்டது மான்.


''நன்றி கூற வேண்டியது எனக்கல்ல. இந்த அருமையான செருப்புக்கு!'' என்று செருப்புகளை எடுத்துக் கொண்டு விரைந்து ஓடியது முயல். மானும் பின்தொடர்ந்தது!


எம். ஏ. ஜடாவர்மன்,
வாணியம்பாடி.

பறந்திடும் பலூன்கள்

ஆழி

முதன் முதல் பலூனை எப்படிப் பறக்க விட்டார்கள்? காற்று வெளியேறாத, உறுதியான துணியினாலான பலூனைச் செய்து, அதன் வாய் அருகே பஞ்சு, வைக்கோல் முதலியவற்றை எரித்து, பலூனை வெப்பக் காற்றினால் நிரப்பினார்கள். வெளியில் உள்ள காற்றைவிட வெப்பக் காற்று இலேசானது. எனவே, பலூன் மேலே எழும்பி காற்றில் பறந்தது!







1783-ஆம் ஆண்டு, செப்டம்பர் 19-இல், பிரான்ஸில், வெர்செய்ல்ஸ் என்னுமிடத்தில், 'மண்ட் கோல்ஃபிர்' சகோதரர்கள் பலூனில் ஒரு செம்மறி ஆடு, ஒரு கோழி, ஒரு வாத்து ஆகியவற்றை வைத்துப் பறக்கவிட்டார்கள். லினன் துணியாலான அந்த பலூன், வெப்பக் காற்று நிரப்பப்பட்டு, 8 நிமிடங்கள் வானில் பறந்தது. ஆனால், ஒரு மரக்கிளையில் சிக்கி, கயிறு அறுந்து அந்த ஆடு, கோழி, வாத்து எல்லாம் கீழே விழுந்தன.

முதன் முதல், 1783-ஆண்டு நவம்பர் உ௧-ஆம் நாள் தான், 'ரோஜியர், ஆர்லாண்ட்' என்னும் இரு பிரெஞ்சுக்காரர்கள் பலூனில் ஏறிக் கொண்டு உ௫ நிமிடங்கள் பாரீஸ் நகரத்தின் மீதும், பாரீஸ் நகரத்திலிருந்து 8 கி.மீ. தூரமும் பறந்தனர். வெப்பக் காற்று நிரப்பப்பட்ட பலூன் அது!









ராபர்ட் சகோதரர்கள், ஹைட்ரஜன் வாயு நிரப்பப்பட்ட ஒரு பலூனைப் பறக்கவிட்டனர். 3000 அடி உயரம் பறந்து சென்ற அது 24 கி.மீ. அப்பால் ஒரு வயல் வெளியில் விழுந்தது. விவரம் புரியாமல் பீதியடைந்த பிரெஞ்சு மக்கள் அதை அழித்துவிட்டனர்!


அதே 1783 ஆம் ஆண்டின் கடைசியில், பேராசிரியர் ஜே.சார்லஸ் என்னும் பிரெஞ்சுக்காரர், ஹைட்ரஜன் வாயு நிரப்பப்பட்ட பலூனில் 10,000 அடி உயரம் பறந்தார். பலூனில் இருந்த வாயுவைச் சிறிது சிறிதாக வெளியேறச் செய்து அவர் தரையில் இறங்கினார்.




முதல் தடவையாக, புரொப்பல்லரை இணைத்து, தேவையான திசையில் திருப்ப முடிகிற பலூனில், அயர்லாந்துக்காரரான 'மாங்க் மாசன்' என்பவர் 1843-இல், லண்டனில் பறந்தார்!



1849-இல், ஆஸ்திரியர்கள், ஆள் இல்லாத பலூன்களில், வெடிகுண்டுகளை வைத்து, வெனிஸ் நகரத்தின்மீது வெடிக்கச் செய்தார்கள்.




'பிளிம்ப்' என்னும் நீளவாட்டத்துப் பலூன்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றை விரும்பியவாறு செலுத்தலாம். இவற்றில் 'ஹீலியம்' என்னும் வாயு நிரப்பப் பட்டது. இது மிகவும் இலேசான வாயு. ஆனால் ஹைட்ரஜனைவிட கனமானது. என்றாலும், ஹைட்ரஜன் எளிதில் தீப்பற்றும்; ஹீலியம் எரியாது. 'ஹீலியம்' என்பது சூரியனைக் குறிக்கும் கிரேக்கச் சொல். 1868-இல் விஞ்ஞானிகள் இந்த வாயு, சூரியனில் இருப்பதாகக் கண்டுபிடித்தார்கள். 1898-இல் இந்த வாயுவை பூமியில் உற்பத்தி செய்தார்கள். இது ஓர் இயற்கை வாயு. முதன் முதல் 'பிளிம்ப்' பலூன் மூலம் அட்லாண்டிக் பெருங் கடலைக் கடந்தார்கள்.






1900-ஆம் ஆண்டில், 'பெர்டினாண்ட் வான் ஸிப்பெலின்' என்பவர், வேண்டிய திசையில் திருப்ப முடிகிற அமைப்பில், 'ஸிப்பெலின்' என்ற பலூனைப் பறக்கவிட்டார். அவர் அதில் ஏறிக்கொண்டு உலகின் பல பாகங்களையும் சுற்றிவந்தார். 1937-இல், ஜெர்மனியிலிருந்து ஐக்ய அமெரிக்காவுக்குப் பறந்த ஹைட்ரஜன் நிறப்பப்பட்ட 'ஹிண்டென் பர்க்' என்னும் ஸிப்பெலின் பலூன் ஒரு தீப்பொறி பட்டு விபத்துக்குள்ளாயிற்று. அதன் பிறகு, இந்தப் பலூன் பயணம் நிறுத்தப்பட்டது!


ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த 'ஆன்ட்ரி'யும் அவருடைய இரு சகாக்களும் 1897-இல், வட துருவத்தை ஆராய்வதற்காகப் பலூனில் பறந்தார்கள். ஆனால் அவர்கள் திரும்பவேயில்லை! 1930-இல், தற்செயலாக அவர்களுடைய ஆய்வுக் கருவிகள் வடதுருவப் பகுதியில், பனிக்கட்டிகளுக்கு அடியில் கண்டுபிடிக்கப் பட்டன!



1957-இல், மேஜர் 'டேவிட் ஜி சிமன்ஸ்' என்பவர் ஒரு பெரிய பலூனில் ஏறி, தரை மட்டத்திலிருந்து 30 கி.மீ. உயரம் வானத்தில் பறந்தார்! அதற்கு முன் யாரும் அவ்வளவு உயரம் பறந்ததில்லை!





1960-இல், அமெரிக்கா, 31 மீட்டர் சுற்றளவு உள்ள 'எக்கோ—1' என்ற பிளாஸ்டிக் பலூனைப் பறக்க விட்டது. அதன் எடை 16 பவுண்டுதான். அது 1600 கி.மீ. உயரத்தில் பறந்து பூமியைச் சுற்றி வந்தது. அதன் மூலம் உலகம் முழுவதிலும் டெலிபோனில் பேசலாம்; செய்தி அனுப்பலாம்; டெலிவிஷன் நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் பார்க்கலாம்!



பலூனில் பறப்பதில் ஈடுபடும் சங்கத்தை, இந்தியாவில், 1970-ஆம் ஆண்டு, விண்வெளி வீரர் ஆம்ஸ்டிராங் தொடங்கி வைத்தார். 1973-இல் இந்தியாவில் வெப்பக்காற்று பலூன் 'உதான் கட்டோலா' பறக்க விடப் பட்டது.


1973-இல், விஸ்வ பந்து குப்தா என்னும் இந்தியர், முதன் முதலாக 'உலக வெப்பக் காற்று பலூன் சாம்பியன் ஷிப்' பட்டத்தை அமெரிக்காவில் பெற்றார்






சரித்திரத்தில், பலூன் முதல் முறையாக மலைகளின் மேல் பறந்தது 1987-இல், இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தில், கார்வல் பகுதியில். பலூன், கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரம் பறந்தது; 25 கி.மீ. தூரம் பறந்தது. இதற்கு ஆன நேரம் 1 மணி, 15 நிமிடங்கள்.

வெப்பக் காற்று பலூன் மூலம் 'மிசியோ கண்டா' என்பவரின் தலைமையில் ஜப்பானியப் பலூனில் பறக்கும் குழு ஒன்று, உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தைக் கடந்து சாதனை புரிந்தது!




கனடாவில், ஒரு புது விதமான பலூனைப் பறக்க விட்டார்கள். வழக்கமான நைலானில் அல்லாமல் 'கெவ்லர்' என்னும் பொருளால் உருவாக்கப்பட்ட பலூன் அது. இரும்பைவிட 5 மடங்கு உறுதியானது. நைலானைவிட பாதி அளவு எடை குறைந்தது. ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட இந்த பலூன் விபத்து ஏற்பட்டால், கீழே விழுந்து வெடித்துவிடாது.



ஒரே சமயத்தில் 50 பேர்கள் ஏறிக் கொண்டு 1988-ஆம் ஆண்டு பறக்க விடப்பட்ட பலூன் ஒரு 'கின்னஸ்' சாதனை! வெப்பக் காற்று நிரப்பப் பட்ட அந்த பலூன், ஹாலந்தில் 100 மீட்டர் உயரம் பறந்து, பத்திரமாக இறங்கியது!



சில ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவுக்கும் துருக்கிக்கும் இடையே நட்புறவை வளர்ப்பதற்காக அமெரிக்கக் கோடீஸ்வரர் மால்கம் போர்பஸ், முன்னாள் துருக்கியின் சக்கரவர்த்தி சுலைமானின் உருவத்தைப் பலூனாகத் தயாரித்து வானத்தில் பறக்க விட்டார். வெப்பக் காற்று அடைக்கப் பட்ட இந்தப் பலூன் 57 மீட்டர் உயரம் இருந்தது!.



நாட்டை நேசித்த நங்கை!

"என்னை உடனே இந்நாட்டு மன்னரிடம் அழைத்துச் செல்லுங்கள்..." என்றாள் அந்தச் சிறுமி. அவளுக்குப் பதினைந்து பதினாறு வயது தான் இருக்கும். அக்காள் வீட்டில் வசித்து வந்தாள்.

"மன்னரிடமா?... உளறாதே...! நாமெல்லாம் அரண்மனை மதில் சுவர் நிழலில் கூடச் சென்று நிற்க முடியாது..." என்றாள் அக்காள்.

அப்போது அங்கு வந்த அக்காவின் கணவர், "எதற்காக மன்னரைப் பார்க்க வேண்டும் என்கிறாய்?" என்று கேட்டார்.

"இங்கிலாந்துடன் போராடி வரும் நமது பிரான்சு நாட்டை ஒரு பெண்தான் காப்பாற்றுவாள் என்கிறது தேவ வாக்கு..."

"அதற்கும் நீ மன்னரைப் பார்க்க விரும்புவதற்கும் என்ன சம்பந்தம்...?

"அந்தப் பெண் நான்தான்...!" என்றாள் அந்தச்சிறுமி. உடனே இருவரும் நகைத்தனர். "பைத்தியக்காரி..." என்று ஏளனம் செய்தனர். முதலில் சிறுமி விளையாட்டுக்குச் சொல்வதாக நினைத்தனர். ஆனால் சிறுமியோ, தான்தான் பிரான்சு நாட்டைக் காக்க வந்த பெண் என்றும் பிடிவாதமாக மன்னரிடம் போக வேண்டும் என்று அடிக்கடி கூறினாள். அவள் கூற்றுக்கு ஏதாவது ஆதாரம் இருக்கலாம் என்று ஐயப்பட்ட அவர்கள், ஒருநாள், "பிரான்சைக் காப்பாற்றப் போகும் பெண் நீதான் என்று, உனக்கு யார் சொன்னது...?" என்று கேட்டனர்.

அவள் சொன்னாள், "ஒரு நாள், என் காதருகே ஒரு தெய்வீகக் குரல் கேட்டது. அதுதான், என்னிடம், "பிரான்சு நாடு உன்னைத்தான் நம்பியிருக்கிறது... நீதான் பிரான்சின் பகைவர்களை அழிப்பாய்...." என்று சொல்லிற்று.

"சரி மன்னரைப் பார்த்து என்ன செய்யப் போகிறாய்?"

"பிரான்சின் படையில் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுவேன். அவருடைய ஆணை பெற்று ஆங்கிலேயரை வெல்வேன்...."

ஜானகிமணாளன்

சிறுமியின் தொந்திரவு தாங்க வில்லை. எனவே, ஒரு நாள் அவளை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். மன்னரைப் பார்க்க முடியவில்லை. படைத் தலைவர் ராபர்ட்டைச் சந்தித் தனர். ''நம் அரசர் இன்னும் சில மாதங் களுக்குப் போரில் ஈடுபடக் கூடாது. ஈடுபட்டால் தோற்றுப் போவார். இந்த ஆண்டு நடுவுக்குப் பிறகு போர் புரிந் தால் வெற்றி நிச்சயம்...'' என்றாள் சிறுமி அவரிடம்.

''இப்படி உனக்குச் சொன்னது யார்....?'' என்றார் ராபர்ட்.

''கடவுள்தான்....'' என்றாள் அவள்.

ராபர்ட்டுக்குக் கோபம் வந்து விட் டது. ஓங்கி ஒரே அறை! சிறுமி வேதனை யோடு வீடு திரும்பினாள்.

ராபர்ட் மதகுருவை அழைத்தார். ''ஐயா... இந்தப் பெண் பெரிய சூன்யக் காரியாகத் தோன்றுகிறாள். இவளிடம் ஏதோ மாயம் உள்ளது. இவளை சரி செய்யுங்கள்'' என்று கேட்டுக் கொண் டார்.

இதை அறிந்து சிறுமி நடுக்கிட் டாள். குருவின் முன் மண்டியிட்டு, ''நான் மாயக்காரி அல்ல. நீங்கள் தான்



என்னைக் காத்தருள வேண்டும்....''
என்று கெஞ்சினாள்.

குரு அவள் முகத்தை உற்று நோக்கினார். அவள் முகத்தில் சாந்தமான தெய்வீக ஒளி நிறைந்திருப்பதைக் கண்டார். ''ராபர்ட்...! இவள் மாயக்காரி அல்ல. நமது பிரான்சு நாட்டை உய்விக்க வந்த வீராங்கனை இவள்...'' என்று எடுத்துரைத்தார்.

அதன் பிறகே ராபர்ட்டுக்கு சிறுமியின் மேல் ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டது. இருந்தாலும் அவர் அவளை உடனே மன்னரிடம் அழைத்துப் போகவில்லை. காலம் கடத்தினார்.

சிறுமியின் பொறுமை எல்லை மீறியது. ஒரு நாள் ''படைத்தலைவரே! மன்னரிடம் அழைத்துப் போக ஏன் இன்னும் தாமதிக்கிறீர்கள்...? போரில் நம் இளவரசர் தோல்வி மேல் தோல்வி பெற்று வருகிறாரே! இன்று கூட ஓர் லீன்ஸ் போர்க்களத்தில் அவர் தோற்று விட்டாரே... நான் மன்னரிடம் அனுமதி பெற்று இளவரசருக்கு உதவப் போக வேண்டும்...'' என்றாள்.



ராபர்ட் திடுக்கிட்டார். ஓர்லீன்ஸ் போர்க்களம் வெகு தூரத்தில் இருந்தது. அங்கு இளவரசர் தோற்றது எப்படி இந்தப் பெண்ணுக்குத் தெரிந்தது.... என்று வியந்தார். நிச்சயம் இவளிடம் ஏதோ அற்புத தெய்வீக சக்தி இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார்.

இதற்குள் இவளுடைய திறமை பற்றி அவ்வூர் மக்களுக்குத் தெரிய வந்தது. அவர்கள் அவளுக்கு ஆண் உடை தந்து உடுத்திக் கொள்ளச் செய்து நேராக மன்னர் முன் கொண்டு நிறுத்தினர். மன்னர் மகிழ்ச்சி அடைந்தார். அவளுடன் இன்னும் ஏழு வீரர்களைச் சேர்த்து, அந்தக் குழுவுக்கு அவளையே தலைவி ஆக்கினார். ராபர்ட் அவளுக்கு ஒரு உடைவாளை அளிக்க அவள் குதிரை மீதேறிப் போர்க்களம் புறப்பட்டாள். அது 1429 பிப்பிரவரி 23 - ஆம் நாள். அப்போது அவளுக்கு பதினேழே வயதுதான். காடு, மேடு, மலை மற்றும் பல ஆறுகளைக் கடந்து சினான் என்ற நகரை அடைந்தாள்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பீட்டர் மார்ட்டின் என்பவர் தனது நீண்ட கால ஆராய்ச்சிக்குப் பிறகு ஆறு கால்களையுடைய புதிய கோழி இனத்தைக் கண்டு பிடித்துள்ளார்!

- ஆறுபாதி புகழேந்தி,
மயிலாடுதுறை.



அங்குதான் பிரான்ஸ் இளவரசன் தங்கியிருந்தான். அவனுக்கும் அவளிடம் நம்பிக்கை ஏற்படவில்லை. ஏமாற்ற எண்ணினான்.

''இளவரசரைத் தானே பார்க்க வந்தாய்? அதோ இருக்கிறார் பார் இளவரசர்...'' என்று தன்னைப் போல் இருந்த வேறொருவனைச் சுட்டிக் காட்டினான் இளவரசன்.

''இளவரசரே! என்னையே சோதிக்கிறீர்களே... நீங்கள் தான் நான் நாடி வந்த இளவரசர்... எனக்கு இது புரியாதா? உடனே என்னைப் போர்க்களத்துக்கு அனுப்புங்கள்... வீர முழக்கமிட்டு வெற்றிக் கொடி நாட்டி வருகிறேன்....'' என்றாள் அந்தப் பெண்.

அப்படியும் இளவரசன் கேலியாக நகைத்தான். சுற்றி இருந்தவர்கள் ஏளனமாகப் பார்த்தனர். பலவிதக் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். அவள் தெளிவாக விடை அளித்தாள். இருந்தும், இளவசரனின் மனம் மாறவில்லை. ''நீ ஒரு மாயக்காரி... பைத்தியம் பிடித்தவள்... போ இங்கிருந்து,'' என்று விரட்டியடித்து விட்டான்.

அந்த அதிசயப் பெண் மனம் தளரவில்லை. மீண்டும் ஒரு தடவை சென்று இளவரசரைக் கண்டாள். ''இளவரசரே! என்னை நம்புங்கள்... எனக்குப் படை தந்து விடை கொடுங்கள். கடவுள் வெற்றி தருவார்...'' என்று வேண்டினாள்.

அப்போது அங்கிருந்த ஒருவன், ''பெண்ணே! முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறாயே! படை கொடு என்கிறாய்.. பிறகு கடவுள் வெற்றி அருள்வார் என்கிறாய். ஆங்கிலேயரின் படை வலிமை புரியாமல் பேசுகிறாயே... கடவுளே வெற்றி தரட்டும்... நீ போ...'' என்றான் இளக்காரமாக.

அதற்கு அவள், ''கடவுள் எப்போதும் நேராக வந்து உதவுவதில்லை. யாராவது ஒரு மனிதன் மூலமாகவே வந்து நன்மை புரிவார். சிறு பெண் என்று என்னை நினைக்க வேண்டாம்.

என்னை அனுப்புங்கள். நான் ஆங்கிலே யரை வீழ்த்தி வருகிறேன்...'' என்றாள் உறுதியுடன்.

அதன் பிறகும் இளவரசன் அவளைப் போர் முனைக்கு நேரடியாக அனுப்பி விட வில்லை. மறுபடியும் அவளைக் குருமார்களிடம் அனுப்பி னான். அவர்கள் அவளைப் பலவாறு சோதித்த பிறகு, ''இப்பெண் ஒரு வீர மங்கை. தெய்வ அருள் பெற்றவள்...'' என்று அறிவித்தனர். அதற்குப் பிறகு தான் அரசகுமாரன் ஓரளவு துணிவு கொண்டான். அவளைப் போர்க்களத் துக்குப் போக அனுமதித்தான்.

அப்பெண் போருடை தரித்துக் கவசம் பூண்டாள். வாளேந்திக் குதிரை மீதமர்ந்து, வீறு கொண்ட வேங்கை யைப் போல் போர்க்களம் நோக்கிப் பாய்ந்து சென்றாள். பீர்பா எனும் ஊர் வழியே செல்லும்போது ஒரு இறை யொலி கேட்டது. ''இவ்வூர் ஆலயத் தின் பலி பீடத்தின் முன் ஒரு கூர்வாள் உள்ளது. அதில் ஐந்து சிலுவைக்குறி பொறிக்கப்பட்டிருக்கும்... அதைப் போருக்கு எடுத்துச் செல்....'' என்றது அக்குரல்.

அவ்வாறே எடுத்துச் சென்று, அவள் பல போர் முனைகளில் பிரான்சை வென்றிருந்த ஆங்கிலே யரைப் புறமுது கிட்டு ஓடச் செய்தாள். பிரான்ஸ் இழந்த பகுதிகளை எல்லாம் மீண்டும் பெற்றுப் பிரான்சு நாட்டுடன் இணைத்தாள். பிரான்சின் வலிமை மீண்டும் பெருகியது. அவளும் ஒரு மாபெரும் வீராங்கனையாகத் திகழ்ந் தாள்.

இந்த வீராங்கனைதான், உலக வர லாற்றில் இன்றும் மாபெரும் வீர மங்கையாகப் போற்றிப் புகழப்படும் ஜோன் ஆஃப் ஆர்க்.

அவளது பிறப்பு 1412 ஜனவரி 6 - ஆம் நாள். இடம் பிரான்சில் உள்ள 'டாம்ரியா' என்ற சிற்றூர். அவள் தந்தை பெயர் 'ஷாக்ஸ்'. அவர் ஓர் ஏழைக் குடியானவர்.

தாய்நாட்டுக்காகப் போரிட்டு, இறுதியில் தனது தாய் நாட்டுக்காகவே ஜோன் உயிர் விட்டாள்.

ஜோன் வந்த பிறகு போரின் முடிவுகள் மாறிவருவதையும், தங்கள் பகை நாடான பிரான்ஸ் வென்றுவரு வதையும் கண்டு ஆங்கிலேயர் மனம் கொதித்தனர். பர்கண்டி என்ற சிற்றர சனுடன் போரிடும் போது, எதிர்பாராத விதமாக ஜோன் சிறைப்பட்டாள். நீதி மன்றம் அவளைக் குற்றவாளி என்று தீர்ப்புக் கூறியது. அவள் ஆங்கிலே யரிடம் விற்கப்பட்டாள். அவர்கள், அவள் மீது பல்வேறு குற்றங்களைச் சுமத்தி, அவளுக்கு மரண தண்டனை விதித்துத் தங்கள் பழியைத் தீர்த்துக் கொண்டனர்.

ஜோன் பொது இடத்தில் கழுமரத் தோடு கட்டப்பட்டு உயிருடன் தீ வைத் துக் கொளுத்தப்பட்டாள். அவள் உடல் உருத்தெரியாமல் எரிந்து சாம்பலாகிப் போனது. நாட்டை மிகவும் நேசித்த அந்த நங்கை, இறுதியில் நாட்டின் மண்ணோடு மண்ணாகக் கலந்து மறைந்து போனாள்.


''என் பையன், ஸ்கூலுக்குப் போகவே ரொம்ப அடம் பிடிக் கிறான் போங்க...''

''அதான் அவனைப் பள்ளிக் கூடம்னு எழுதச் சொன்னா, பலிக் கூடம்னு எழுதறானா?''

- சீர்காழி வி. ரேவதி.



கேட்கட்டுமா டாக்டர்?



டாக்டர். கு. கணேசன்



க. கோகுலகிருஷ்ணன், விசலூர்.

? அதிகமான மருந்து, மாத்திரைகளை உட்கொள்வதால் ஒருவரின் ஆயுட் காலம் குறையும் என்பது உண்மையா, டாக்டர்?



! இது அவர் சாப்பிடும் மருந்தையும், அதன் அளவையும் பொறுத்தது. பொதுவாக, தேவையின்றிச் சாப்பிடப்படும் எந்த மருந்துமே உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கவே செய்யும்!


டி. வேலுமணி, குண்டடம்.

? முட்டையை வேக வைத்துச் சாப்பிடுவது, பச்சையாகச் சாப்பிடுவது - இவற்றில் எது அதிக சக்தியை நம் உடம்புக்கு அளிக்கிறது?

! சக்தி (Energy) என்று பார்த்தோமானால், அது பச்சை முட்டையில்தான் அதிகம். அதேசமயம் பச்சை முட்டையில் ஏதேனும் கிருமிகள் இருந்தால், அவை உடம்புக்குள் சென்று தொந்தரவுகள் செய்யலாம்! வேக வைத்த முட்டையில் சில கலோரி சக்தி குறைவது உண்மை! ஆனால் முட்டையை வேக வைக்கும் போது அதனுள்ளிருக்கும் கிருமிகள் இறந்து விடுகின்றன. இது வேக வைத்த முட்டையால் நமக்குக் கிடைக்கும் நன்மை. சக்தி குறையக் கூடாது; கிருமிகளும் இருக்கக் கூடாது என எதிர்பார்ப்பார்கள், 'அரை வேக்காடு முட்டை' (Half boiled Egg) யை உண்ணலாம்! இதுவே உடம்புக்கு நல்லது.

டி. நித்யா, லால்குடி.


? தலையில் சோப்புப் போட்டுக் குளிப்பதால் நன்மையா, தீமையா? இதனால் முடி வெள்ளையாகுமா?



! சோப்புப் போட்டுக் குளிப்பதால் நன்மைதான், சகோதரி! சோப்புக்கும் முடி வெளுப்பதற்கும் தொடர்பில்லை! பயம் வேண்டாம்!

வி. அ. ராஜு, மேலூர்.

? எனது கீழ் உதடு மிகவும் பெரியதாக உள்ளது. பார்ப்பதற்கு அசிங்கமாகவும் உள்ளது. இதைச் சரி செய்ய ஒரு வழி கூறுங்கள், டாக்டர்!



! உன் குறைபாட்டிற்கு அறுவைச் சிகிச்சைதான் சிறந்த நிவாரணம் அளிக்கும். எனவே, காலம் தாழ்த்தாமல் ஓர் ஒட்டறுவைச் சிகிச்சை நிபுணரி (Plastic Surgeon)டம் சென்று ஆலோசனை பெற்றுக் கொள்.


எம். ஐ.மம்மது, காயல்பட்டணம்.

? அம்மைக்கும், வேப்பிலைக்கும் தொடர்புண்டா, டாக்டர்?

! அறிவியல்ரீதியாக நோக்கும் போது எவ்விதத் தொடர்பும் இல்லை, தம்பி. அம்மை நோய் என்பது வைரஸ் கிருமிகளால் வருவது. தானாக வந்து, தானாகவே போய்விடக் கூடியது. எவ்வித மருந்துக்கும், கட்டுப்படாதது. வேப்பிலைக்கு மட்டும் அஞ்சிவிடுமா, என்ன!

ஜீ. தீபா, தர்மபுரி.

? 'காண்டாக்ட் லென்ஸ்' அணிபவர்கள் அதை அணிந்து கொண்டே தூங்கக் கூடாதாமே! அப்படித் தூங்கினால் என்ன கேடு விளையும் என்பதைக் கூறுங்கள், டாக்டர்! மேலும் காண்டாக்ட் லென்சை 12 மணி நேரம்தான் தொடர்ச்சியாக அணிய முடியும் எனக் கேள்விப்படுகிறேன். அதிக நேரம் அணியக் கூடிய காண்டாக்ட் லென்ஸ் உள்ளதா?



! காண்டாக்ட் லென்ஸை அணிந்து கொண்டு தூங்கினால் தூக்கத்தில் காண்டாக்ட் லென்ஸ் விலகி கீழே விழுந்து உடைந்து விடலாம்! அல்லது கண்ணின் விழி வெண்படலத்தை அழுத்திப் புண்ணாக்கலாம்! இதனால் கண் வலி, எரிச்சல், உறுத்தல் போன்ற தொந்தரவுகள் தோன்றலாம்! தூங்கும் போது கண்ணில் சேரும் அழுக்கு காரணமாக, காண்டாக்ட் லென்ஸ் ஒட்டியிருக்கும் கருவிழி ஓரத்தில் நோய்த் தொற்று உண்டாகலாம்! இதுபோன்ற சிரமங்களைத் தவிர்க்கவே தூங்கும்போது காண்டாக்ட் லென்ஸை அணியக் கூடாது என மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள். ஆனால் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் மருத்துவ உலகில், கண்ணுக்குள்ளேயே எப்போதும் பொருத்திவிடக் கூடிய 'Intra Ocular' காண்டாக்ட் லென்ஸ் வந்து விட்டது. இதைத் தொடர்ச்சியாக அணிந்து கொள்ளலாம்! அணிந்து கொண்டே தூங்கலாம்! முதலில் சொன்ன தொந்தரவுகள் இவ்வகைக் காண்டாக்ட் லென்ஸில் வருவதில்லை!

சின்னங்கள் சொல்வது என்ன? - போட்டி முடிவு

சரியான விடை :

1. ஒலிம்பிக் வளையம், 2. இந்திய தபால் தந்தித் துறை, 3. எல்.ஐ.சி., 4. தமிழ்நாடு அரசு, 5. சுற்றுலாக் கழகம், 6. கல்கி அட்டையில் 'ல்'க்கு மேல், 7. ஆஸ்கார், 8. இந்திய ரயில்வே, 9. உலக வனவிலங்கு காப்புக் கழகம், 10. இந்திய ரிசர்வ் வங்கி.

இந்தப் போட்டியில் மொத்தம் 1868 பேர்களே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் எல்லாம் சரியாக எழுதியவர் ஒருவர் மட்டுமே! ஒரு தவறு செய்தவர்கள் ஏழு பேர்.

முதல் பரிசு ரூ. 25/- பெறுபவர் :

1. ஜே. சுபத்ரா,
பொழிச்சலூர்,
சென்னை - 74.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

(ஒரு தவறு)

1. பா. ராமநாதன்,
அண்ணாநகர் மேற்கு விரிவு,
சென்னை - 101.
2. ஜெ. செம்பரிதி,
சந்தவாசல்.
3. வே. பாரதி,
வடபாதி மங்கலம்.
4. பா. அப்ரமேயன்,
சென்னை - 44.
5. ஆர். வரதராஜன்,
தேனம்பாக்கம்,
காஞ்சிபுரம்.
6. என். கணேஷ்குமார்,
மயிலாடுதுறை.
7. எஸ். கவிதா மனோன்மணி,
PORT PLAIR

பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டு. கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

விடுமுறைப் போட்டி - 2 முடிவு

சரியான விடை :


1. நண்டு, 2. கடல், 3. வாத்து, 4. பல்லி, 5. விளக்கு

இந்தப் போட்டியிலும் 3800 பேர்களுக்கு மேல் கலந்து கொண்டு, கோகுலம் ஆசிரியரையே ஒரு கலக்குக் கலக்கியிருக்கிறார்கள். ஒரு சிலரே தவறாக விடை எழுதியிருந்தனர். எனவே, குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தோம்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. ர. ஐயப்பன், விற்குடி போஸ்ட்.
2. எஸ். சுபத்ரா, திருச்சி.
3. கே. நஸ்ரீன் பர்வீன், திருச்சி.
4. செ. காசி, திருவெற்றியூர்.
5. ஏ. காமாக்ஷி, கல்கத்தா - 26.
6. எஸ். எம். நிஷா, கூஹர் பேட்டை.
7. ஆர். தேவிகுணசேகர், கும்பகோணம்.
8. நா. பழனிவேல், வெண்ணந்தூர் போஸ்ட்.
9. எஸ். ஜலீல் அகமது, கள்ளிக்குடி.
10. எஸ். நிஜாம்தீன், திருவெறும்பூர்.
11. எம். நந்தகுமார், கொளத்தூர்.
12. ப. தீபா, ஆனைக்குப்பம்.
13. மு. மதிவாணன், பாப்பாரப்பட்டி போஸ்ட்.
14. என். முனீஸ்வரி, தங்கச்சிமடம் போஸ்ட்.
15. மு. வி. வீரராகவன், வேலூர்.
16. கே. என். ஸ்ரீராம், தஞ்சை.
17. மு. ஜெய்விஷ்ணு, தூத்துக்குடி.
18. வீர. சித்ரா, மணையப்பட்டி போஸ்ட்.
19. வி. காயத்ரி, அன்புமடம்.
20. மு. பவானி, கூத்தபாக்கம்.

போட்டியில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு நன்றி. பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டு.



நண்டு எப்படி நகரும்?

ரேவதி

முத்துவின் பாட்டிக்கு உடம்பு சரியில்லை. இங்கிலீஷ் வைத்தியம் சரிப்பட்டு வரவில்லை. வேறு வழியில்லாமல் கிராமத்தில் இருந்து நாட்டு வைத்தியரை அழைத்து வந்து காட்டினர். ''நண்டுக் குழம்பு வைத்துக் கொடுக்க வேண்டும். ஆறு நண்டாவது வேண்டும். அதுவும் நாட்டு ஆண் நண்டுகளாக'' என்றார் வைத்தியர்.

''பட்டணத்தில் நண்டுக்கு எங்கே போவது?'' என்று திகைத்தார் முத்துவின் அப்பா.

''இங்கே ஏரிக்கரை, வயக்காடு ஏதாவது கிட்டே இருக்கா? யாராவது வந்து காட்டுங்க. நானே நண்டு புடிக்கறேன்'' என்றார் வைத்தியர்.

''பக்கத்தில் ஆகம் பாக்கம் ஏரி இருக்கு'' என்று அவருக்கு வழிகாட்ட ஆவலுடன் கிளம்பினான் முத்து. நண்டு பிடிப்பதைக் காணும் ஆவலில் வீட்டில் இருந்த நண்டு சிண்டுகள் எல்லாம் கிளம்பின.

வைத்தியர் திகைத்தார். ''இத்தனை பேர் வந்தால் எப்படி! முத்து இருக்கட்டும். கூட அவன் தங்கை தேவானை வரட்டும், போதும்'' என்றார்.

வைத்தியர் கேட்டுக் கொண்டபடி ஒரு சிறிய மண்சட்டியையும், அதை மூட ஓட்டை போட்ட மூடி ஒன்றையும் வாங்கித் தூக்கிக் கொண்டாள் தேவானை. முத்து ஏரிக்கரைக்கு வழி காட்ட மூவரும் நடந்தனர்.

வழியில் கனமான ஒரு மாக்கல் சில்லில் ஓட்டை போட்டு, கெட்டியான ஒயரால் கட்டி வைத்துக் கொண்டார் வைத்தியர். ஒரு சிறிய மீனையும் வாங்கி, வைத்துக் கொண்டார்.

கோடைகாலம் நெருங்கிக் கொண்டிருந்ததற்கு அடையாளமாக, ஆதம்பாக்கம் ஏரியில் நீர் குறைந்து, அங்கும் இங்குமாக நீர் குட்டையில் தேங்கியிருந்தது. உயர்ந்திருந்த கரையின் மேல் ஓரமாக வளர்ந்திருந்த குட்டைச் செடிகளுக்கு அருகே வந்தார் வைத்தியர். செடிகளுக்குக் கீழே வங்குகள்.

வைத்தியர் மாக்கல் சில்லைப் பிணைத்திருந்த ஓட்டுடன் வங்குக்குள் விட்டார்.

''இதெல்லாம் நண்டு வளைகளா! நான் இதுவரை கவனித்ததே இல்லையே!'' என்று வியந்தான் முத்து.

இருவரும் ஆவலுடன் பார்த்தனர். இரண்டு முழ அளவு ஒயர் பொந்துக்குள் இறங்கித் துவண்டது. வைத்தியர் ஒயரை வெளியே இழுத்து, அருகே இருந்த இன்னொரு பொந்துக்குள் விட்டார். அதிலும், ஒயர் இரண்டு முழம் இறங்கியதும் துவண்டது. மறுபடி ஒயரை வெளியே இழுத்தார்.

''ஏன், வளைக்குள் நண்டு இல்லையா?'' என்று ஆவலுடன் கேட்டாள் தேவானை.


''நண்டு இருக்கு. ஆனால் அது பெண் நண்டு. நமக்குத் தேவை ஆண் நண்டுதான்'' என்றார் வைத்தியர்.

''என்னங்க! கண்ணால பாக்காமலேயே வளைக்குள் இருப்பது பெண் நண்டுன்னு எப்படிச் சொல்றீங்க?''

''பெண் நண்டு சோம்பேறி. இரண்டு முழத்துக்கு மேல வளை தோண்டாது. எளிதில் கரையும் மண்ணை வைத்தே பொந்தைப் பூசும். அதுவும்கூட பொந்து நேராகவே இருக்கும். நீ வேண்டுமானால் பாரேன்'' என்று கையில் கொண்டு வந்து இருந்த ஒரு சிறிய மீனை மாக்கல் சில்லோடு கட்டிப் பொந்தில் இறக்கினார். அசைத்தார். சட்டென்று மேலே இழுத்தார். ஒயருடன் ஒரு நண்டு மேலே வந்து விழுந்தது!

விழுந்த வேகத்தில் நண்டு பக்கவாட்டில் ''குடு குடு''வென்று ஓடியது. வைத்தியர் அதைப் பின்பக்கமாக மோதிர விரலாலும் கட்டை விரலாலும் லாகவமாகப் பிடித்து எடுத்தார்.

உள்ளங்கை அகலத்திற்கு இருந்தது அந்த நண்டு. இடுக்கி போன்ற முன் பக்கக் கைகள் இரண்டையும் அது வீசிக்



கொண்டிருந்தது. பக்கங்களில் இருந்த எட்டு விரல் கால்களும் நெளிந்து பிடித்துக் கொள்ள ஏதாவது கிடைக்காதா என்று அசைந்தன.

''பார்த்தீங்களா? இதன் மேல் ஓடு கெட்டியானது. அதற்குக் கீழ்ப் பக்கத்தில் இதோபார். இதுதான் வயறு. இது பெண் நண்டுக்குப் பெரிதாக இருக்கும். ஆண் நண்டுக்கு சற்றுச் சிறிதாக இருக்கும்,'' என்றார் வைத்தியர்.

''இருங்க். இதை விட்டுடாதீங்க. நான் புடிச்சுக்கறேன். இதன் கண்களைப் பார்க்கணும்'' என்று ஆவலுடன் கையை நீட்டினான் முத்து.

நண்டைப் பிடித்திருந்த கையை உயர்த்திக் கொண்ட வைத்தியர், ''தம்பி, பட்டணத்துத் தம்பி. உன் துணிச்சலைப் பாராட்டறேன். ஆனால், நண்டைக் கையால் பிடிப்பது, எளிதானது அல்ல. முன் பக்க இரண்டு காலிலும் கொடுக்கு மாதிரி அமைப்பு இருக்கு. எதைப் புடிச்சாலும் நண்டு விடாது. அப்படியே வெட்டிடும். அதனால் வயிற்றுப் பக்கத்தையும், மேல் ஓட்டுப் பக்கத்தையும் நடு விரல் அல்லது மோதிர விரலையும் கட்டை விரலையும் வைத்துக் கவனமாக எடுக்க வேண்டும். இல்லே... விரல் துண்டுதான். நண்டுப் புடின்னு கேட்டதில்லே?'' என்று விளக்கினார்.

''சரிங்க, கண்களை மட்டுமாவது பார்க்கிறேன். அப்புறமா நீங்களே அதை வளையில் விட்டுடுங்க'' என்று கெஞ்சினாள் தேவானை.

வைத்தியர் பிடியைத் தளர்த்தாது, அருகே கொண்டு வந்து காட்டினார். இரண்டு உணர் கருவிகளுக்கும், முன் கைகளுக்கும் இடையே இரண்டு உருண்டைக் கண்கள் நீட்டிக் கொண்டிருந்தன. வெயில் பட்டதும் கண்களை உள்ளே இழுத்துக் கொண்டது!

கரையோரமாக மண்டிக் கிடந்த ஏதோ ஒரு செடியைப் பிடித்து இலைகளைப் பிய்த்து விட்டு, தண்டை மட்டும் எடுத்து வந்து முன் கைகளுக்கிடையே வைத்தான் முத்து. முன் கையுள் பிளந்த பகுதியில் அதை இறுகப் பற்றிக் கொண்டது நண்டு. ஒரு நிமிஷம் ஆனது. தண்டு, நண்டு பிடித்த இடத்தில், நறுக்கப்பட்டது போல் 'கரக்'கென்ற சத்தத்துடன் வெட்டப்பட்டுக் கீழே விழுந்தது!



"அப்பாடி! நல்ல வேளை. என் விரலையும் இப்படித்தானே துண்டிக்க முயன்றிருக்கும்!" என்று வியந்து கொண்டான் முத்து.

வைத்தியர் நண்டை மெதுவாக அதன் வளைக்கு அருகே உதறினார். அது தன் எட்டுக்கால்களாலும் பக்க வாட்டில் ஓடித் தன் வளைக்குள் புகுந்து கொண்டது.

வைத்தியர் அடுத்து இருந்த வளை களில் ஒயரை இறக்கிப் பார்த்தார். ஒன்றில்தான் ஒயர் மூன்று முழம் வரை கீழே இறங்கியது.

"இது ஆண் நண்டின் வளைதான். அதன் வளைதான் நீளமாக இப்படிக் கரடு முரடாக வளைந்து நெளிந்து யாரும் கையை விட்டுப் பிடிக்க முடியாதபடி கடினமாக இருக்கும்," என்று கூறிய வைத்தியர், மீன் ஒன்றைக் கட்டி இறக்கினார். வெகு நேரம் சிரமப்பட்ட பிறகு இழுத்தார். பெரிய நண்டு ஒன்று வெளியே வந்து விழுந்தது. விழுந்த வேகத்தில் அது சமாளித்துக் கொண்டு 'குடு குடு'வென்று ஓடியது. மூவரும் விடாமல் துரத்தினர். நாய் ஒன்றும் அவர்களுடன் சேர்ந்து முந்திக் கொண் டது. நாய் மூக்கால் நண்டைத் தொட, மறுவினாடி, நண்டின் இடுக்கிப் பிடி யைத் தாங்காது உதறிவிட்டுப் பயத் துடன் ஒலமிட்டு ஓடியது.

நண்டு வளை ஒன்றும் கிடைக்காத தால் உயர்ந்து நின்ற பனை மரத்தில் ஏறி, பக்கவாட்டிலேயே நகர்ந்து நகர்ந்து சுற்றிச் சுற்றி ஏறி உயரே போய்விட்டது! மூன்று பேரும் திகைப் புடன் கீழே இருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தனர்!

அறிவியல் உண்மைகள்


- நண்டு கணுக்காலிகள் (Phylum) பிரிவைச் சேர்ந்தவை.
- இதன் மேலுறை உறுதியான கைட்டின் இராசாயனப் பொருளால் ஆனது.
- நண்டுக்கு மொத்தம் 5 ஜோடிக் கைகள். முன் இரண்டுமே கைகளாகப் பயன்படும். மற்றவை நடக்கப் பயன் படும். இவற்றைக் கொண்டே நண்டு மண்ணைத் தோண்டி வளைகள் அமைக் கிறது.
- பெண் நண்டின் வளை நேராக, அதிக அழமில்லாது மென்மையாக இருக்கும். ஆண் நண்டின் வளை ஆழ மாக, கரடு முரடாக, கடினமாக இருக் கும்.
- நண்டுப்பிடி உறுதியாக இருக் கும். இதைக் கொண்டே நண்டைப் பிடிக்கிறார்கள்.
- நண்டின் கண்கள் தண்டின் மேல் அமைக்கப்பட்டது போல இருக் கும். தேவையில்லாத போது இதை நண்டு உள்ளே இழுத்து மடக்கி வைத் துக் கொள்ளும்.
- நண்டு நேராக முன் செல்லாது, பக்க வாட்டிலேயே நகர்ந்து ஓடும்.
- இது நீர் நிலம் இரண்டிலும் வாழும்.
- நண்டுகளில் ஏராளமான வகை கள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் சில தனிக் குணங்கள் உண்டு. ஓடு இல்லாத நண்டும் உண்டு.
- நண்டு நன்கு மரமேறும்



மீனுக்கு முத்து!

மன்னர் ஜஹாங்கீருக்கு ஏராளமான தங்க, வைடூரிய, நவரத்தின அணிகலன்கள் இருந்தன என்பது தெரியும். அவற்றின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? சுமார் 200 மில்லியன் ரூபாய்! அவர் மீன் பிடிக்கையில் கிடைக்கும். மீனைத் தன்னிடம் வைத்துக் கொள்ளாமல் ஒவ்வொரு மீனின் செதில்களிலும் ஒரு முத்தை இணைத்து மறுபடியும் தண்ணீரில் விடுவாராம்!

– ஜி. முருகன், பெரும்பாலை.


பெட்டியை எடுக்க உதவுங்கள்!
K.SIVA

செஸ் ஒலிம்பிக்ஸ் 92

'விசுவநாதன் ஆனந்த்' என்றதுமே 'ஓ! செஸ் சாம்பியன்தானே!' என்று சொல்வீர்கள். செஸ்ஸிலும் ஒலிம்பிக்ஸ் உண்டு. 'செஸ் ஒலிம்பியாட்' பற்றித் தெரிந்து கொள்வோமா?

'இண்டர்நேஷனல் செஸ் ஃபெடரேஷன்' (FIDE) இப்போட்டிகளை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடத்துகிறது. முதன் முதல் 'செஸ் ஒலிம்பியாட்' 1927 ஆம் ஆண்டு லண்டனில் நடத்தப்பட்டது. இப்படி ஆரம்பித்த போட்டிகள் 1939 வரை நடைபெற்றன. இரண்டாம் உலகப் போர் காரணமாக, இப்போட்டிகள் நடுவில் நிறுத்தப்பட்டு மீண்டும் 1950 லிருந்து தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

1990 ஆம் ஆண்டு முன்னாள் யூகோஸ்லாவியாவிலுள்ள 'நோவி சாட்' என்ற இடத்தில் 29 வது போட்டிகள் நடத்தப்பட்டன. இவ்வாண்டு ஜூன் மாதம் 7 முதல் 25 ஆம் தேதி வரை 30 வது போட்டிகள் பிலிப்பைன்ஸ் தலைநகரமான மணிலாவில் நடந்தன.

இதுவரை நடந்துள்ள 29 போட்டிகளில் சோவியத் யூனியன் 18 முறைகளும், யூ. எஸ். 5 முறைகளும், ஹங்கேரி 3 முறைகளும், ஜெர்மனி, போலந்து மற்றும் யூகோஸ்லாவியா ஆகியவை தலா ஒரு முறையும் வென்றுள்ளன.

இவ்வாண்டு நடந்த போட்டிகளில் ஆண்கள் பிரிவில் 104 நாடுகளும், பெண்கள் பிரிவில் 66 நாடுகளும் பங்கேற்றன. இப்போட்டிகளை பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் அதிபர் கோரஸான் அகினோ ஆண்கள் பிரிவில் உலக நெம்பர் ஒன் கேரி கேஸ்பாரோவோடு ஆடி காய்களை நகர்த்தி முறையாகத் துவக்கி வைத்தார். இப்போட்டிகள் வரலாற்றுப் புகழ் மிக்கவை. ஏனெனில், முதன் முறையாக சோவியத் யூனியன் மற்றும் யூகோஸ்லாவியா ஆகியவை பங்கு பெறவில்லை. அங்கு நிகழ்ந்த அரசியல் மாற்றங்களினால் பலமான ஒரு சோவியத் யூனியன் அணிக்குப் பதிலாக அதன் 13 குடியரசுகளும் (இதில் 10 பலமானவை) மற்றும் ஒரு பலமான யூகோஸ்லாவியா அணிக்குப் பதிலாக மூன்று பிரிந்து சென்ற நாடுகளும் (இதில் 2 பலமானவை) பங்கேற்றன. எனவே, நடந்த போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக இருந்ததோடு, பல நாடுகளின் வெற்றி வாய்ப்புக்களையெல்லாம் மாற்றி அமைத்தன. எப்படியெனில், உலகளவில் செஸ்ஸில் பல சோவியத் வீரர்கள் முன்னணியில் உள்ளனர். இவர்கள் ஒரு நாட்டின் பிரதிநிதிகளாக இன்றிப் பிரிந்து போன பல நாடுகளின் பிரதிநிதிகளாக ஆட வந்ததால் பல வெற்றிகளை இவர்களே தட்டிக் கொண்டு போக, இதுவரை இரண்டாவது மூன்றாவது இடங்களில் இருந்தவர்கள் எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டனர்.

எதிர்பார்த்தது போலவே ஆண்கள் பிரிவில் 39 புள்ளிகள் பெற்று முதல் இடத்தோடு தங்கப் பதக்கத்தைப் பெற்றது ரஷ்யா. இந்த அணியில் உலக நெம்பர் ஒன் கேரி கேஸ்பாரோவ் இடம் பெற்றிருந்தார். வேறு சில சாம்பியன்கள் உடல் நிலை சரியில்லாததால், ஆட முடியவில்லை. அப்படியிருந்தும் ரஷ்யா மிகச் சுலபமாக வென்றது.



✱ விஸ்வநாதன் ஆனந்த்

பெண்கள் பிரிவில் ஜியார்ஜியா 30.5 புள்ளிகள் பெற்று முதல் இடத்தையும் தங்கப் பதக்கத்தையும் பெற்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை அது, ஆண்கள் பிரிவில் 31½ புள்ளிகள் பெற்று 22 வது இடத்தையும், பெண்கள் பிரிவில் 22 புள்ளிகள் பெற்று 24 வது இடத்தையும் பெற்றது. ஆண்கள் பிரிவில் உலக நெம்பர் 5 விஸ்வநாதன் ஆனந்த், நீடயெவ்ந்து பருவா (இருவரும் கிராண்ட் மாஸ்டர்ஸ்), பிரவீன் திப்ஸே, லங்கா ரவி, தேவகி பிரசாத் மற்றும் நாகபூஷணம் சுதாகர் பாபு (நால்வரும் இன்டர்நேஷனல் மாஸ்டர்ஸ்) ஆகியோரும், பெண்கள் பிரிவில் அனுபமா கோகலே, நாகபூஷணம் சரிதா, புஷ்பலதா மங்கல், மற்றும் மிருனாலனி குண்டே ஆகியோரும் இந்தியாவிற்காகப் பங்கு பெற்று ஆடினர்.

பெண்கள் பிரிவு சென்ற போட்டிகளை விட இந்த முறை நல்ல தேர்ச்சி அடைந்துள்ளது. ஆனால், ஆண்கள் பிரிவில் பின்னடைவு தான். இருப்பினும் முன்னரே கூறியது போல, ஒரு பலமான சோவியத் யூனியனுக்குப் பதிலாகப் பத்துக்கும் மேற்பட்ட பலமான சோவியத் குடியரககள் ஆடியது அனைத்து அணிகளுக்குமே மிகவும் கடினமாக இருந்தது. இரண்டாவது ரேங்கிங் கொடுக்கப்பட்டிருந்த பலமான இங்கிலாந்து அணி, இறுதியில் 10 வது இடத்தைத்தான் பெற்றது.

நம் இந்திய ஆடவர் அணி எதிர்பார்த்த அளவுக்குச் சிறப்பாக ஆடவில்லை என்பதையும் கூற வேண்டும்.

நீ.சூர்ய பிரகாஷ்



வா...வா...நகரம்..!

★ திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தென்காசி என்ற ஊருக்கு அருகில் இருக்கும் ஒரு சிற்றூரின் பெயர் "வா வா நகரம்" என்பதாகும்.

– கல்லிடை குமணன்

ஆனந்த், தான் ஆடிய 12 போட்டிகளில் ஒன்றில் கூட தோற்கவில்லை. இருப்பினும், டிராவில் முடிந்த ஓரிரு போட்டிகளில் அவர் வெற்றி பெற்றிருக்கலாம். பரூவாவும் திப்ஸேயும் எதிர்பார்த்த அளவுக்கு ஆடினார்கள். ஆனால் ரவி, மற்றும் பிரசாத், சில முக்கிய ஆட்டங்களில் சரியாக ஆடாமல் தோற்றனர். பாபு சிறப்பாக ஆடியும் அவர் ஐந்தே ஆட்டங்களில்தான் ஆடினார். இவரை மேலும் இ ர ண் டு அல்லது மூன்று ஆட்டங்களிலாவது ஆட வைத்திருக்கலாம்.

அடுத்த, 31 வது ஒலிம்பியாட் 1994 ஆம் ஆண்டு கிரீஸ் நாட்டில் நடத்தப்பட இருக்கிறது. 1996 ஆம் ஆண்டு 32 வது ஒலிம்பியாட் போட்டிகளைக் கல்கத்தாவில் நடத்த இந்தியா FIDE யிடம் கோர உள்ளது.

என்னதான் 'செஸ்' போட்டிகள் நூறாண்டுகளுக்கு முன்னமே இந்தியாவில் தோன்றி ஆடப்பட்டாலும் விஸ்வநாதன் ஆனந்த் காலத்திற்கு வந்த பிறகே நம் தரம் உலகளவில் உயர்ந்தது. இவர் விரைவிலேயே உலக சாம்பியன் ஆகும் வாய்ப்பு உள்ளது என்று கேஸ்பாரோவே புகழ்ந்து கூறியுள்ளார். வர இருக்கும் ஒலிம்பியாட் போட்டிகளிலாவது நாம் முதல் இடங்களுக்குள் வந்து ஒரு பதக்கமாவது பெற வேண்டும்.

எந்த வால் எதற்கு போட்டி முடிவு


இந்தப் போட்டியிலும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் உற்சாகமாகக் கலந்து கொண்டிருக்கிறார்கள். 3வது படம் நரியின் வால். இதில்தான் ஏகப்பட்டவர்கள் தவறு செய்துவிட்டார்கள். அப்படியும் சரியான விடை எழுதியவர்கள் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்து விட்டது. வழக்கப்படி குலுக்கல் முறைதான் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க உதவியது.

ரூ. பத்து பரிசு பெறுவோர் :

1. எம். அம்மையப்பன், சிதம்பரம்
2. எஸ். கிறிஸ்டோபர், கீழச்சேரி
3. கே. விஜய் ஆண்டனி, கூனூர் - 2
4. ஏ. அன்வர் பாஷா, சீர்காழி
5. வே. தேவேந்திர போஸ், மிளிதேன் அஞ்சல், கோத்தகிரி
6. ஜே. குணாளன், திருநாவலூர்
7. ப. தெய்வானை, கோவை 41
8. கே. அறிவழகன், பள்ளிபாளையம் அஞ்சல்
9. பா. பொன்னன், பெ. குயிலம் அஞ்சல்
10. மா. திருவாசகன், பாகனேரி
11. வி. பூங்கோதை, மயிலம்
12. கி. ரேணுகா, சென்னை - 91
13. ஜி. பாலமுருகன், திட்டக்குடி
14. எஸ். வெங்கட்ராமன், மேலையூர் அஞ்சல்
15. மு. முகமது சிராஜ், கிளியனூர்

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுக்கள். கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் ஆயிரக்கணக்கான கோகுலம் வாசகர்கள் சார்பில் நன்றி!.

"**வா**ல்டர்-விக்டர் எனும் இரு சகோதரர்கள் டென் மார்க்கில் ஓர் மிகப் பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டலைக் கட்டி யுள்ளார்கள். உலகம் முழுவதிலிருந்து கொண்டு வரப் பட்ட பெயிண்ட்டிங்குகள், ஃபர்னீச்சர்கள் மற்றும் கலைப் பொருட்களைக் கொண்டு ஒவ்வொரு அறையையும் பூலோக சொர்க்கம் போல அலங்கரித்திருக்கிறார்கள். இங்கு போனவுடன் அறை கிடைத்து விடாது. பல மாதங்களுக்கு முன்பே ரிசர்வேஷன் செய்திருந்தால் தான் அறை கிடைக்கும்; போனதும் தங்க முடியும். இத்தனைக்கும் நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான டாலர்கள் இங்கு அறை வாடகையாக வசூலிக்கப் படுகிறது!



ஹோட்டல் முதலாளிகளான 'வால்டர்-விக்டர் சகோதரர்கள் தினமும் காலை வேளைகளில் இங்கு விஜயம் செய்கிறார்கள். தங்களது நேரடி கண்காணிப்பில் எல்லா ஏற்பாடுகளும் சரிவர செயல்படுகின்றனவா என்று பார்த்துக் கொள்கிறார்கள். சமீபத்தில் ஒருநாள் வழக்கம் போல இருவரும் ஹோட்டலைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்த போது... ஹோட்டல் மானேஜர் உட்பட சிப்பந்திகள் சற்றுப் பதட்டத்துடன் இருப்பதைக் காண நேர்ந்தது.

''என்ன ஆச்சு?'' என்று வினவினார் வால்டர்.

முதலில் கூறுவதற்குத் தயங்கிய மானேஜர் பின்னர் வேறு வழியின்றி... ''சார்! வி. ஐ. பி. க்கள் தங்கும் விசேஷ அறையில் ஒரு குருவி எங்களுடைய தொடர்ந்த கண்காணிப்பையும் மீறி எப்படியோ கூடு கட்டி விட்டது. கூடு கட்டியிருந்தாலும் பரவாயில்லை. முட்டையிட்டுக் குஞ்சும் பொரித்து விட்டது. இதோ ஒரு நொடியில் சுத்தம் செய்து விடுகிறோம்'' என்று தன் கீழுள்ள பணியாளர்களுக்கு உத்திர விடப் போனார்!

இதைக் கேட்ட இரு எஜமானர்களும் அவரைத் தடுத்து நிறுத்தி விட்டுக் குறிப்பிட்ட அறையை நோக்கி நடந்தனர். அறையினுள் இருந்த அழகு



கொஞ்சும் விலை மிக்க பீரோவின் மேல் அந்தக் குருவிக் கூடு இருந்தது. உயரமான ஸ்டூலின் மீது விக்டர் ஏறிப் பார்த்த பொழுது... இரு பச்சிளம் சிட்டுக் குருவிக் குஞ்சுகள் இன்னும் கண்களைக் கூடத் திறக்காத நிலையில் படுத்திருப்பது தெரிந்தது. இதற்குள் எங்கோ வெளியில் சென்றிருந்த தாய்க் குருவியும் உள்ளே வந்தது. அங்கிருந்த சூழ்நிலையைக் கவனித்து விட்டுத் தனது குஞ்சுகளுக்கு ஏதோ ஆபத்த வரப் போகிறது என நினைத்து ''கீச்... கீச்...'' எனக் கத்தியபடி அறையை வலம் வர ஆரம்பித்தது. இக் காட்சி யைக் கண்ட சகோதரர்கள் ஒருமித்த குரலில்... ''மானேஜர்.. இன்று முதல் இக் குருவிக் குடும்பம் நமது விருந் தாளிகள். இந்தக் கூட்டைப் பத்திர மாகப் பாதுகாத்து வாருங்கள். குஞ்சு களுக்கு சிறகு முளைத்து சுயமாகப் பறக்க ஆரம்பிக்கும் வரை எந்த முக்கி யஸ்தர் கேட்டாலும் சரி இந்த அறை யை வாடகைக்குத் தர வேண்டாம்'' என உத்தரவிட்டனர்!

''சார் வேண்டுமானால் இந்தக் கூட்டுடன் பீரோவையே வேண்டுமா னாலும் வேறு ஓர் இடத்திற்கு அப்புறப் படுத்தி பத்திரமாகப் பாதுகாக்கலாம். இல்லையேல் இலட்சக்கணக்கான டாலர் நஷ்டமாகும்... என்று மானேஜர் மெல்ல இழுத்தார். ''அதைப் பற்றிக் கவலை இல்லை. கூட்டை பீரோவுடன் அகற்றினால் குஞ்சுகள் பயந்து கத்தும். அம்மாக் குருவி பதைபதைக்கும். அவைகளுக்கு அந்த நிலையை நாம் ஏற்படுத்தித் தரக் கூடாது! அத்துடன் இன்னும் ஓர் உத்தரவு. தினமும் குரு விக்கும் அதன் குஞ்சுகளுக்கும் தானி யங்களை இரையாகப் போட்டு வையுங்கள்'' - எனக் கூறி விட்டு நகர்ந் தனர் முதலாளி சகோதரர்கள் இரு வரும்.

- ஏ. ஜே. ஜப்பார்

எங்கப்பா காய்க்காரர்

ஜமதக்னி

முரளிக்கு ஏக எரிச்சல். எல்லாருடைய அப்பாக்களும் நல்ல பெரிய பெரிய உத்தியோகத்தில் இருக்கும் போது நம் அப்பா மட்டும் இப்படி இருக்கிறாரே என்று.

ஆனால் முரளி எரிச்சல் பட வேண்டிய அவசியமே இல்லை. முரளியின் அப்பா காய்கறி வியாபாரம் செய்து வந்தார். விடியற்காலையில் எழுந்து போய் கறிகாய் வாங்கி வந்து அவருடைய கடையில் வியாபாரம் செய்வார். முரளியைப் பொறுத்த மட்டில் அது தவறான - அகௌரவமான விஷயம். ''வியாபாரம்தான் செய்கிறாரே... ஒரு நல்ல கௌரவமான வியாபாரமாக - வீடியோ கடை, ரெடிமேட் துணிக்கடை மாதிரி ஏதாவது செய்யக் கூடாதா?'' என்று அம்மாவிடம் சண்டை போடுவான்.

''முரளி, எந்தத் தொழிலும் தாழ்வில்லை.... உண்மையான உழைப்பு இருக்க வேண்டும். வியாபாரத்தில் நேர்மை இருக்க வேண்டும். அதுதான் அவசியம்'' என்பாள் அம்மா. ஆனால் முரளி தன் தவறான எண்ணத்தில் இருந்து மாறவேயில்லை.

தன் பள்ளித் தோழர்களிடம் கூட முரளி தன் அப்பா கறிகாய் வியாபாரம் செய்கிறார் என்று சொல்ல மாட்டான். வாயில் வந்ததைப் புளுகுவான். பெரிய ஆபீஸர் என்பான். கம்பெனி மேனேஜர் என்பான். எதையாவது சொல்லுவான். அவன் பள்ளியும் வீடும் வெவ்வேறு இடத்தில் இருந்ததால் அவனுக்கு அப்படிப் புளுகுவது எளிதாயிற்று. மாணவர்களும் அவன் கூறியதை நம்பினர்.

முரளியின் தந்தைக்கு அவன் போக்கு வருத்தத்தைத் தந்தது. அன்று விடுமுறை நாள். அவருடைய உடல் நலம் சரியில்லை. ''முரளி பள்ளி விடுமுறைதானே? என்னுடன் கடைக்கு வா... கடையைப் பார்த்துக்கொள். நான் டாக்டரிடம் போயிட்டு வரேன். அந்த நேரத்தில் கடையை மூட வேண்டாம்'' என்றார்.

''அட போப்பா... நான் வரவே மாட்டேன். என் நண்பன் எவனாவது பார்த்தால், என் மானம் போகும்'' என்றான் முரளி.

''இதில் மானம் போவதற்கு என்ன இருக்கிறது முரளி? உங்கப்பா என்ன ஊரை ஏமாற்றியா பிழைக்கிறார்? உங்கப்பாவுக்கு நீ உதவாமல் வேறு யார் உதவுவார்கள்...?'' என்று அவன் தாய் அவனைக் கடிந்து கொண்டாள். என்ன சொல்லி என்ன பயன்? முரளி அசையவில்லை.

மகனின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக, தனது அளவுக்கு மீறி, பணக்காரர்களின் பிள்ளைகள் படிக்கும் உயர்ந்த பள்ளியில் சேர்த்தது எவ்வளவு பெரிய தவறு

என்பதை உணர்ந்து பெற்றோர் மனம் நொந்தனர்.

நாட்கள் ஓடின. ஆண்டுத் தேர்வுகள் முடிந்து விடுமுறை ஆரம்பமாயிற்று. முரளி காலை முதல் மாலை வரை நண்பர்களுடன் சுற்றினான். தப்பித் தவறிக் கூட அப்பாவின் கடைக்குப் போகவில்லை. அவரும் தன் மகனின் மனநிலை அறிந்து ஒருமுறை கூட அவனைத் தேடிக் கொண்டு பள்ளிக்குச் செல்லவில்லை. பெற்றோர் தினத்தன்று கூட அவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை.

விடுமுறை முடிந்து பள்ளி திறந்தது. வருடம் முழுவதும் பாடுபட்டுப் படித்த மாணவர்கள், தேர்வுகளில் நிறைய மதிப்பெண்கள் வாங்கி, அடுத்த வகுப் புக்குச் சென்றார்கள்.... ஒழுங்காகப் படிக்காத மாணவர்கள் அதே வகுப்பில் தங்கினர்.

முரளி தேர்ச்சி பெற்றுவிட்டான். அவன் வகுப்பில், வேறு பள்ளியிலிருந்து சில மாணவர்கள் புதிதாகச் சேர்ந்திருந்தனர். அதில் ஒருவன் ரவி. விரைவில் ரவியும் முரளியும் நண்பர்களாகி விட்டனர்.

''முரளி உங்கப்பா எங்கே வேலை செய்யறார்?'' எதிர்பாராத விதமாக ரவி, முரளியைக் கேட்டான்.

''ம்... எங்க அப்பாவா... ம்... பிஸினஸ்'' - திக்கித் திணறினான் முரளி.

''என்ன பிஸினஸ்?'' - ரவி விடவில்லை.

''தெரியாது ரவி. காலையில் கோட் சூட் போட்டுக்கிட்டு ஸ்கூட்டர்ல போயிடுவார்'' - முரளி புளுகினான். பின் ''உங்கப்பா'' என்ன செய்யறார்?'' என்று கேட்டான்.

''பால் வியாபாரம். அப்பாவுக்கு உதவியா நான்கூட அடிக்கடி டிப்போவில் இருப்பேன். கொட்டகையைக் கழுவுவேன். அப்பாதான் 'படிடா போ'ன்னு விரட்டுவார்.'' - ரவி கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் சொன்



னான். முரளிக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'ரவி இவ்வளவு துணிவாகச் சொல்கிறானே! நாம்தான் பயப்படுகிறோம்' என்று நினைத்துக் கொண்டான்.


நாட்கள் ஓடின. ரவி தான் தந்தைக்கு உதவியாக பால் கறந்ததையும் அம்மா வுக்கு உதவியாக வரட்டி தட்டியதையும் பெருமையாக எந்த விதக் கூச்சமும் இன்றிச் சொல்லுவான். முரளி பேசாமல் கேட்டுக் கொண்டிருப்பான். அவனுக்கு அதிசயமாக இருக்கும்.

ஒரு நாள்... வகுப்பாசிரியர் மாணவர்களை ''எனக்குப் பிடித்த மனிதர்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதச் சொன்னார். வகுப்பாசிரியர், தலைமை ஆசிரியர், கிரிக்கெட் வீரர், நாட்டுத் தலைவர்கள் என்று அவரவருக்குப் பிடித்தவர்களைப் பற்றி மாணவர்கள் எழுதினார்கள். முரளி சிறிது நேரம் யோசித்தான். பிறகு நேருவைப் பற்றி எழுதினான்.

ஆசிரியர் எல்லாருடைய கட்டுரைகளையும் படித்தார். பின் ''ரவி இங்கே வா'' என்றார். ரவி எழுந்து வந்தான்... ''மாணவர்களே! நீங்கள் அனைவரும் உற்சாகத்துடன் நன்றாக எழுதியிருக்கிறீர்கள். காந்தியைப் பற்றி, நேருவைப் பற்றி - ஏன் என்னைப் பற்றிக் கூடச் சிலர் எழுதியிருக்கிறார்கள். ஆனால், ரவி யாரைப் பற்றி எழுதியிருக்கிறான் தெரியுமா? தன் தந்தையைப் பற்றி எழுதியிருக்கிறான். அதுவும் மிகச் சிறப்பாக அவன் எழுதியதில் சில வரிகள் படிக்கிறேன்'' என்று தொடங்கினார்.

''பால் வியாபாரம் செய்யும் என் தந்தையின் உள்ளமும் பால்தான். நான் வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதற்காக அதிகாலை முதல் மாலை வரை உழைக்கும் என் தந்தையை எனக்குப் பிடிக்கும். அவர் படித்தவரல்ல. வகுப்பாசிரியர் போல; பெரிய மனிதர் அல்ல நேரு போல; அழகானவரல்ல சினிமா நடிகன் போல... ஆனாலும் எனக்காக - என் முன்னேற்றத்திற்காக நேர்மையாகத் தொழில் செய்யும் என் தந்தை, என் கண்ணுக்கு அழகானவர், படித்தவர், பெரியவர். அவர் உண்மையான உழைப்பாளி என்பதைப் பற்றி எனக்கு அளவில்லாத பெருமை'' - ஆசிரியர் நிறுத்தினார். வகுப்பில் கரவொலி. ''ரவி உன்னைப் பெற்றவர் என்ற சிறப்பு வேறு இப்பொழுது அவருக்கு'' என்று தொடர்ந்தார் ஆசிரியர்.... ''ரவியின் தந்தை கொடுத்து வைத்தவர். உங்கள் எல்லோர் தந்தைக்கும் இப்படிப்பட்ட ஒரு பெருமை மிக்க நிலையை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும்'' என்றார்.

முரளிக்குத் தன் அறியாமை புரிந்தது. 'செய்யும் தொழிலும் உண்மை உழைப்புமே தெய்வம் என்ற உண்மையை உணர்ந்து கொண்டதால் இனி முரளி 'எங்கப்பா காய்க்காரர்' என்று உண்மையைக் கூறத் தயங்க மாட்டான். 'கூடவே அவரைப் பற்றி நான் பெருமைப் படுகிறேன் என்றும் சொல்லுவான்.




''அப்பா! அப்பா! நான் சைக்கிள் பழகணும்.''

''டேய் நீ சிறிசா இருக்கே. அதனால ஓட்ட முடியாது உன்னால்.''

''அப்படின்னா பஸ் டிரைவர் என்ன பஸ் அளவா பெரிசா இருக்கார்....?''

- வி.ஆர். வெங்கடேஷ்,
மதுரை - 9.



பீரங்கியாம் பீரங்கி!

பீரங்கியை ஆங்கிலத்தில் கேனன் (Cannon) என்பார்கள். துப்பாக்கியின் பெரிய வடிவம்தான் பீரங்கி.

பீரங்கியை முதன் முதலாக யார் பயன்படுத்தினார்கள் என்பதில் இன்னமும் குழப்பம் இருக்கிறது. வெடி மருந்தின் தாயகமான சீனாதான் பீரங்கியை முதலில் வெடித்தது என்கிறார்கள் சீனர்கள். இரும்புப் பட்டைகள் தயாரிப்பதில் உலகப் புகழ்பெற்ற பிரான்க நாட்டினர், தாங்களே முதல் பீரங்கியைத் தயாரித்ததாகக் கூறுகின்றனர்.

எப்படி இருந்தாலும், இங்கிலாந்து மன்னர் மூன்றாவது எட்வர்டு, ஸ்காட்லாந்துடன் நடத்திய போரில் பீரங்கியைப் பயன்படுத்தியிருக்கிறார். இந்தப் போர் நடந்த ஆண்டு 1327.

பிரெஞ்சுக்காரர்கள் பீரங்கிகளை 1338 இல் தயாரிக்கத் தொடங்கி விட்டனர். பீரங்கிகளைக் கொண்ட தனிப் படை ஒன்றை (Artillary) 1350 இல் தங்கள் இராணுவப் பிரிவில் அமைத்துக் கொண்டனர். உலகின் முதல் பீரங்கிப் படை இதுவே.

முதலில் உருவான பீரங்கிகள் வார்க்கப்படாதவை. கெட்டியான இரும்புப் பட்டைகளைக் குழாய் வடிவில் அமைத்து, அவற்றைச் சுற்றி இரும்புப் பூண்கள் போட்டு உறுதியாக்கிப் பீரங்கி செய்தனர். இதில் வெடிமருந்துக்குத் தீயிடும் பகுதி வாய்தான். இதைப் பெரிய கனமான இரும்பு மேடையில் வைத்தே பயன்படுத்த முடிந்தது. இத்தகைய ''மோன்ஸ் மெக்'' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பீரங்கி ஒன்று இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் 'டவர் ஆப் லண்டன்' கோபுரத்தில் அமைக்கப்பட்டு இன்றும் காட்சியாக விடப்பட்டுள்ளது.


இரும்பு வளையங்கள் செய்து அவற்றை இணைத்தும் பீரங்கிகள் செய்யப்பட்டன. பீரங்கியை வார்த்து அமைக்கும் முறையும் அறிமுகமானது. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் பீரங்கி தயாரித்து வடிவமைக்கும் முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.


இந்திய மன்னர்கள் பட்டத்து யானைக்குப் பெயரிட்டது போல் தங்கள் பீரங்கிகளுக்கும் பெயரிட்டுப் பெருமைப்படுத்தினர். பீரங்கிகள் மன்னர்களின் கலை ஆர்வத்திற்கு ஏற்ப, வேலைப்பாடுகள் மிளிர, சிறப்புடன் தயாரிக்கப்பட்டன.


திப்புசுல்தானின் புகழ்மிக்க வெண்கலப் பீரங்கிகள், பிரான்ஸ் நாட்டில் வேலைப்பாடுகளுடன் தயாரிக்கப்பட்டன. இதற்கு சிங்க முகவாய், பூ இதழ் பதித்த உடல்! பளபளப்பும் கம்பீரமும் குறையாத நிலையில் இன்னமும் இதை சென்னை அருங்காட்சியகத்தில் காணலாம்.


நமது நாட்டின் பீஜாபூர், குல்பர்க்கா ஆகிய நகரங்களில் பீரங்கி தயாரிக்கும் கலை சிறப்பாக நடந்து வந்துள்ளது. குல்பர்க்காவின் தேனிரும்பு பீரங்கியின் பெயர் ''ஜஹான் குஷா''. உலகத்தையே வென்றவன் என்பது பொருள்! பீஜாபூர் பீரங்கியின் பெயர் ''லண்டா கசாப்''. குள்ளமான கசாப்புக்காரன் என்பது பொருள்! இங்கு தயாரானவை சற்றும் துரு ஏறாதவை.

முதலில் பீரங்கிகளைச் செய்ய முழுக்க முழுக்க இரும்பே பயன்















பட்டது. எனினும், பிற்காலத்தில் இதற்கென தனிக் கலவை உலோகம் கன் மெட்டல் என்பது கண்டுபிடிக்கப் பட்டு, அதிலேயே பீரங்கிகள் செய்யத் தொடங்கினர்.

பீரங்கி கண்டுபிடிக்கப் பட்ட பிறகு தகர்க்க இயலாதவை எனக் கருதப்பட்ட கோட்டைகள் பெருமை இழக்கத் தொடங்கின. பின்புறம் மருந் திட்டு வெடிக்கக் கூடியவை, வண்டி களில் வைத்துத் தள்ளிக் கொண்டு செல் லக் கூடியவை, சக்கரங்கள் அமைந்து எளிதில் உருட்டிக் கொண்டு போகக் கூடியவை, எந்தப் பக்கமும் திருப்பிப் பயன்படுத்தக் கூடியவை, டாங்கிகளில் அமைத்து உள்ளிருந்தபடி எப்பக்கமும் திருப்பிச் சுடக் கூடியவை, தோளில் சுமந்து எப்பக்கமும் திருப்பி எளிதில் சுடக் கூடியவை, இடைவிடாது தொடர்ந்து சுடக் கூடியவை, பதுங்கு குழிகளில் இருந்து சுடக் கூடியவை, விமானங்களில் இருந்து சுடக் கூடியவை, பீரங்கித் தாங்கிக் கப்பல்கள், என்று பீரங்கி வடிவிலும், பயன்படுத்தும் முறையிலும் படுவேகமாக முன்னேறியுள்ளது. இன்னமும் புதிய புதிய முறைகள் தொடர்ந்து கண்டுபிடிக்கப் பட்டு வருகின்றன. இன்றைய நவீன கண்டுபிடிப்புகளில் கம்ப்யூட்டர் மூலம் இயங்கும் பீரங்கி முக்கிய இடத்தை வகிக்கிறது. இதில் சுட வேண்டிய திசை, வேகம் இரண்டும் துல்லியமாக உள்ளன. இதற்கு ரிமோட் கண்ட்ரோல் உண்டு. எந்தத் திசையில் எத்தனாவது மைலில் உள்ள இலக்கைத் தாக்க வேண்டும் என்று இதற்கு உத்தரவிட்டால் போதும். செய்துவிடும்! இன்று நம் நாட்டில் பரவலாகப் பேசப்படும் போஃபோர்ஸ் பீரங்கி இந்த வகையைச் சார்ந்ததுதான்.

எவ்வளவுதான் ரசாயன, அணு ஆயுதப் படைகள் கண்டுபிடிக்கப்பட்டாலும், பீரங்கிப் படையின் முக்கியத்துவம் என்றும் குறையாது.

அட்டையில் பர்மா நாட்டு
பீரங்கி முன் : ஸ்ரீராம், ரேணு.
வண்ணப்படம் : யோகா



★ திரு ரா. பொன் ராசன் அவர்களின் 'வெற்றி கொள்' கவிதை சிறுவர்க்கு மட்டுமல்லாது இளைஞர் கட்கும் ஏற்றம் தரத் தக்கது. இத்தகைய கவிதைகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன். டாக்டர் திரு கு. கணேசன் அவர்களின் பதில்கள் தெளிவாகவும், சுருக்கமாகவும் உள்ளன. அவர்தம் பணி மேலும் வளர வாழ்த்துகிறேன்.

சே. நாச்சியப்பன், பி. அழகாபுரி.

ஹி... ஹி.... ஹி...

★ ஹிஹிஹி... ஹிஹிஹி... ஊசிக்கு ஒலித்த ராஜா. சின்ன பாபு அவர்களின் சிரிப்புக் கதையைப் படித்ததும் வந்த சிரிப்பு.

எம்.கே. வேங்கவேல், சேலம்.

★ மரத்தை வெட்டலாகாது என்பதையும், அதன் அவசியத்தையும் உணரச் செய்தது தம்பி சீனிவாசனின் 'மரம் தந்த வரம்!' சிறுகதை.

ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1.

★ சிறுவன் விக்னேஷின் வித்தியாசமான ஜப்பான் நாட்டு அனுபவம் எங்களுக்கும் அந்த ஆர்வத்தை ஏற்படுத்திவிட்டது. நன்றி. டாக்டர் பூவண்ணன் அசத்துகிறார். பரதனுக்கு ஃபைட் போடத் தெரியும் விஷயத்தை அறிந்ததும் எங்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை சார்.

அ. நிர்மலா, மொரப்பூர்.

★ 'கேளுங்கள் சொல்லப்படும்' பகுதியில் 'கோன் ஐஸ் கிரீமை' அறிமுகப்படுத்தியது யார் என்ற கேள்விக்கு, தாங்கள் அளித்த பதில் சரி அல்ல. 'கோன் ஐஸ் கிரீம்', எர்னஸ்ட். ஏ. ஹாம்வி என்ற அமெரிக்கரால், 1904 - ஆம் ஆண்டு, செயின்ட் லூயிஸ் (St. Louis) கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது. (ஆதாரம் : Children's Treasury of Records and Facts).

இரணியல் ராஜா, தஞ்சாவூர்.

நீங்கள் கூறுவது அதற்கு முன் வணிக ரீதியில் அறிமுகமானதை. முதன் முதலாக அறிமுகமானதை அல்ல — ஆர்.

★ கோகுலம் வீட்டுக்கு வந்தாச்சு - எங்கள் குடும்பம் முழுக்க மலர்ந்தாச்சு. ஏகப்பட்ட செய்திகளால் இதயம், மூளை நிறைஞ்சாச்சு!

ரா. பொன்ராசன், முத்துராமலிங்கபுரம்.

★ "பதினைந்து" படக்கதையை வெகுவாக ரசித்தேன். நரி பதினைந்து என்ற சொல்ல அதற்கு புலி எடுத்த ஓட்டத்தை கண்டதும் அதனால் எழுந்த சிரிப்பு அடங்கவே வெகு நேரம் ஆயிற்று.

பி.அ. முஸ்தபாகமால், தக்கோலம்.

★ 'ரேவதி' அவர்களின் "முள்ளம் பன்றி எப்படித் தாக்கும்?" அறிவியல் தொடர் அருமை. முள்ளம் பன்றியைப் பற்றிய அனைத்துச் செய்திகளும், மெய்சிலிர்க்க வைத்தன.

ப. கணேஷ், சென்னை - 57.

★ ஒலிம்பிக்சைப் பற்றிய அறிவுப்பூர்வமான விஷயங்கள் படிக்க.. படிக்க... ஐஸ்கிரீமின் சுவையைப் போல சுவாரஸ்யமாக இருந்தன.

அ.தவ்சாத், மொரப்பூர்.

★ துரத்தி வந்த கரடி கதையை விறுவிறுப்பாக கொண்டு சென்று திடீரென்று இவையெல்லாம் கனவுதான் என்று சொல்லி போகக்கென்று எங்களை ஏமாற்றி விட்டார் வேணு சீனிவாசன் அவர்கள்.

மு.திருநாவுக்கரசு, மொரப்பூர்.

★ பிருந்தாவன கவியரங்கம், மாணவ மணிகளை மட்டும் என்ன, எங்களையும் ஒரு விநாடி பிரமிக்க வைத்தது!

புலவர் எஸ்.கே. மூர்த்தி, கும்பகோணம்.

★ மாவீரன் மேகநாதன் படக்கதை சிறப்பாக இருந்தது. இதுவரை நாங்கள் இந்திரஜித்தின் கதையைப் படித்ததேயில்லை. கோகுலம்தான் முதலில் வெளியிட்டது.

ஜெ. நெடுமாறன், ஜெ. அனிதா,
நெல்லூர்ப்பேட்டை.

★ ஆழியின் "விமான விசித்திரங்கள்" சித்திர செய்திகளை படித்தபோது, விமானத்திலேயே பறந்த திரில்லிங் ஏற்பட்டது. பாராட்டுக்கள்.

ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

